# 6th Std சமூக அறிவியல் Notes

## Tnpsc Syllabus Lessons




www.winmeen.com


## 6th Social Science Lesson 1 Notes in Tamil

### 1. வரலாறு என்றால் என்ன?

1. வரலாறு என்ற சொல் எதிலிருந்து பெறப்பட்டது?
   கிரேக்கச் சொல்லான **'இஸ்டோரியா'**
2. 'இஸ்டோரியா' என்பதன் பொருள் என்ன?
   **விசாரிப்பதன் மூலம் கற்றல்**
3. வரலாற்றுத் தொடக்க காலம் என்றால் என்ன?
   வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடைப்பட்ட காலம்
4. 'தம்மா' என்பது பிராகிருத சொல். இது சமஸ்கிருதத்தில் **'தர்மா'** எனப்படுகிறது. இதன் பொருள் **'அறநெறி'** ஆகும்.
5. யார் காலத்தில் புத்த மதம் ஆசியாவில் பரவியது?
   **அசோகர்**
6. உலகிலேயே முதன்முதலாக விலங்குகளுக்கு தனியே மருத்துவமனை அமைத்துத் தந்தவர் யார்?
   **அசோகர்**
7. அசோகர் குறித்த வரலாற்று ஆவணங்களை சேகரித்துத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் யார்?
   **சார்லஸ் ஆலன்.**
   நூலின் பெயர்: **The Search for the India's Lost Emperor.**
8. வரலாற்றில் காலம் ஆண்டுகளில் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
   **பொ.ஆ.மு. / பொ.ஆ. – (பொது ஆண்டுக்கு முன் / பொது ஆண்டு)**
9. வரலாறு என்பது என்ன?
   வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு.
10. நாணயம் அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறை பற்றிய படிப்பு எது?
    **நாணயவியல் - Numismatics**
11. கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை பற்றியப் படிப்பு எது?
    **கல்வெட்டியல் - Epigraphy**
12. பழங்கால மனிதர்கள் தங்கள் பாதுகாப்புக்காகவும் வேட்டைக்காகவும் பழக்கப்படுத்திய விலங்கு எது?
    **நாய்**
13. அமைதி, அறம் ஆகியவற்றைப் பின்பற்றியவர் யார்?
    **பேரரசர் அசோகர்**
14. தொல்பொருள் ஆதாரங்கள் யாவை?





15. இலக்கிய ஆதாரங்கள் யாவை?




16. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்ள உதவும் பிற சான்றுகள் எவை?

மலைப்பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் வரையப்படுள்ள பாறை ஓவியங்களிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

17. கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?



வ
மே
கி
தெ
புர்ஜஹோம்
மெஹர்கர்
கோல்டிவா
மாகரா
சிரண்ட்
டவோஜலி ஹேடிங்
லோத்தல்
பிம்பேட்கா
ஹன்சாகி பள்ளத்தாக்கு
ஹல்லூர்
பிரம்மகிரி
பையம்பள்ளி
அத்திரம்பாக்கம்
ஆதிச்சநல்லூர்
பழைய கற்காலம்
புதிய கற்காலம்
இரும்புக் காலம்
வெண்கலக் காலம்

# 6th Social Science Lesson 2 Notes in Tamil

## 2. மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

1. **மனிதர்கள் பரிணாம வளர்ச்சி அடைந்த கதையை எவற்றின் உதவியுடன் பயில முடியும்?**

   தொல்லியல், மானுடவியல்

2. **வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றிப் படிக்கும் பிரிவு எது?**

   தொல்லியல்

3. **தொல்லியல் ஆய்விற்கு முக்கிய ஆதாரமாக உதவும் பொருட்கள் யாவை?**

   அகழ்வாராய்ச்சிப் பொருட்கள்

4. **மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி படிக்கும் பிரிவு எது?**

   மானுடவியல் (anthropology)

5. **மானுடவியல் எந்த வார்த்தையிலிருந்து பெறப்பட்டது?**

   இரண்டு கிரேக்க வார்த்தை. Anthropos – மனிதன், logos – எண்ணங்கள் அல்லது காரணம்

6. **மானுடவியலாளர்கள் எங்கு கிடைத்த சில மனிதக் காலடித்தடங்கலை உலகின் பார்வைக்கு கொண்டு வந்தார்கள்?**

   கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள தான்சானியா.

7. **மனித பரிணாம வளர்ச்சி நிலைகள் யாவை?**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆஸ்ட்ரலோபிதிகஸ் | 4ல் இருந்து 2 மில்லியன் ஆண்டுகளுக்குள் | மனித மற்றும் குரங்கின் பண்புகளுடன் காணப்பட்டான். நடக்கக் கற்றுக்கொண்டான். |
| 2 | ஹோமோ ஹேபிலிஸ் | 2.3ல் இருந்து 1.4 மில்லியன் ஆண்டுகளுக்குள் | இறுகப்பற்றுவதற்கு வசதியாகப் பெரிய கால் விரல்களைப் பெற்றிருந்தான். முன்பக்கம் நீட்டிக் கொண்டிருந்த தாடை நீட்சி சற்று குறைந்து காணப்பட்டான் கருவிகளை உருவாக்கினான். |
| 3 | ஹோமோ எரக்டஸ் | சுமார் 1.8 மில்லியன் ஆண்டுகளுக்குமுன் | நேராக நிமிர்ந்த மனிதன் நெருப்பின் பயனை அறிந்திருந்தான். |
| 4 | நியாண்டர்தால் | 130000 முதல் 40000 ஆண்டுகளுக்குமுன் | ஆப்ரிக்கர்களிடம் இருந்து வேறுபட்டவன் கரடு முரடான |

| | | | |
|---|---|---|---|
| | | | கருவிகளை கொண்டிருந்தான் வேட்டையாடும் திறனில் பின்தங்கியிருந்தான். இறந்தவர்களை புதைத்தனட். சான்றுகள் ஜெர்மனியில் கிடைக்கப்பெற்றுள்ளன. |
| 5 | ஹோமோ சேப்பியன்ஸ் | 300000 ஆண்டுகளுக்கு முன் | நவீன மனிதன் வேட்டையாடும் மற்றும் உணவு சேகரிக்கும் சமூகமாக வாழ்ந்தான் கரடு முரடான கருவிகளை பயன்படுத்தினான். ஆப்பிரிக்காவிலிருந்து இடம் பெயர்ந்து ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் குடியேறினான். |
| 6 | குரோமேக்னான்ஸ் | கிழக்கு ஆப்பிரிக்காவில் 50000 ஆண்டுகளுக்கு முன் மேற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஐரோப்பாவில் 40000 ஆண்டுகளுக்கு முன் | மனித வாழ்வின் தொடக்கம் கற்கருவிகளுடன் எலும்பாலான கருவிகளையும் பயன்படுத்தினான். குத்தீட்டியும் நெம்புகோல் வகை கருவிகளையும் பயன்படுத்தினான். |

**8. மனிதர்களும் அவர்களது வாழ்விடங்களும்**

| | | |
|---|---|---|
| 1 | ஆஸ்ட்ரலோபிதிகஸ் | கிழக்கு ஆப்பிரிக்கா |
| 2 | ஹோமோ ஹெபிலிஸ் | தென் ஆப்பிரிக்கா |
| 3 | ஹோமோ எரக்டஸ் | ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா |
| 4 | நியாண்டர்தால் | யூரோசியா (ஐரோப்பா மற்றும் ஆசியா) |
| 5 | குரோ-மக்னான்ஸ் | பிரான்ஸ் |
| 6 | பீகிங் மனிதன் | சீனா |
| 7 | ஹோமோ சேப்பியன்ஸ் | ஆப்பிரிக்கா |
| 8 | ஹைடல்பர்க் மனிதன் | லண்டன் |

**9. ஆதிகாலத்தில் மனிதர்களின் முதன்மையான தொழில் எது?**

வேட்டையாடுதல்

**10. ஆதிகாலத்தில் மனிதர்கள் நெருப்பை உருவாக்க எதைப் பயன்படுத்தினார்கள்?**

சிக்கிமுக்கிக் கல்

**11. பண்டமாற்று முறை என்றால் என்ன?**


கூடுதல் தானியங்களைப் பிற குழுக்களிடம் பரிமாற்றம் செய்து, தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறை பண்டமாற்று முறை என அழைக்கப்படுகிறது.

12. 1850 ஆண்டு - மாடுகள் அல்லது கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட வண்டிகளைச் சாலையில் தென்பட்டன.

13. 8000 ஆண்டுகளுக்கு முன் – இக்காலமக்கள் பயிர் வளர்ப்பதிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

14. 18,000 ஆண்டுகளுக்கு முன் - இக்கால மக்கள் குகையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கல்லிலும், எலும்பிலும் செய்தக் கருவிகளை வேட்டைக்குப் பயன்படுத்தினார்கள்.

**15. மனித பரிணாம வளர்ச்சி நிலைகள்**




**16. வேட்டையாடும் முறைகள் யாவை?**

1) குழுவாகச் சென்று வேட்டையாடுதல்
2) குழி தோண்டி, அதில் விலங்குகளைச் சிக்க வைத்து வேட்டையாடுதல்

**17. பண்டைய மக்கள் எவற்றை வேட்டையாடினர்?**

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் அலைந்து திரிபவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் குழுக்களாக மரம், குகை அல்லது மலையடிவாரத்தில் தங்கினார்கள். ஒவ்வொரு குழுவிலும் 30 முதல் 40 பேர் இருந்தார்கள். அவர்கள் உணவைத் தேடி நகர்ந்து கொண்டே இருந்தார்கள். பன்றி, மான், காட்டெருமை, காண்டாமிருகம், யானை, கரடி போன்ற விலங்குகளை வேட்டையாடினார்கள். புலி போன்ற விலங்குகளால் கொல்லப்பட்ட விலங்குகளின் இறைச்சியையும் பயன்படுத்தினார்கள். மீன் பிடிக்கவும் கற்றுக்கொண்டார்கள்.

**18. பண்டைய மக்கள் எப்படி உணவைச் சேமித்தார்கள்?**

தேன் எடுப்பது , பழம் பறிப்பது, கிழங்குகளை அகழ்ந்தெடுப்பது ஆகியவற்றிலும் ஈடுபட்டார்கள். காடுகளிலிருந்து தானியங்களைச் சேகரித்தார்கள். ஓரிடத்தில் உணவுப்பொருட்கள் கிடைப்பது நின்றுவிட்டால், அவர்கள் வேறொரு இடத்திற்குச் சென்றார்கள்.

**19. பண்டைய மக்கள் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள எவற்றை பயன்படுத்தினார்கள்?**

பதப்படுத்தப்பட்ட விலங்குகளின் தோல்கள், மரங்களின் கிளைகள், இலைகள் ஆகியவற்றை அவர்கள் அணிந்தார்கள்.

**20. ஆதிகாலத்தில் மனிதன் எதற்காக கூரான ஆயுதங்களை பயன்படுத்தினர்?**

ஆதிகாலத்தில் வேட்டையாடுவதுதான் மனிதர்களின் முதன்மையான தொழில். ஒரு குச்சி அல்லது கல்லால் ஒரு பெரிய விலங்கைக் கொல்வது அவர்களுக்குக் கடினமாக இருந்தது. எனவே கூரான ஆயுதங்களைப் பயன்படுத்த முடிவெடுத்தார்கள்.

**21. முன்னோர்கள் கோடாரிகளை எவ்வாறு பயன்படுத்தினார்கள்?**

முன்னோர்கள் கோடாரிகளை மரம் வெட்டவும், மரக்கிளைகளை நீக்கவும், குழிதோண்டவும், விலங்களை வேட்டையாடவும், விலங்குகளின் தோலை உரிக்கவும் பயன்படுத்தினார்கள்.

**22. பண்டைய மக்கள் கற்கருவிகளை உருவாக்கியதற்கு அடுத்த கட்டம் என்ன?**

நெருப்பின் பயன்பாட்டைக் கண்டறிந்தார்கள்.

23. தீப்பெட்டியைப் பயன்படுத்தாமல் நெருப்பை உருவாக்கும் பழக்கம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் இன்றைக்கும் உள்ளது.

**24. சக்கரம் கண்டுபிடிக்கப்படுதல்**

சக்கர உருவாக்கம் மனித வரலாற்றில் ஒரு முதல்தரமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது. மலைகளிலிருந்து கற்கள் உருண்டு வருவதைப் பார்த்தபோது, சக்கரத்தை உருவாக்குவதற்கான சிந்தனையை பெற்றிருக்கலாம்.

**25. பானை செய்தல்**

மனிதர்கள் களிமண்ணில் பானை செய்யக் கற்றுக்கொண்டார்கள். சக்கரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு பானை செய்வதை எளிதாக்கியது. அவர்கள் பானையை நெருப்பில் சுட்டு, அதற்கு உறுதியைக்

கொடுத்தார்கள். பானைகள் மீது பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்டு அழகூட்டப்பட்டன. வண்ணச் சாயங்கள் தாவரங்களின் வேர்கள், இலைகள், மரப்பட்டைகள் ஆகியவற்றின் சாற்றிலிருந்து தயாரிக்கப்பட்டன.

**26. முந்தைய காலத்தில் மனிதர்கள் பெரும்பாலும் எவற்றின் ஓவியங்கள் வரையப்பட்டன?**

விலங்குகள்

**27. தமிழ்நாட்டில் உள்ள தொல் பழங்கால பாறை ஓவியங்கள் எங்குள்ளது?**

1) கீழ்வலை - விழுப்புரம்
2) உசிலம்பட்டி - மதுரை
3) குமுதிபதி - கோவை
4) மாவடைப்பு - கோவை
5) பொறைவரை - கரிக்கையூர், நீலகிரி

**28. மொழி தோன்றுவதற்கு முன்னால் மனிதர்கள் எதன்மூலம் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினார்கள்?**

ஒலியாகவும் அசைவுகளாகவும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினார்கள். பாறை ஓவியங்களில் அவற்றைப் பதிவு செய்தார்கள்.

**29. கடந்த காலம் குறித்த செய்திகளைத் தெரிவிப்பவை எவை?**

பாறை ஓவியங்கள்

**30. நம் முன்னோர்கள் குறித்துப் பல கதைகளை நமக்குக் கூறுபவை எவை?**

பாறை மற்றும் குகை ஓவியங்கள்

**31.** அலைந்து திரியும் நிலையிலிருந்து ஓரிடத்தில் நிலைத்து வாழும் நிலையை அடைதல் - உலகின் முதல் விவசாயிகள்

**32. நம் முன்னோர்களின் பயிர் வளர்ப்பு தொடர்பான அறிவு:**

a) "ஒற்றை விதையிலிருந்து முளைக்கும் செடி வளர்ந்து பல மடங்குகள் காய்களையும் கனிகளைடும் வழங்கும்" என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.
b) ஆற்றங்கரை நிலங்களில் விழுந்த விதைகள் எளிதாக முளை விட்டதையும் மனிதர்கள் கண்டார்கள்.
c) நீர் நிறைந்த பகுதிகளில் செடிகள் விரைவாக வளரும் என்பது அவர்களுக்குப் பிரிந்தது.
d) வண்டல் மண்ணுக்குரிய நிலம் மற்றப் பகுதிகளை விட , செடி வளர்வதற்கு ஏற்றதாக இருந்ததைக் கண்டார்கள்.


**33. மனிதர்களின் வாழ்வில் முக்கியமான பகுதி எது?**

விலங்குகளை வளர்ப்பது

## 6th Social Science Lesson 3 Notes in Tamil

## 3. சிந்து வெளி நாகரிகம்

**1. நதிக்கரை நாகரிகங்கள் என்பவை எவை?**




**2. ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை முதன்முதலில் விவரித்தவர் யார்?**

சார்லஸ் மேசன்

**3. 1856 – லாகூரில் இருந்து கராச்சிக்கு இரயில் பாதை அமைத்தல்**

**4. 1920 – தொல்பொருள் ஆய்வாளர்கள் ஹரப்பா மற்றும் மொஹஞ்ச-தாரோ நகரங்களை அகழாய்வு செய்தல்**

**5. 1924 – தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் ஜான் மார்ஷல் ஹரப்பாவிற்கும், மொஹஞ்ச-** தாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதைக் கண்டறிதல்

**6. மிகவும் பழமையான நாகரிகம் எது?**

ஹரப்பா

**7. நாகரிகம் – பண்டைய லத்தீன் மொழி வார்த்தையான 'சிவிஸ்' (CIVIS) என்பதிலிருந்து வந்தது.** இதன் பொருள் 'நகரம்' ஆகும்.

**8. எவற்றின் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள்?**

வான் வழி புகைப்படங்கள்

**9. நிலத்தடியை ஆய்வு செய்ய எதனைப் பயன்படுத்துகின்றனர்?**

காந்தப்புல வருடி (Magnetic scanner)

**10. இந்திய தொல்லியல் துறை ASI – (Archaelogical Survey of India)**

- 1861 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற நிலஅளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.

**11. கால வரையறை**

- புவி எல்லை - தெற்கு ஆசியா
- காலப்பகுதி - வெண்கலக் காலம்
- காலம் - பொ.ஆ.மு. 3300-1900
- (கதிரியக்க கார்பன் வயதுக் கணிப்பு முறை மூலம் முடிவு செய்யப்பட்டது)
- பரப்பு - 13 லட்சம் சதுர கி.மீ
- நகரங்கள் - 6 பெரிய நகரங்கள்
- கிராமங்கள் - 200க்கும் மேற்பட்டவை

**12. வெண்கலக் காலம் என்பது எது?**

மக்கள் வெண்கலத்தாலான பொருட்களைப் பயன்படுத்திய காலம் ஆகும்.

**13. இந்திய எல்லைக்குள் ஹரப்பா நாகரிகம் இருந்த இடங்கள் :**





**14. ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகத்திற்கான காரணங்கள் யாவை?**

- சிறப்பான நகரத் திட்டமிடல்
- சிறப்பான கட்டிடக்கலை வேலைப்பாடு
- தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை
- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்
- விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கான திடமான அடித்தளம்

**15. சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பம்சம் எது?**

திட்டமிட்ட நகர அமைப்பு

**16. நகரம் திட்டமிடப்பட்ட இரண்டு பகுதிகள் யாவை?**




**17. புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் எது?**

மெஹெர்கர். இது பாகிஸ்தான் நாட்டில் பலுச்சிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

**18. மெஹெர்கரில் நாகரிகத்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள காலம் எது?**

பொ.ஆ.மு. 7000

**19. கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன?**

ஏனென்றால், அவை வலுவானவை, கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை, நெருப்பைக் கூட தாங்குபவை. மேலும் அவை நீரினால் கரைவதில்லை.

**20. தெருக்களும் வீடுகளும்**

- தெருக்கள் சட்டக வடிவமைப்பை கொண்டுருந்தன.
- தெருக்கள் நேராக அமைக்கப்பட்டிருந்தன. அவை வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் சென்றன. ஒன்றை ஒன்று செங்கோணத்தில் வெட்டிக் கொள்ளும் படியும் இருந்தன.
- சாலைகள் அகலமாகவும் வளைவான முனைகளைக் கொண்டதாகவும் இருந்தன.
- வீடுகள், தெருக்களின் இரு ஓரங்களிலும் சீராக அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் ஒன்று அல்லது இரண்டு மாடி அடுக்குகளை உடையனவாக காணப்படுகின்றன.
- பெரும்பாலான வீடுகள் பல அறைகளையும் ஒரு முற்றத்தையும், ஒரு கிணற்றையும் கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் கழிவறையும், குளியலறையும் இருந்திருக்கின்றன.
- வீடுகள் சுட்ட செங்கற்களாலும் சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப்பட்டிருந்தன. சூரிய வெப்பத்தில் உலர வைக்கப்பட்ட செங்கற்களும் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான செங்கற்கள் சீரான அளவுகள் உடையதாகவோ இருந்தன. கூரைகள் சமதளமாக இருந்தன.

- அரண்மனைகளோ, வழிபாட்டுத் தலங்களோ இருந்ததை தீர்மானிக்கக் கூடிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.
- வடிகால் கழிவு நீர் தேங்காமல் செல்ல வசதியாக லேசான மென்சரிவைக் கொண்டிருந்தது. கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான துளைகளும் சரியான இடைவெளியில் அமைக்கப்பட்டிருந்தன.
- வீட்டிலிருந்து கழிவுநீர் பல தெருக்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலமாக முக்கிய வடிகால்களைச் சென்றடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது.
- ஒவ்வொரு வீட்டிலும் திடக் கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக்அழிவுகளைத் தேக்கி, கழிவு நீரை மட்டும் வெளியேற்றின.

**21. பெருங்குளம்**

- இந்த பெருங்குளமானது நன்கு அகன்று, செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும். இது நகரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. நீர் கசியாத கட்டுமானத்துக்கான மிகப் பழமையான சான்று எனலாம்.
- இக்குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும், தளத்திலும் பல அசுக்குகள் இயற்கைத் தார் கொண்சு பூசப்பட்டிருந்தது.
- வடபுறத்திலிருந்தும், தென்புறத்திலிருந்தும் குளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் உள்ளன.
- அருகில் இருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது. உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

**22. தானியக் களஞ்சியம்**

- தானியக் களஞ்சியம் – செங்கற்களால் அடித்தளமிடப்பட்ட, பெரிய, உறுதியான கட்டட அமைப்பு.
- இவை தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன.
- தள வெடிப்புகளில் கோதுமை, பார்லி, தினைவகைகள், எள் மற்றும் பருப்பு வகைகளில் மிச்சங்கள் சிதறிக் காணப்பட்டன.

**23. செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக் களஞ்சியம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**

ஹரியானா மாநிலத்தில் உள்ள ராகிகர்கி

**24. மொஹஞ்ச-தாரோவில் இருந்த இன்னொரு மிகப்பெரும் பொதுக் கட்டடம் எது?**

கூட்ட அரங்கு. இது 20 தூண்கள் வரிசைகளை கொண்டு பரந்து விரிந்த கூடம் ஆகும்.

**25. வணிகம் மற்றும் போக்குவரத்து**

- ஹரப்பா மக்கள் பெரும் வணிகர்களாக இருந்தார்கள்.

- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன. பொருட்களின் நீளத்தை அளவிட, அளவுகள் குறிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினார்கள்.
- அவர்கள் சக்கர வண்டிகளைப் பயன்படுத்தினர். ஆரக்கால் இல்லாத, திடமான சக்கரங்களைப் பயன்படுத்தினர்.
- மெசபடோபியாவுடன் விரிவான கடல் வணிகம் நடைபெற்றிருக்கிறது. சிந்து வெளி முத்திரைகள் தற்கால ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளை குறிக்கும் பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளது இதை உறுதிப்படுத்துகிறது.
- சுமேரியாவின் அக்காடிய பேரரசிற்குட்பட்ட அரசன் நாரம்-சின் என்பவர் சிந்துவெளிப் பகுதியிலுள்ள மெலுக்கா என்னும் இடத்தில் இருந்து அணிகலன் வாங்கியதாகக் குறிப்பு எழுதியுள்ளார்.
- பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப்பகுதியிலும் காணப்படுகின்றன. இது இந்த இரு பகுதிகளிலும் வணிகம் நடந்ததைக் காட்டுகிறது.

**26. கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**

குஜராத்திலுள்ள லோத்தல்

**27. லோதல் எங்கு அமைந்துள்ளது?**

குஜராத்தில் சபர்மதி ஆற்றின் ஒரு துணை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

**28. மொகஞ்ச-தாரோ- தலைவர்**

- அமர்ந்த நிலையில் உள்ள ஓர் ஆண் சிலை மொகஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- அது நெற்றியில் ஒரு தலைப்பட்டையுடனும் வலது கை மேல்பகுதியில் ஒரு சிறிய அணுகலனுடனும் காணப்படுகிறது.
- அதன் தலை முடியும், தாடியும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டு காணப்படுகிறது.
- காதுகளின் கீழ் காணப்படும் இரு துளைகள், தலையில் அணியப்படும் அணிகலனைக் காதுவரை இணைக்க ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.
- இடது தோள் பூக்களாலும், வளையங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு மேலங்கியால் மூடப்பட்டுள்ளது.
- இது போன்ற வடிவமைப்பு அப்பகுதியில் உள்ள மக்களால் பயன்படுத்தப்படுவது இன்றளவும் குறிப்பிடத்தக்கது.

**29. தொழில் நுட்பம்**

சிந்துவெளி நாகரிக மக்கள் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகளை உருவாக்கினர்.

குஜராத் மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தந்தத்தினாலான அளவுகோல் 1704மி.மீ வரை சிறிய அளவீடுகளைக் கொண்டுள்ளது. (அதன் சமகாலத்திய நாகரிகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அளவுகோல்களில் இது தான் மிகச் சிறிய பிரிவு ஆகும்)

**30. மனிதர்களால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட உலோகம் எது?**

செம்பு

**31. சர் ஜான் மார்ஷல் , மொஹெஞ்ச-தாரோவில் பார்த்த வெண்கலத்தால் ஆன பெண் சிலை எது?**

நடன மாது

**32. கே.வி.டி. (கொற்கை – வஞ்சி – தொண்டி) வளாகம் :**

பாகிஸ்தானில் இன்றும் கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை, உறை, கூடல்நகர் என்ற பெயர் கொண்ட இடங்கள் உள்ளன. கொற்கை, பூம்புகார் போன்ற சங்க கால நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் பெயர்களுடன் உள்ள இடங்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளன. ஆப்கானிஸ்தானில் உள்ள ஆறுகளான காவ்ரி, பொருண்ஸ் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஆறுகளான காவிரி வாலா மற்றும் பொருளை ஆகிய பெயர்கள் தமிழ்ச் சொற்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.

**33. சிந்துவெளி நாகரிகத்தின் உடை:**

- பொதுவாக பருத்தி ஆடைகளே பயன்பாட்டில் இருந்தன.
- அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நூலைச் சுற்றி வைப்பதற்கான சுழல் அச்சுக்கள் மூலம் அவர்கள் நூற்கவும் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.
- கம்பளி ஆடைகளும் உபயோகப்படுத்தப்பட்டன.

**34. சிந்துவெளி நாகரிகத்தின் அன்பும் அமைதியும்:**

- குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன.
- சிந்துவெளி மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஏனென்றால் அவர்களிடம் படை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. மேலும் சில ஆயுதங்கள் மட்டுமே அங்கிருந்து கிடைத்துள்ளன.
- அவர்களின் தங்களின் மேம்பட்ட நிலையை அவர்களுடைய ஆடைகள், விலைமதிப்பற்ற நகைகள் மற்றும் மேம்பட்ட நகர வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தினர்.

**35. சிந்துவெளி நாகரிகத்தின் அணிகலன்கள்:**

**ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருக்கின்றனர்.**

**கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள், மோதிரங்கள் , காதணிகள் மற்றும் காலணிகள் முதலியவற்றையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டிருந்தன.**

36. சிந்துவெளி மக்களுக்கு **இரும்பின்** பயன் பற்றி தெரியாது.

**37. சிந்துவெளி மக்கள் ஆபரணம் செய்ய எதனைப் பயன்படுத்தினர்?**

சிவப்பு நிற மணிக்கற்கள் (carnelian)

**38. சிந்துவெளி மக்களின் தொழில்**

- சிந்துவெளி மக்களின் முதன்மையான தொழில் பற்றி எதுவும் தெரியவில்லை, எனினும் வேளாண்மை, கைவினைப் பொருட்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர் என தெரிகிறது.
- அங்கு வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களும் இருந்துள்ளனர்.
- கால்நடை வளர்ப்பும் அவர்களது தொழிலாக இருந்தது.
- அவர்கள்சக்கரத்தின் பயனையும் அறிந்திருந்தனர்.

**39. சிந்துவெளி மக்களின் மட்பாண்டங்கள்**

- மட்பாண்டங்களைச் சக்கரங்கள் கொண்டு உருவாக்கினர். அவை தீயிலிட்டுச் சுடப்பட்டன.
- மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணத்தில் இருந்தன. அதில் கருப்பு வண்ணத்தில் அழகிய வேலைப்பாடுகளைச் செய்தனர்.
- அங்கி கிடைத்த உடைந்த பானைத்துண்டுகள் விலங்குகளின் உருவங்களுடனும், வடிவியல் வடிவமைப்புகளுடனும் காணப்படுகின்றன.

**40. சிந்துவெளி மக்களின் சமய நம்பிக்கை:**

- சிந்துவெளி மக்களின் வழிபாடு மற்றும் அவர்களின் மத நடைமுறைகள் பற்றி அறிய எந்த ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை.
- அங்கு கிடைக்கப்பெற்ற பெண் சிலைகள் மூலம் சிந்துவெளி மக்களிடையே தாய் தெய்வ வழிபாடு இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

**41. ஹரப்பா நாகரிகம் சரியத் தொடங்கியதற்கான காரணங்கள் யாவை?**

- சுற்றுச்சூழல் மாற்றம்
- படையெடுப்பு
- இயற்கைச் சீற்றங்கள்
- காலநிலை மாற்றம்
- காடுகள் அழிதல்
- தொற்று நோய்த் தாக்குதல்

**42. முதல் எழுத்து வடிவம் யாரால் உருவாக்கப்பட்டது?**

சுமேரியர்கள்

**43. சிந்துவெளி நாகரிகத்தின் பொதுவான உண்மைகள் யாவை?**

- உலகின் மிகப்பழமையான நாகரிகங்களில் ஒன்று.

- பழமையான நான்கு நாகரிகங்களில் பெரிய பரப்பளவு கொண்டது.
- உலகின் முதல் திட்டமிடப்பட்ட நகரங்கள்.
- மேம்பட்ட சுகாதாரம் மற்றும் வடிகால் அமைப்பு.
- சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய உணர்வு மேலோங்கியிருந்தது.

**44. மொஹஞ்ச-தாரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடம் உலகப் பாரம்பரியத் தளமாக யுனெஸ்கோ அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**45. உலகில் முதன் முதலில் கட்டப்பட்ட பொதுக்குளம் எது?**

மொகஞ்ச-தாரோ பெருங்குளம்

**46. சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்ட கிசே பிரமிடு யாரால் கட்டப்பட்டது?**

குஃபு (பொ.ஆ.மு.2500)

**47. மெசபடோமியா (சுமேரியர் காலம்) ஊர் நம்மு என்ற அரசனால் சின் என்ற சந்திர கடவுளுக்கு கட்டப்பட்ட ஊர் எது?**

ஜிகரட்.

**48. எகிப்து அரசன் இரண்டாம் ராமெசிஸ் என்பவரால் கட்டப்பட்ட இரட்டைக் கோயில்கள் உள்ள இடம் எது?**

அபு சிம்பல்

## 6th Social Science Lesson 4 Notes in Tamil

## 4. தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

**1. பண்டைய இந்தியாவில் திட்டமிட்டுக் கட்டப்பட்ட முதல் நகரங்கள் எவை?**

ஹரப்பா, மொகஞ்சதாரோ

**2. உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் எது?**

மெசபடோமியா நாகரிகம். இது 6500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

**3. தமிழகத்தின் தொன்மையான நகரங்கள் யாவை?**

மதுரை, காஞ்சி, பூம்புகார்

**4. தமிழகத்தின் மிகப் பழமையான நகரம் எது?**

பூம்புகார்

**5. பூம்புகார் அமைந்துள்ள இடம் எது?**

வங்காள விரிகுடா கடலின் கரையில் அமைந்துள்ளது. இது காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தற்போதைய மயிலாடுதுறை அருகே உள்ளது.

**6. சங்காலச் சோழ அரசின் துறைமுகம் எது?**

பூம்புகார் . இந்த நகரத்துக்குப் புகார், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெயர்களும் உண்டு.

**7. பூம்புகார் துறைமுகத்தில் நடந்த வணிகம் குறித்து கூறும் நூல் எது?**

சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலை, இரட்டைக் காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை

**8. பூம்புகாரின் சிறப்பைப் பேசும் நூல் எது?**

சிலப்பதிகாரம்

**9. சிலப்பதிகார நாயகி கண்ணகியின் தந்தை யார்?**

மாநாய்கன்

**10. மாநாய்க்கன் என்பதன் பொருள் என்ன?**

பெருங்கடல் வணிகன்

**11. பெருவணிகர்களும் பெருங்கடல் வணிகர்களும் நிறைந்த பகுதியாக விளங்கும் ஊர் எது?**

பூம்புகார்

**12. பட்டினப்பாலையின் ஆசிரியர் யார்?**

உருத்திரங்கண்ணனார்

காலம்: 2-ம் நூற்றாண்டு

**13. பண்டைத் தமிழகத்தில் கடல் வழியாக இறக்குமதி செய்யப்பட்டவை எவை?**

குதிரை

**14. பண்டைத் தமிழகத்தில் தரைவழித் தடங்கள் வழியே இறக்குமதி செய்யப்பட்டவை எவை?**

கருமிளகு

**15. பண்டைத் தமிழகத்தில் வட மலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை எவை?**

தங்கம்

**16. பண்டைத் தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை எவை?**

சந்தனம்

**17. பண்டைத் தமிழகத்தில் கிழக்குப் பகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை எவை?**

பவளம்

**18. பண்டைத் தமிழகத்தில் ஈழத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் எவை?**

உணவுப்பொருட்கள்

**19. பூம்புகார் நகர வாழ்வினை எதிலிருந்து அறியலாம்?**

சிலப்பதிகாரத்தின் புகார் காண்டம் மற்றும் பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்கள்

**20. இந்தியாவில் உள்ள மிகப் பழமையான நகரம் எது?**

மதுரை

**21. சங்கம் வளர்த்த நகரம் என்று பெயர் பெற்றது எது?**

மதுரை

**22. பண்டைய காலத்தில் மதுரையை ஆட்சி செய்தவர்கள் யாவர்?**

பாண்டியர்கள், சோழர்கள், களப்பிரர்கள். இடைக்காலத்தில் பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும், அவர்களைத் தொடர்ந்து நாயகர்களும் ஆட்சி புரிந்தனர்.

**23. சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த ஊர் எது?**

மதுரை

**24. கடைச்சங்க காலத்தில் தமிழ்ப் பணி செய்த புலவர்கள் எத்தனை பேர்?**

49 பேர்

**25. கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டியில் இருந்து மதுரைக்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள் எவை?**

அகில், சந்தனம்

**26. முத்துக்களை உவரி என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தவர் யார்?**

இஸ்ரேல் அரசர் சாலமோன்

**27. பாண்டியர்களின் துறைமுகம் எது?**

கொற்கை

**28. ரோமானிய நாணயங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கு அமைந்துள்ளது?**

மதுரை

**29. மதுரையின் இருவகை அங்காடிகள் யாவை?**

நாளங்காடி, அல்லங்காடி.

நாளக்காடி – பகல் பொழுதிலான அங்காடி.

அல்லங்காடி – இரவு நேரத்து அங்காடி

**30. தூங்கா நகரம் என்று அழைக்கப்பட்ட ஊர் எது?**

மதுரை

**31. யார் குறிப்புகளில் மதுரையைப் பற்றிய தகவல்கள் உள்ளன?**

கிரேக்க வரலாற்றாசிரியர் மெகஸ்தனிஸ்

**32. அர்த்த சாஸ்திரம் எனும் நூலை எழுதியவர் யார்?**

சாணக்கியர்

**33. சாணக்கியர் எந்த மன்னரின் அமைச்சர்?**

மௌரிய வம்ச அரசன் சந்திர குப்தர்

**34. முதன் முதலில் பள்ளிகள் அமைக்கப்பட்ட இடம் எது?**

காஞ்சி

**35. சீன வரலாற்றாசிரியர் பயின்ற பல்கலைக்கழகம் எது?**

நாளந்தா பல்கலைக்கழகம்

**36. புகார் துறைமுக நகரம்.**

மதுரை வணிக நகரம்

காஞ்சி கல்வி நகரம் ஆகும்.

**37. "நகரங்களில் சிறந்தது காஞ்சி" என்று கூறியவர் யார்?**

காளிதாசர்

**38. "கல்வியில் கரையிலாத காஞ்சி" என்று புகழ்ந்தவர் யார்?**

திருநாவுக்கரசர்

**39. புத்தகயா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சியும் ஒன்று எனக் கூறியவர் யார்?**

யுவான் சுவாங்

**40. தொண்டை நாட்டில் உள்ள மிகப் பழமையான நகரம் எது?**

காஞ்சி

**41. காஞ்சியில் பிறந்து வாழ்ந்த சான்றோர்கள் யாவர்?**

தர்மபாலர், ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர்

**42. கோயில்களின்நகரம் என்று அழைக்கப்படுவது எது?**

காஞ்சி

**43. கைலாசநாதர் கோயில் அமைந்துள்ள இடம்** – கைலாசநாதர்

**44. கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர் யார்?**

பல்லவ மன்னன் ராஜசிம்மன்

**45. யாருடைய காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோவில்கள் கட்டப்பட்டன?**

பல்லவர்கள் காலம்

**46. எந்த பௌத்த துறவி தனது இறுதி காலத்தை காஞ்சியில் கழித்தார்?**

பௌத்த துறவி மணிமேகலை

**47. 'ஏரிகளின் மாவட்டம்' என்று அழைக்கப்படும் மாவட்டம் எது?**

காஞ்சிபுரம்

**48. கல்லணையைக் கட்டியவர் யார்?**

கரிகால் சோழன்

**49. புகார் நகரம் அழிந்து போனதற்கான காரணம் என்ன?**

பொ.ஆ. 200 வரை சிறப்புற்றுத் திகழ்ந்த புகார் நகரம் கடல்கோள் அல்லது கடற்சீற்றங்களால் அழிந்து போயிருக்கலாம்.

**50. தமிழகத்தின் தொன்மையான நகரங்கள்**




**51. சேர நாடு** - கோவை, நீலகிரி, கரூர், கன்னியாகுமரி மற்றும் இன்றைய கேரள மாநிலத்தின் பகுதிகள்

**சோழநாடு** - தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்

**பாண்டிய நாடு** - மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி, உள்ளிட்ட தென்மாவட்டங்கள்.

**தொண்டை நாடு** – காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதி.

**52. தமிழ்நாட்டில் தொல்லியல் சான்று கிடைக்கும் வேறு சில இடங்கள்:**

கொற்கை, வஞ்சி, தொண்டி, உறையூர், தகடூர், முசிறி, கருவூர், மாமல்லபுரம், தஞ்சை, காயல்.

**53. சோழநாடு - சோறுடைத்து**

**பாண்டிய நாடு - முத்துடைத்து**

**சேரநாடு - வேழமுடைத்து**

**தொண்டைநாடு - சான்றோருடைத்து**

winmeen.com

## 6th Social Science Lesson 5 Notes in Tamil

## 5. பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம்

**1. எந்நிகழ்வின் காரணமாய் எண்ணிலடங்கா விண்மீன்களும், வான்பொருட்களும் தோன்றின?**

பெருவெடிப்பு (Big Bang)

**2. பேரண்டம் என்றால் என்ன?**

பெருவெடிப்பு என்ற ஒரு நிகழ்வு ஏற்பட்டதின் காரணமாய் எண்ணிலடங்கா விண்மீன்களும், வான்பொருட்களும் தோன்றின. இவை அனைத்தையும் பொதுவாக 'பேரண்டம்' (Universe) என்று அழைத்தனர். இதனை 'அண்டம்' (Cosmos) என்றும் குறிப்பிடுகின்றனர்.

**3. அண்டத்தைப் பற்றிப் படிக்கும் பிரிவு எது?**

அண்டவியல் (Cosmology).

**4. காஸ்மாஸ் என்பது _____ சொல்லாகும்.**

கிரேக்கச்

**5. ஈர்ப்பு விசையால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு இருக்கும் நட்சத்திரங்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

விண்மீன் திரள் மண்டலம் (Galaxy)

**6. பால்வெளி விண்மீன் திரள் மண்டலம் (Milky Way Galaxy) எப்போது உருவானது?**

சுமார் 5 பில்லியன் வருடங்களுக்குப் பின் 'பால்வெளி விண்மீன் திரள் மண்டலம்' உருவானது. நமது சூரியக் குடும்பம் பால்வெளி விண்மீன் திரளில் காணப்படுகிறது.

**7. புவிக்கு அருகில் காணப்படும் விண்மீன் திரள் மண்டலங்கள் யாவை?**

1. ஆண்ட்ரோமெடா (Andromeda) விண்மீன் திரள் மண்டலம்
2. மெகல்லனிக் க்ளட்ஸ் (Magellanic Clouds) விண்மீன் திரள் மண்டலம்

**8. ஓர் ஒளியாண்டு என்பது யாது?**

ஒளி ஓர் ஆண்டில் பயணிக்கக்கூடிய தொலைவு ஆகும்.

**9. ஒளியானது வினாடிக்கு எவ்வளவு வேகத்தில் பயணிக்கும்?**

3,00,000 கி.மீ

**10. ஒலியானது வினாடிக்கு எவ்வளவு வேகத்தில் பயணிக்கும்?**

330 மீட்டர்

**11. சோலார் என்ற சொல்லின் பொருள் என்ன?**

சூரியக் கடவுள்

**12. sol என்ற சொல் எந்த வார்த்தையிலிருந்து பெறப்பட்டது?**

இலத்தீன்

**13. சூரியக்குடும்பம் (Solar System) எப்போது உருவானது?**

சூரியக் குடும்பம் 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பு உருவானதாக நம்பப்படுகிறது.

**14. சூரியக் குடும்பம் எந்த விசையால் பிணைக்கப்பட்டுள்ள அமைப்பாகும்?**

ஈர்ப்பு விசையினால்

**15. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை எவ்வளவு?**

600000C

**16. சூரியன் எவற்றால் ஆனது?**

சூரியன் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் போன்ற வெப்பமான வாயுக்களால் ஆனது.

**17. சூரியனின் வெப்பநிலை புவியின் மேற்பரப்பை வந்தடைய ஆகும் காலம் எவ்வளவு?**

8.3 நிமிடங்கள்

**18. 'கோள்' என்பதன் பொருள் என்ன?**

சுற்றிவருபவர்

**19. சூரியன் சூரியக் குடும்பத்தின் மொத்த நிறையில் எத்தனை சதவிகிதம் உள்ளது?**

99.8 சதவிகிதம்

**20. சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்கள் எத்தனை?**

எட்டு. அவையாவன: புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன்.

**21. சூரியனை எதிர்க்கடிகார திசையில் சுற்றும் கோள்கள் யாவை?**

வெள்ளி மற்றும் யுரேனஸ்

**22. "வாள் நிற விசும்பின் கோள் மீன் சூழ்ந்த இளங்கதிர் ஞாயிறு" என்ற பாடல் வரி இடம்பெற்றுள நூல் எது?**

சிறுபாணாற்றுப்படை

**23. கோள்கள் அனைத்தும் தத்தமது பாதையை விட்டு விலகாமல் சூரியனைச் சுற்றி வருவதற்குக் காரணம் என்ன?**

சூரியன் ஈர்ப்பு விசை

**24. உட்புறக் கோள்கள் அல்லது புவிநிகர் கோள்கள் யாவை?**

சூரியனுக்கு அருகில் உள்ள நான்கு கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய்

**25. வெளிப் புறக்கோள்கள் அல்லது வியாழன் நிகர் கோள்கள் யாவை?**

வியாழன், சனி யுரேனஸ் மற்றும் நெப்டியூன். இக்கோள்கள் வாயுக்கள் நிரம்பிக் காணப்படுவதால் 'வளிமக் கோள்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன.

**26. செவ்வாய், வியாழன் கோள்களுக்கிடையே ______ காணப்படுகிறது.**

சிறு கோள் மண்டலம்

**27. புதன் (மிக அருகிலுள்ள கோள்)**

- சூரியனுக்கு அருகில் இருக்கும் புதன் அளவில் மற்ற கோள்களை விட மிகவும் சிறியது.
- இக்கோளானது ரோமானியக் கடவுள்களின் தூதுவரான 'மெர்குரி'யின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- இதில் நீரோ, வாயுக்களோ கிடையாது.
- புதன் கோளுக்குத் துணைக்கோள்கள் எதுவுமில்லை.
- அதிகாலைப் பொழுதிலும், அந்திப் பொழுதிலும் புதன் கோளை நாம் வெற்றுக் கண்களால் காணமுடியும்.

**28. வெள்ளி (வெப்பமான கோள்)**

- புவியைப் போன்றே ஒத்த அளவுள்ளதால் வெள்ளியும் புவியும் "இரட்டைக் கோள்கள்" என அழைக்கப்படுகின்றன.
- வெள்ளி தன்னைத்தானே சுற்றிகொள்ள 243 நாள்கள் எடுத்துக் கொள்கிறது.
- யுரேனஸைப் போன்றே இக்கோளும் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகிறது (கடிகாரச் சுற்று).
- வெள்ளிக் கோளுக்கு துணைக்கோள் இல்லை.
- அன்பு மற்றும் அழகைக் குறிக்கும் ரோமானிய கடவுளான 'வீனஸ்' என்ற பெயரால் இக்கோள் அழைக்கப்படுகிறது.
- காலையிலும், மாலையிலும் விண்ணில் காணப்படுவதால் இக்கோளை 'விடிவெள்ளி' மற்றும் 'அந்திவெள்ளி' என்று அழைக்கின்றோம்.
- நிலவிற்கு அடுத்தப்படியாக இரவில் பிரகாசமாகத் தெரியும் விண்பொருள் வெள்ளியாகும்.

**29. புவி (உயிர்க்கோளம்)**

- புவி ஐந்தாவது பெரிய கோளாகும்.
- புவியின் மேற்பரப்பானது நான்கில் மூன்று பகுதி நீரால் சூழப்பட்டுள்ளதால் 'நீலக்கோள்' என்றும் 'நீர்க்கோள்' என்றும் அழைக்கப்படுகிறது.
- ரோமானிய மற்றும் கிரேக்கக் கடவுள்களின் பெயரால் அழைக்கப்படாத ஒரே கோள் புவியாகும்.
- புவியின் துருவ விட்டம் 12,714 கிலோமீட்டர் மற்றும் நிலநடுக்கோட்டு விட்டம் 12,756 கிலோமீட்டர் ஆகும்.
- புவி சூரியனை வினாடிக்கு 30 கிலோமீட்டர் வேகத்தில் சுற்றிவருகிறது.
- புவியின் ஒரே துணைக்கோள் நிலவாகும்.

**30. சூரியனுக்கும் புவிக்கும் இடையே உள்ள தொலைவு என்ன?**

150 மில்லியன் கிலோ மீட்டர்

**31. மணிக்கு 800 கி.மீ வேகத்தில் செல்லும் வானூர்தி சூரியனைச் சென்றடைய ஆகும் காலம் எவ்வளவு?**

21 வருடங்கள்

**32. செவ்வாய் (செந்நிறக் கோள்)**

- புதனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது சிறிய கோளாகும்.
- இக்கோள் ரோமானியப் போர்க்கடவுள் 'மார்ஸ்' பெயரால் அழைக்கப்படுகிறது.
- இதன் மேற்பரப்பில் இரும்பு ஆக்ஸைடு உள்ளதால் செந்நிறமாகத் தோற்றமளிக்கிறது. ஆகவே செவ்வாய் 'சிவந்த கோள்' என்றும் அழைக்கப்படுகிறது.
- இதன் துருவப் பகுதிகளில் புவியைப் போன்ற பனியுறைகள் காணப்படுகின்றன.
- இக்கோளானது ஃபோபஸ் (Phobos) மற்றும் டீமஸ் (Deimos) என்ற இரு துணைக்கோள்களைக் கொண்டுள்ளது.

**33. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) செவ்வாய்க் கோளின் வளிமண்டலம் மற்றும் தரைப்பகுதியை ஆராய்வதற்காக அனுப்பிய விண்கலம் எது?**

மங்கள்யான் (24.09.2014)

**34. இந்தியா செவ்வாய்க் கோளினை ஆராயும் நாடுகளின் பட்டியலில் ராஷ்யா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், நாஸா (USA), ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு எந்த இடத்தில் உள்ளது?**

நான்காம் இடம்

**35. வியாழன் (பெருங்கோள்)**

- சூரியக் குடும்பத்தின் மிகப் பெரிய கோள் வியாழன் ஆகும்.
- ரோமானியர்களின் முதன்மைக் கடவும் பெயரால் அழைக்கப்படுகிறது.
- சூரியனைப் போன்றே இதன் வளிமண்டலத்திலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்கள் காணப்படுகின்றன.
- இக்கோள் மிக அதிகமான துணைக்கோள்களைக் கொண்டுள்ளது.
- அவற்றுள் அயோ (IO), யூரோப்பா (Europa), கனிமீடு (Ganymede) மற்றும் கேலிஸ்டோ (Callisto) ஆகியன மிகப்பெரிய துணைக்கோள்களாகும்.

**36. சனி (வளையங்கள் கொண்ட கோள்)**

- சூரியக் குடும்பத்தின் இரண்டாவது பெரிய கோள் சனி ஆகும்.
- ரோமானிய வேளாண்மை கடவுளின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.
- பாறைத்துகள்கள், பனித்துகள்கள் மற்றும் தூசுக்களால் ஆன பல பெரிய வளையங்கள் இக்கோளைச் சுற்றி காணப்படுகின்றன.
- சனி 62 துணைக் கோள்களைக் கொண்டுள்ளது.

- வியாழன் கோளைப் போன்றே அதிக துணைக்கோள்களைக் கொண்ட இக்கோளின் மிகப்பெரிய துணைக்கோள் “டைட்டன்” (Titan) ஆகும்.
- சூரியக் குடும்பத்தில் காணப்படும் துணைக்கோள்களில் நைட்ரஜன் மற்றும் மீத்தேன் ஆகிய வாயுக்களைக் கொண்ட வளிமண்டலம் மற்றும் மேகங்கள் சூழ்ந்து காணப்படுகின்ற ஒரே துணைக்கோள் டைட்டன் ஆகும்.
- சனிக் கோளின் தன் ஈர்ப்புத்திறன் (Specific Gravity) நீரை விடக் குறைவாகும்.

**37. யுரேனஸ் (உருளும் கோள்)**

- வில்லியம் ஹெர்ஷல் என்ற வானியல் அறிஞரால் 1781 ஆம் ஆண்டு யுரேனஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- தொலை நோக்கியால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கோள் இதுவாகும்.
- மீத்தேன் வாயு இக்கோளில் உள்ளதால் இது பச்சை நிறமாகத் தோன்றுகிறது.
- இது கிரேக்க விண் கடவுளான ‘யுரேனஸ்’ பெயரால் அழைக்கப்படுகிறது.
- யுரேனஸின் 27 துணைக்கோள்களில் ‘டைட்டானியா’ (Titania) மிகப் பெரியதாகும்.

**38. நெப்டியூன் (குளிர்ந்த கோள்)**

- ரோமானியக் கடல் கடவுளின் பெயரைக் கொண்ட இக்கோளில் பலத்த காற்று வீசும்.
- 14 துணைக்கோள்களைக் கொண்ட நெப்டியூனின் மிகப் பெரிய துணைக்கோள் ‘டிரைட்டன்’ (Triton) ஆகும்.
- இது சூரியக்குடும்பத்தில் மிகத் தொலைவில் உள்ளதால் மிகவும் குளிர்ந்து காணப்படுகிறது.
- இக்கோளில் காணப்படும் நீலம் மற்றும் வெள்ளை நிறமானது யுரேனஸ் கோளிலிருந்து இதை வேறுபடுத்திக் காட்டுகிறது.

**39. குறுங்கோள்கள் என்பவை யாவை?**

நெப்டியூன் கோளுக்கு அப்பால் தொலைவில் காணப்படும் சிறிய விண்பொருட்கள் குறுங்கோள்கள் ஆகும்.

புளூட்டோ, செரஸ், ஈரிஸ், மேக்மேக் மற்றும் ஹௌமியா

**40. துணைக்கோள்கள் என்றால் என்ன?**

கோள்களைச் சுற்றிவரும் விண்பொருட்கள் துணைக்கோள்களாகும்.

**41. நிலவு தன்னைத்தானே சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் நேரமும், புவியைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் நேரமும் ஏறக்குறைய ஒன்றாகும். அதாவது 27 நாள்கள் 8 மணி நேரமாகும்.**

**42. நிலவு புவியிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது?**

3,84,400 கி.மீ.

**43. மனிதன் தரையிறங்கிய விண்பொருள் எது?**

நிலவு

**44. நிலவைப் பற்றி ஆராய்வதற்காக இந்தியாவால் அனுப்பப்பட்ட முதல் விண்கலம் எது?**

சந்திராயன் -1. (2008)

**45. எந்த கோள்களுக்கிடையே சிறுகோள்கள் மண்டலம் காணப்படுகிறது?**

செவ்வாய் மற்றும் வியாழன்

**46. புவிக்கு அருகில் 76 வருடங்களுக்கு ஒருமுறை வரக்கூடிய வால்விண்மீன் எது?**

ஹேலி. இது கடைசியாக 1986ம் ஆண்டு வானில் தென்பட்டது. இது மீண்டும் 2061 ஆம் ஆண்டு விண்ணில் தோன்றும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**47. விண்கற்கள் என்பவை யாவை?**

சூரியக் குடும்பத்தில் காணப்படும் சிறு கற்கள் மற்றும் உலோகப் பாறைகளால் ஆன விண்பொருட்களை விண்கற்கள் என்று அழைக்கிறோம்.

**48. வளிமண்டலத்தைத் தாண்டி புவியின் மேற்பரப்பைத் தாக்கும் விண்கற்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

விண்வீழ்கற்கள்

**49. புவியின் வட துருவத்திலிருந்து, புவி மையத்தின் வழியாக தென் துருவம் வரை செல்லக்கூடிய ஓர் கற்பனைக் கோடு எது?**

புவியின் அச்சு

**50. புவி தன் அச்சில் ______ சாய்ந்து தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது.**

23½0

**51. தன் சுற்றுவட்டப் பாதைக்கு _____ கோணத்தை இந்த சாய்வு ஏற்படுத்துகிறது.**

66½0

**52. புவியின் சுழலும் வேகம் எவ்வளவு?**

நிலநடுக்கோட்டுப் பகுதியில் 1670 கி.மீ/மணி

600 வடக்கு அட்சரேகையில் 845 கி.மீ/மணி

துருவப்பகுதியில் சுழியாகவும் இருக்கும்.

**53. புவியானது மேற்கிலிருந்து கிழக்காகச் சுழலுவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் எவ்வளவு?**

23 மணி நேரம் 56 நிமிடங்கள் 4.09 வினாடிகள்

**54. நள்ளிரவு சூரியன் :**

நள்ளிரவு சூரியன் என்பது இருஅரைக்கோளங்களிலும் கோடைக்காலத்தில் ஆர்க்டிக் வட்டத்திற்கு வடக்கிலும், அண்டார்க்டிக் வட்டத்திற்கு தெற்கிலும் 24 மணி நேரமும் சூரியன் தலைக்குமேல் தெரியும் நிகழ்வாகும்.

**55. புவியின் ஒளிபடும் பகுதியையும், ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு _____ என்று பெயர்.**

ஒளிர்வு வட்டம் (Terminator Line)

**56. சுற்றுதல் என்றால் என்ன?**

புவி தன் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றிவரும் நகர்வையே சுற்றுதல் என்கிறோம்.

**57. புவி ஒரு வினாடிக்கு சூரியனைச் சுற்றி வரும் வேகம் எவ்வளவு?**

30 கிலோமீட்டர்

**58. புவி ஒரு முறை சூரியனைச் சுற்றிவர ஆகும் நாள்கள் எத்தனை?**

365 ¼ நாள்கள்

**59. பருவகாலங்கள் எவ்வாறு தோன்றுகின்றன?**

புவி சூரியனைச் சுற்றி வருவதால் பருவகாலங்கள் தோன்றுகின்றன.

**60. புவியின் வட அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்து காணப்படும் காலம் என்ன?**

மார்ச் 21ம் தேதி முதல் செப்டம்பர் 23ம் தேதி வரை

**61. புவியின் தென் அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்தும், வட அரைக்கோளம் விலகியும் காணப்படும் காலம் என்ன?**

செப்டம்பர் 23ம் தேதி முதல் மார்ச் 21ம் தேதி வரை

**62. புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்?**

சூரிய அண்மை

**63. புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்குத் தொலைவில் காணப்படும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்?**

சூரியச் சேய்மை

**64. எப்பொழுது நிலநடுக்கோட்டுப் பகுதியில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழும்?**

மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23

**65. மிக நீண்ட பகல் பொழுதைக் கொண்டிருக்கும் நாள் எப்பொழுது?**

ஜூன் 21

**66. புவியின் அனைத்துப் பகுதிகளிலும் பகல் மற்றும் இரவுப்பொழுது சமமாகக் காணப்படும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

சமப்பகலிரவு

**67. கடகரேகை மீது சூரியனின் செங்குத்துக் கதிர்கள் விழுவதால் வட அரைக்கோளத்தில் அந்நாள் மிக நீண்ட பகல்பொழுதைக் கொண்டிருக்கும். தென் அரைக்கோளம் நீண்ட இரவைக் கொண்டிருக்கும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்?**

கோடைக்காலக் கதிர்திருப்பம்

**68. மகர ரேகையின் மீது சூரியனின் செங்குத்துக் கதிர்கள் விழும் நாள் எப்பொழுது?**

டிசம்பர் 22. இந்நிகழ்விற்கு "குளிர்காலக் கதிர்திருப்பம்" என்று பெயர்.

**69. தென் அரைக்கோளத்தில் பகல்பொழுது அதிகமாகக் காணப்படும். வட அரைக்கோளம் நீண்ட இரவைக் கொண்டிருக்கும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

குளிர்காலக் கதிர்திருப்பம்

**70. புவியில் காணப்படும் மூன்று தொகுதிகள் யாவை?**

1. பாறைக்கோளம், 2. நீர்க்கோளம், 3. வளிமண்டலம்

**71. உயிரினங்கள் வாழக்கூடிய குறுகிய மண்டலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

உயிர்க்கோளம்

**72. பாறைக்கோளம் என்ற சொல் எதிலிருந்து பெறப்பட்டது?**

லித்தோஸ் என்ற கிரேக்கப் பதத்திலிருந்து பெறப்பட்டது.

**73. ஹைட்ரோஸ்பியர் என்ற சொல் எதிலிருந்து பெறப்பட்டது?**

ஹைட்ரோ என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. ஹைட்ரோபியர் என்றால் நீர்க்கோளம் என்று பெயர்.

**74. வளி அல்லது காற்று என்று பொருள்படும் கிரேக்கப் பதம் எது?**

'அட்மோ' (atmo)

**75. வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்கள் எவை?**

நைட்ரஜன் 78% மற்றும் ஆக்சிஜன் 21%

**76. 'உயிர்' என்று பொருள்படும் கிரேக்கச் சொல் எது?**

உயிர்

**77. மன்னார் உயிர்க்கோள் பெட்டகம் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள பரப்பளவு எவ்வளவு?**

10,500 சதுர கி.மீ

**78. பேரண்டம் உருவானது எப்போது?**

சுமார் 15 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெரு வெடிப்பின் போது பேரண்டம் உருவானது.


**79. சூரியக் குடும்பத்தின் மொத்த நிறையில் சூரியனின் சதவிகிதம் எவ்வளவு?**

99.8 சதவிகிதம்

## 6th Social Science Lesson 6 Notes in Tamil

## 6. நிலப்பரப்பும் பெருங்கடல்களும்

1. பெருங்கண்டத்தைச் சுற்றியுள்ள நீர்ப்பரப்பு **பான்தலாசா** ஆகும். சுமார் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்நிலப்பரப்பு மெதுவாக நகரத் தொடங்கியது. நாளடைவில் கண்டங்களும், பெருங்கடல்களும் தற்போதுள்ள நிலையை அடைந்தன.
2. புவியின் மேற்பரப்பு **71 சதவிகிதம்** நீரால் சூழப்பட்டுள்ளது. **எஞ்சிய 29 சதவிகிதம்** நிலத்தால் சூழப்பட்டுள்ளது.
3. **நிலத்தோற்றத்தின் வகைகள்:**




4. **முதல் நிலை நிலத்தோற்றங்கள் என்பவை எவை?**

கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள்

5. **சங்க இலக்கியத்தில் நிலவகைப்பாடு:**

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த நிலமும்

முல்லை - காடும் காடு சார்ந்த நிலமும்

மருதம் - வயலும் வயல் சார்ந்த நிலமும்

நெய்தல் - கடலும் கடல் சார்ந்த நிலமும்

பாலை - மணலும் மணல் சார்ந்த நிலமும்

6. **உலகின் ஏழு கண்டங்கள் யாவை?**

ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா, மற்றும் ஆஸ்திரேலியா

7. **உலகின் மிகப்பெரிய கண்டம் எது?**

ஆசியா

**8. உலகின் மிகச்சிறிய கண்டம் எது?**

ஆஸ்திரேலியா

**9. கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள் என்றால் என்ன?**

மிகப் பெரும் நிலப்பரப்பினைக் கண்டங்கள் எனவும் பரந்த நீர்ப்பரப்பினை பெருங்கடல்கள் எனவும் அழைக்கிறோம்.

**10. புவியில் ஐந்து பெருங்கடல்கள் யாவை?**

பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென்பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்

**11. இரண்டாம் நிலைத்தோற்றங்கள் என்பவை எவை?**

மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் என அழைக்கப்படுகின்றன.

12. சுற்றுப்புற நிலப்பகுதியை விட _____மேல் உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றம் மலைகள் ஆகும்.

600 மீ

**13. இமயமலைத்தொடர் எங்கு அமைந்துள்ளது?**

ஆசியா

14. செப்டம்பர் 11 - **சர்வதேச மலைகள் தினம்**

**15. ராக்கி மலைத்தொடர் எங்கு அமைந்துள்ளது?**

வட அமெரிக்கா

**16. ஆண்டிஸ் மலைத்தொடர் எங்கு அமைந்துள்ளது?**

தென் அமெரிக்கா

**17. உலகின் நீளமான மலைத்தொடர் எது?**

தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலைத்தொடர் ஆகும். இது சுமார் 7000 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடக்கு தெற்காகப் பரவியுள்ளது.

**18. ஒரு மலைத்தொடரின் உயரமான பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

சிகரம்

**19. உலகிலேயே மிக உயரமான சிகரம் எது?**

இமயமலைத் தொடரில் உள்ள எவரெஸ்ட் (8848 மீட்டர்)

**20. தமிழ்நாட்டில் உள்ள கோடை வாழிடங்கள் எவை?**

ஊட்டி, கொடைக்கானல், கொல்லிமலை, ஏற்காடு மற்றும் ஏலகிரி

**21. சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு எது?**

பீடபூமி

**22. பீடபூமிகளின் உயரம் எவ்வளவு?**

நூறு மீட்டலிருந்து பல்லாயிரம் மீட்டர் வரை

**23. உலகிலேயெ உயர்ந்த பீடபூமி எது?**

திபெத் பீடபூமி

**24. திபெத் பீடபூமியை எவ்வாறு அழைக்கிறோம்?**

உலகத்தின் கூரை

25. **சமமான நிலப்பரப்பைக் கொண்டுள்ள பீடபூமி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

மேசைநிலம்

26. பொதுவாக பீடபூமிகளில் **கனிமங்கள்** நிறைந்து காணப்படுகின்றன.

**27. இந்தியாவில் கனிமங்கள் நிறைந்து காணப்படும் பீடபூமி எது?**

சோட்டா நாகபுரி பீடபூமி

**28. பீடபூமியின் முக்கியத் தொழில் எது?**

சுரங்கத்தொழில்

**29. தென்னிந்தியாவில் உள்ள தக்காணப்பீடபூமி எவற்றால் ஆனது?**

எரிமலைப் பாறைகளால்

**30. தமிழ்நாட்டில் காணப்படும் பீடபூமிகள் யாவை?**

தருமபுரி பீடபூமி, கோயமுத்தூர் பீடபூமி மற்றும் மதுரை பீடபூமி

**31. சமவெளிகள் என்பது கடல் மட்டத்திலிருந்து சுமார் எவ்வளவு உயரத்தில் இருக்கும்?**

சுமார் 200மீ க்கும் குறைவான உயரம்

**32. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேசங்களாக விளங்குபவை எவை?**

சமவெளிகள்

**33. சமவெளியில் தோன்றிய நாகரிகங்கள் எவை?**

மெசபடோமியோ நாகரிகம் , சிந்து சமவெளி நாகரிகம்

**34. உலகின் மிகப்பெரிய சமவெளிகளில் ஒன்று எது?**

வடஇந்தியாவிலுள்ள கங்கைச் சமவெளி

**35. கடற்கரைச் சமவெளிகள் என்பவை யாவை?**

பெருங்கடல்கள் மற்றும் கடல்களை ஒட்டியுள்ள தாழ்நிலங்கள் கடற்கரைச் சமவெளிகள் ஆகும்.

**36. தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சமவெளிகள் எவற்றால் உருவாக்கப்பட்டவை?**

காவேரி மற்றும் வைகை ஆறுகளால் உருவாக்கப்பட்டவை

**37. பண்டைய நாகரிகங்களின் தொட்டில் எது?**

ஆற்றுச் சமவெளிகள்

**38. எந்தெந்த ஆற்றுச் சமவெளிகளில் நாகரிகங்கள் செழித்தோங்கின?**

இந்தியாவில் சிந்து நதி மற்றும் எகிப்தின் நைல் நதி

**39. அரித்தல் என்றால் என்ன?**

புவியின் மேற்பரப்பிலுள்ள பொருள்களை (பாறைகள்) அரித்து அகற்றுதலே அரித்தல் எனப்படுகிறது.

**40. அரிக்கப்பட்ட பாறை துகள்கள் கட்டத்தப்பட்டு தாழ்நிலப் பகுதிகளில் படியவைக்கப்படுகின்றன. இச்செயல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

படியவைத்தல்

**41. மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் என்பவை எவை?**

மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகளில் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றங்கள் மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.

**42. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிலத்தால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

கடல்

**43. பசிபிக் பெருங்கடல்**

- புவியின் மிகப்பெரிய மற்றும் ஆழமான பெருங்கடல் பசிபிக் பெருங்கடல் ஆகும்.
- இது புவியின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டுள்ளது.
- இதன் பரப்பளவு சுமார் 168.72 மில்லியன் சதுர கிலோமீட்டர் ஆகும்.
- பசிபிக் பெருங்கடலின் மேற்கில் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவும், கிழக்கில் வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.
- இது வடக்குத் தெற்காக ஆர்க்டிக் பெருங்கடல் முதல் தென் பெருங்கடல் வரை பரவியுள்ளது.
- இப்பெருங்கடல் முக்கோண வடிவத்தில் காணப்படுகிறது.
- முக்கோண வடிவத்தின் மேற்பகுதி பசிபிக் பெருங்கடலையும் ஆர்டிக் பெருங்கடலையும், இணைக்கும் பெரிங் நீர்ச்சந்தியில் காணப்படுகிறது.

**44. கடலின் ஆழத்தை குறிப்பிடப்படும் குறியீடு எது?**

மீ

45. உலகின் உயரமான **எவரெஸ்ட் சிகரம்** (8,848 மீ) **மரியான அகழியில்** (10,994 மீ) மூழ்கிவிடும் .

**46. பசிபிக் பெருங்கடலில் உள்ள பெருங்கடல்கள் யாவை?**

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஹவாய், நியூசிலாந்து

**47. புவியின் ஆழமான அகழியான மரியானா அகழி (10,994 மீ) எங்கு அமைந்துள்ளது?**

பசிபிக் பெருங்கடல்

**48. பசிபிக் பெருங்கடலைச் சுற்றி எரிமலைகள் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் பசிபிக் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

நெருப்பு வளையம்

**49. பசிபிக் என்று பெயரிட்டவர் யார்?**

ஸ்பெயின் நாட்டின் மாலுமி பெர்டினாண்டு மெகல்லன் பசிபிக் என பெயரிட்டார்.

**50. பசிபிக் என்பதன் பொருள் என்ன?**

அமைதி

**51. அட்லாண்டிக் பெருங்கடல்**

- புவியின் இரண்டாவது பெரிய பெருங்கடல் அட்லாண்டிக் பெருங்கடல் ஆகும்.
- இதன் பரப்பளவு சுமார் **85.13** மில்லியன் சதுர கி.மீட்டர் ஆகும்.
- இது புவியின் மொத்த பரப்பளவில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.
- அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்கே ஐரோப்பாவும், ஆப்பிரிக்கவும் மேற்கே வட அமெரிக்காவும், தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.
- பசிபிக் பெருங்கடலைப் போன்றே இப்பெருங்கடலும் வடக்கே ஆர்க்டிக் பெருங்கடல் முதல் தெற்கே தென் பெருங்கடல் வரை பரவியுள்ளது.
- இப்பெருங்கடல் ஆங்கில எழுத்து ‘S’ வடிவத்தைப் போன்று உள்ளது.
- ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி அட்லாண்டிக் பெருங்கடலையும், மத்திய தரைக் கடலையும் இணைக்கிறது.
- *போர்ட்டோ ரிக்கோ* அகழியில் காணப்படும் *மில்வாக்கி* அக்ழி அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழமான பகுதியாகும். இது 8,600 மீ ஆழமுடையது.
- கரீபியன் கடல், மெக்சிகோ வளைகுடா, வடகடல், கினியா வளைகுடா, மத்திய தரைக்கடல் போன்றவை அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லையோரக் கடல்களாகும்.
- செயிண்ட் ஹெலனா, நியூபவுண்ட்லாந்து, ஐஸ்லாந்து, ஃபாக்லாந்து உள்ளிட்ட பல தீவுகள் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ளன.




**52. இந்தியப் பெருங்கடல்**

- இந்தியப் பெருங்கடல் புவியின் மூன்றாவது பெரிய பெருங்கடல் ஆகும்.
- இதன் பரப்பு சுமார் 70.56 மில்லியன் சதுர கி.மீ. ஆகும்.
- இது முக்கோண வடிவத்தைக் கொண்டுள்ளது.
- இப்பெருங்கடல் மேற்கே ஆப்பிரிக்கா வடக்கே ஆசியா, கிழக்கே ஆஸ்திரேலியா போன்ற கண்டங்களால் சூழப்பட்டுள்ளது.
- இந்தியப் பெருங்கடலில் அந்தமான் நிக்கோபார், லட்சத் தீவுகள், மாலத் தீவுகள், இலங்கை, மொரிஷியஸ், ரீயூனியன் உள்ளிட்ட பல தீவுகள் காணப்படுகின்றன.
- மலாக்கா நீர்ச்சந்தி இந்தியப் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கிறது.
- இந்தியப் பெருங்கடலில் வங்காள விரிகுடா அரபிக்கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் போன்ற கடல்கள் எல்லையோரக் கடல்களாக உள்ளன.
- இப்பெருங்கடலின் ஆழமான பகுதி ஜாவா அகழியாகும். இதன் ஆழம் 7,725 மீ ஆகும்.

**53. பாக் நீர்ச்சந்தி எவற்றை இணைக்கிறது?**

வங்காள விரிகுடாவையும் பாக் வளைகுடாவையும் இணைக்கிறது.

54. **6° கால்வாய்** - இந்திரா முனையையும் இந்தோனேசியாவையும் பிரிக்கிறது.

55. **8° கால்வாய்** - மாலத் தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது

56. **9° கால்வாய்** - லட்ச தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது.

57. **10° கால்வாய்** - அந்தமான் தீவையும் நிக்கோபார் தீவையும் பிரிக்கிறது.

58. **தென்பெருங்கடல்**

- தென்பெருங்கடல் அண்டார்டிகாவைச் சுற்றி அமைந்துள்ளது.
- தென் பெருங்கடல் 60° தெற்கு அட்சத்தால் சூழப்பட்டுள்ளது.
- இதன் பரப்பளவு 21.96 மில்லியன் சதுர கி.மீ. ஆகும்.
- தென்பெருங்கடல் இந்திய பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல்களின் தென் பகுதிகளால் சூழப்பட்டுள்ளது.
- ராஸ் கடல், வெடல் கடல் மற்றும் டேவிஸ் கடல் இதன் எல்லையோரக் கடல்களாகும்.
- ஃபேர்வெல் தீவு, பௌமன் தீவு, ஹார்ட்ஸ் தீவு போன்ற தீவுகள் இப்பெருங்கடலில் காணப்படுகின்றன.
- இப்பெருங்கடலின் ஆழமான பகுதி 'தென் சான்ட்விச் அகழி' 7,235 மீ ஆகும்.

59. **ஆர்க்டிக் பெருங்கடல்**

- ஆர்க்டிக் பெருங்கடல் மிகச்சிறியது ஆகும்.
- இதன் பரப்பளவு சுமார் 15.56 மில்லியன் சதுர கி.மீ.
- இது ஆர்க்டிக் வட்டத்தினுள் அமைந்துள்ளது.
- வருடத்தின் பெரும்பான்மையான நாட்களில் இப்பெருங்கடல் உறைந்தே காணப்படும்.
- நார்வே கடல், கீர்ன்லாந்து கடல், கிழக்கு சைபீரியக் கடல் மற்றும் பேரண்ட் கடல் ஆகியன இதன் எல்லையோரக் கடல்களாகும்.
- கிரீன்லாந்து தீவு, நியூ சைபீரியத் தீவு மற்றும் நவோயா செமல்யா போன்ற தீவுகள் இப்பெருங்கடலில் காணப்படுகின்றன.
- வட துருவம் ஆர்க்டிக் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ளது.
- இப்பெருங்கடலின் ஆழமான பகுதி 'யுரேசியன் தாழ்நிலம்' ஆகும்.
- இதன் ஆழம் சுமார் 5,449 மீட்டர் ஆகும்.

## 6th Social Science Lesson 7 Notes in Tamil

## 7. பன்முகத் தன்மையினை அறிவோம்

1. **பன்முகத்தன்மை என்றால் என்ன?**

   நாம் பல்வேறுபட்ட பின்புலங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறைகளைச் சார்ந்து இருப்பினும், ஒற்றுமையாக வாழ்கிறோம். இதுவே பன்முகத்தன்மை என்று அறியப்படும்.

2. இந்தியா ஏறத்தாழ **ஐந்தாயிரம் ஆண்டுகள்** பழமை வாய்ந்த நாகரீகத்தின் தாயகமாக விளங்குகிறது.

3. **இந்தியாவிற்கு வருகை புரிந்தவர்கள்:**

   இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வளங்களால் ஈர்க்கப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, பல்வேறு இன மக்கள் வந்தனர். சிலர் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து வணிகம் செய்யவும், மற்றவர்கள் படையெடுப்பு காரணமாகவும் இந்தியாவிற்கு வருகை தந்தனர். நில வழியாகவும் கடல் வழியாகவும் பல்வேறு இன மக்கள் இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்தனர்.

4. **இந்தியாவில் காணப்படும் பன்முகத் தன்மையின் தலைப்புகள் யாவை?**
   - நில அமைப்புகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பன்முகத்தன்மை
   - சமூகப் பன்முகத்தன்மை
   - சமயப் பன்முகத்தன்மை
   - மொழிசார் பன்முகத்தன்மை
   - பண்பாட்டுப் பன்முகத்தன்மை

5. **இந்தியா ஒரு துணைக்கண்டம், ஏன்?**

   கண்டம் எனப்படுவது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், ஆறுகள், கடல்கள் போன்ற பல்வேறு இயற்கைப் பிரிவுகள் மற்றும் கால நிலைகளைக் கொண்ட மிகப் பரந்த நிலப்பரப்பாகும். இவ்வனைத்தையும் இந்தியா பெற்றிருப்பதால், இந்தியா **"துணைக்கண்டம்"** என்று அழைக்கப்படுகிறது.

6. **ஒரு பகுதியின் பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பது எது?**

   நிலவியல் மற்றும் காலநிலைக் கூறுகள்

7. கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலிலும், சமவெளிகளில் வாழும் மக்கள் வேளாண்மைத் தொழிலிலும், மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபடுகின்றனர்.

8. **மலைப்பகுதிகளில் நிலவும் காலநிலையானது எந்த தொழிலுக்கு உகந்ததாக உள்ளது?**

   காபி, தேயிலை போன்ற தோட்டப்பயிர்த் தொழிலுக்கு

9. **நில அமைப்பில் காணப்படும் பன்முகத்தன்மை எதன்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?**

அப்பகுதியில் வளரும் தாவரங்கள் மற்றும் விலங்குகள்

10. **ஒரு பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வளம் எதனைப் பொறுத்து மாறுபடுகின்றது?**

அப்பகுதியில் நிலவும் இயற்கை மற்றும் காலநிலையைப் பொறுத்து மாறுபடுகின்றது.

11. **மக்களின் உணவு, உடை, தொழில் மற்றும் வாழ்க்கைத்தரம் போன்றவை எதனைப் பெரிதும் சார்ந்துள்ளன?**

அப்பகுதியின் இயற்கை நிலை மற்றும் காலநிலையைப் பெரிதும் சார்ந்துள்ளன.

12. **சமூகம் என்றால் என்ன?**

சமூகம் என்பது ஒரு பொது நலத்திற்காக மக்கள் இணைந்து வாழும் இடமாகும்.

13. **சமுதாயம் என்றால் என்ன?**

நமது சமுதாயம் என்பது விவசாயிகள் , தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர் போன்ற பலரையும் உள்ளடக்கியது ஆகும். மக்களின் மேம்பட்ட வாழ்க்கை முறைக்கு சமுதாயங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

14. **ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு என்ன?**

குடும்பம்

15. **மேகாலயாவில் உள்ள மௌசின்ராம்** அதிக மழை பொழியும் பகுதி ஆகும்.

16. **ராஜஸ்தானில் உள்ள ஜெய்சால்மர்** குறைவான மழைப்பொழியும் பகுதி ஆகும்.

17. **குடும்பத்தின் வகைகள் யாவை?**

குடும்பம் என்பது இருவகைப்படும். கூட்டுக்குடும்பம் மற்றும் தனிக்குடும்பம்.

18. பல குடும்பங்கள் சேர்ந்து இணக்கமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் பல குடியிருப்புகள் இணைந்து கிராமங்களாகவும், பல கிராமங்கள் இணைந்து நகரங்களாகவும் உருவாகின்றன.

19. **சமய பன்முகத்தன்மை என்றால் என்ன?**

- இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு ஆகும்.
- அனைத்து மதங்களும் சமமானது என்று நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் அறிவிக்கிறது.
- மத விடுதலை நமது அடிப்படை உரிமை.

20. **இந்தியாவில் உள்ள மதங்கள் யாவை?**

**இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம், சீக்கிய மதம், புத்த மதம், சமண மதம், ஜொராஸ்டிரிய மதம்** போன்ற எண்ணற்ற மதங்கள் இந்தியாவில் தழைத்தோங்கி உள்ளன.

21. **இந்தியா உயர்ந்த பாரம்பரியமிக்க கலாச்சார நாடு:**

- இந்தியா பல்வேறு விழாக்களின் தாயகம் ஆகும்.

- இந்தியாவில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் பல்வேறு விழாக்களை நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக கொண்டாடுகின்றனர்.
- இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மைக்கான ஆதாரமாக விளங்கும் விழாக்கள் யாவை?

இந்திய விழாக்களான பொங்கல், தீபாவளி, ஹோலி, விஜயதசமி, ஆயுத பூஜை, நவராத்திரி, துர்கா பூஜை, தசரா, விநாயகர் சதுர்த்தி, பிஹு, கும்பமேளா, ஓணம், மிலாது நபி, ரம்ஜான், கிறிஸ்துமஸ், புத்த பூர்ணிமா, மகாவீர் ஜெயந்தி, குருநானக் ஜெயந்தி, ரக்ஷபந்தன் போன்ற விழாக்கள் இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மைக்கான ஆதாரமாக விளங்குகிறது.

**22. இந்தியாவில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை என்ன?**

இந்தியாவின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியா 122 முக்கிய மொழிகளையும், 1599 பிற மொழிகளையும் கொண்டுள்ளது.

**23. முக்கிய மொழிக் குடும்பங்கள் யாவை?**

இந்தோ-ஆரியன், திராவிடன், ஆஸ்ட்ரோஆஸ்டிக், சீனதிபெத்தியன் ஆகிய நான்கும் முக்கிய மொழி குடும்பமாகும். **தமிழ் மொழியானது பழமையான திராவிட மொழி ஆகும்.**

**24. இந்தியாவில் பேசப்படும் முதல் ஐந்து மொழிகள்(2001-ன் கணக்கெடுப்பின்படி)**

| மொழி | மொத்த மக்கள்தொகை சதவிகிதம் |
|---|---|
| இந்தி | 41.03% |
| வங்காளம் | 8.10% |
| தெலுங்கு | 7.19% |
| மராத்தி | 6.99% |
| தமிழ் | 5.91% |

**25. மக்களின் மொழி மற்றும் பண்பாடுகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் யார்?**

இந்தியாவிற்கு வணிகம் செய்வதற்காக வருகை தந்த போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் இந்தியாவிலேயே தங்கி இருந்ததால் மக்களின் மொழி மற்றும் பண்பாடுகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர்.

**26. ஆங்கிலத்தின் பயன்பாடு:**

- 1947-ல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், ஏறத்தாழ 300 ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது.
- இதன் காரணமாக இந்தியவில் ஆங்கிலம் ஒரு முக்கிய மொழியாக எழுச்சிபெற்று பள்ளிகள், கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும், அலுவலக மொழியாகவும் மற்றும் அன்றாட வாழ்விலும் ஆங்கிலம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

27. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின்படி 22 மொழிகள் அலுவலக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இந்திய அரசால் முதல் செம்மொழியாக “தமிழ் மொழி” அறிவிக்கப்பட்டது. தற்போது 6 மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**28. பண்பாடு என்பது எதைக் குறிக்கிறது?**

பண்பாடு என்ற சொல்லானது, மக்களின் மொழி, உடை, உணவு முறை, மதம், சமூகப் பழக்க வழக்கங்கள், இசை, கலை மற்றும் கட்டிடக் கலைகளின் பாரம்பரியத்தை குறிக்கிறது.

**29. மக்களின் பண்பாடு எவற்றில் வெளிப்படுகிறது?**

ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடு அவர்களின் சமூக நடத்தையிலும் மற்றும் சமூக தொடர்புகளிலும் வெளிப்படுகிறது.

**30. கலை மற்றும் கட்டிடக்கலை என்றால் என்ன?**

ஒவ்வொரு சமுதாயத்தின் ஒருங்கிணைந்த அங்கம் ஆகும்.

31. ஒரு சமுதாயத்தின் மரபு மற்றும் பண்பாட்டின் ஓர் பகுதியாக **கலை வளர்ச்சி** அடைகிறது.

32. இந்தியாவில் 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

**33. எதன்மூலம் நம் உயர்ந்த பண்பாடு வெளிப்படுகிறது?**

இந்திய நடனங்கள்

**34. பண்டைய காலங்களின் நடனம் என்பது எதனை வெளிப்படுத்துவதாக கருதப்படுகிறது?**

வழிபாடு மற்றும் கொண்டாட்டத்தின் வழியாகவும், மகிழ்ச்சி மற்றும் நன்றியை வெளிப்படுத்துவதற்கான பாவனையாகவும் கருதப்படுகிறது.

35. **இந்திய தொல்லியல் துறை** இதுவரை கண்டுபிடித்த கல்வெட்டுச் சான்றுகளில் **60% தமிழ்நாட்டில்** இருந்து கண்டுபிடிக்கப்பட்டவை ஆகும். அவற்றில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன.

**36. இசை வடிவங்கள் என்பவை யாவை?**

இசையும் நடனமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது. இந்தியாவில் பல்வேறு வகையான இசை வடிவங்கள் பின்பற்றப்படுகின்றன. அவை **இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை, தமிழ் செவ்வியல் இசை, நாட்டுப்புற இசை, லாவணி இசை மற்றும் கஜல் இசையாகும்.**

**37. வேற்றுமையில் ஒற்றுமை:**

- இந்தியா பன்முகத்தன்மை நிறைந்த நாடாக இருப்பினும் **“நாட்டுப்பற்று”** என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம்.
- நமது நாட்டின் சின்னங்களான **தேசியக்கொடி, தேசிய கீதம்** ஆகியவை நமது தாய்நாட்டையும், அதற்காக நாம் ஒன்றுபட்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

- **சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி** போன்ற நாட்கள் தேசிய விழாக்களாக நம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றன.

**38. இந்தியாவின் ஒற்றுமைக்குச் சான்றாக திகழ்பவை எவை?**

நமது விடுதலைப் போராட்டங்களும், இந்திய அரசியலமைப்புச் சட்டமும் இந்தியாவின் ஒற்றுமைக்குச் சான்றாக திகழ்கின்றன.

39. **இந்திய நாட்டுப்புற நடனங்கள்:**

| மாநிலம் | புகழ்பெற்ற நடனம் |
|---|---|
| தமிழ்நாடு | கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, தெருக்கூத்து, பொம்மலாட்டம், புலியாட்டம், கோலாட்டம், தப்பாட்டம் |
| கேரளா | தெய்யம், மோகினியாட்டம் |
| பஞ்சாப் | பங்க்ரா |
| ஜம்மு மற்றும் காஷ்மீர் | தும்ஹல் |
| குஜராத் | கார்பா , தாண்டியா |
| ராஜஸ்தான் | கல்பேலியா, கூமர் |
| உத்திரப்பிரதேசம் | ராசலீலா, சோலியா |
| அசாம் | பிஹு |

40. இந்தியா "**வேற்றுமையில் ஒற்றுமை**" உள்ள நாடாக விளங்குகிறது. இச்சொற்றொடரானது நமது சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் **"டிஸ்கவரி ஆஃப் இந்தியா"** என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

41. இந்தியாவில் பல்வேறு இன மக்கள் காணப்படுவதால், இந்தியாவை **"இனங்களின் அருங்காட்சிகம்"** என வரலாற்றாசிரியர் **வி.ஏ.ஸ்மித்** அவர்கள் கூறியுள்ளார்.

## 6th Social Science Lesson 8 Notes in Tamil

### 8. சமத்துவம் பெறுதல்

1. **முன்முடிவு (பாரபட்சம்) என்றால் என்ன?**
   - பாரபட்சம் என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும். அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளாமலேயே தவறாக முன்முடிவு எடுப்பதாகும்.
   - மக்கள் தவறான நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் கொண்டிருக்கும் போது பாரபட்சம் ஏற்படுகிறது.

   Prejudice = pre + judge

   (முன்முடிவு = முன் + முடிவு / பாரபட்சம்)
2. **முன்முடிவு எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது?**

   மக்களின் மத நம்பிக்கைகள், அவர்கள் வாழ்கின்ற பகுதிகள், நிறம், மொழி மற்றும் உடை போன்ற பலவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது.
3. கிராமப்புற மக்களை விட நகர்ப்புற மக்களின் மனப்பான்மை மற்றும் நடத்தையானது நாகரிகமானது என்பது **பாரபட்சமாகும்**.
4. **பாரபட்சம் உருவாவதற்கான காரணங்கள் யாவை?**

   1) சமூகமயமாக்கல்

   2) நிர்ணயிக்கப்பட்ட நடத்தை

   3) பொருளாதார பயன்கள்

   4) சர்வாதிகார ஆளுமை

   5) இன மையக் கொள்கை

   6) கட்டுப்பாடான குழு அமைப்பு

   7) முரண்பாடுகள்
5. **ஒத்தக் கருத்து என்றால் என்ன?**

   முன்முடிவு வலுவாக இருக்கும்போது ஒத்தக் கருத்து உருவாகிறது. ஒத்தக் கருத்து என்பது தவறான கண்ணோட்டம் அல்லது ஏதோ ஒன்றைப் பற்றிய தவறான கருத்தாகும்.
6. **சமத்துவமின்மை என்றால் என்ன?**
   - ஒருவர் மற்றொருவரை பாகுபாட்டுடன் நடத்துவது ஆகும்.
   - அதாவது வெண்மை தோற்றமுடைய மக்களிடமிருந்து கருப்பு நிற தோற்றமுடைய மக்களை வேறுபடுத்துவதும், தாழ்ந்த வகுப்பினரைக் காட்டிலும் உயர்ந்த வகுப்பினருக்கு அதிக

முக்கியத்துவம் அளிப்பதும், சிறுமியர்களைக் காட்டிலும் சிறுவர்களை திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள் போன்ற கருத்துக்கள் சமத்துவமின்மை எனக் கூறலாம்.

7. **பாகுபாடு என்றால் என்ன?**

மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும். நிறம், வர்க்கம், மதம் , பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு ஏற்படலாம்.

8. **சமத்துவமின்மை பற்றிக் கூறும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு எது?**

எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 15(1) அறிவுறுத்துகிறது.

9. **இந்தியாவில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டிற்கான மிக முக்கிய காரணம் என்ன?**

சாதிமுறை

10. **வர்ணாசிரம முறை என்றால் என்ன?**

ஆரம்ப காலங்களில் சமுதாயம் என்பது தொழில் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்ததையே வர்ணாசிரம முறை என அறியப்பட்டது.

11. **இனநிறவெறிக்கு முடிவு கட்டியவர் யார்?**

- தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா அவர்கள், 27 ஆண்டுகள் சிறைவாழ்க்கைக்குப்பின் 1990ஆம் ஆண்டு விடுதலையானார்.
- இவர் தென்னாப்பிரிக்காவிலிருந்த இனநிறவெறிக்கு முடிவு கட்டினார்.
- தென்னாப்பிரிக்காவில் உலகளவில் அமைதி நிலவவும், மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

12. **டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்:**

- இவர் பாபா சாஹேப் என பிரபலமாக அழைக்கப்படுகிறார்.
- இவர் இந்திய சட்ட நிபுணராகவும், பொருளாதார நிபுணராகவும்,அரசியல்வாதியாகவும் , சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.
- இவர் 1915 இல் எம்.ஏ. பட்டத்தை பெற்றார். பின்னர் 1927 இல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. பட்டத்தை பெற்றார். அதற்கு முன்னர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் D.Sc பட்டத்தையும் பெற்றிருந்தார்.
- இவர் அரசியலமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். எனவே, இவர் இந்திய அரசியலமைப்பின் தந்தையாகக் கருதப்படுகிறார்.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார்.
- இவரது மறைவுக்குப் பின்னர், 1990 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

**13. இந்தியாவில் சாதி ஒடுக்குமுறைக்கெதிராக பலரும் போராடி வருகின்றனர். இவர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் யார்?**

டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

**14. பாலினப் பாகுபாடு என்றால் என்ன?**

பாலினப் பாகுபாடு என்பது இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே நிலவும் உடல்நலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் சமத்துவமின்மை போன்றவற்றைக் குறிக்கிறது.

**15. மத பாகுபாடு என்றால் என்ன?**

மதம் சார்ந்த பாகுபாடு என்பது நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தனிநபரின் மீதோ அல்லது குழுவினர் மீதோ சமத்துவமின்றி நடத்துவது ஆகும்.

**16. சமூக - பொருளாதார சமத்துவமின்மை என்றால் என்ன?**

சமூக-பொருளாதார தளத்தில் வளர்ச்சியின் பயன்கள் சமமாக பரவுவதில்லை. எனினும் மனித மேம்பாட்டின் சமத்துவமின்மையைவிட வருவாய் பிரிவின் சமத்துவமின்மை மிக அதிகமாகக் காணப்படுகிறது. குறைவான தொழிற்வளர்ச்சி, குறைவான வேளாண் உற்பத்தி, குறைவான மனித மேம்பாடு ஆகியவை குறைந்த வருவாய் மாவட்டங்களுடன் தொடர்புடையவை. அதே போல் கல்வியறிவு குறைந்த விகிதம் உள்ள மாவட்டங்கள் குறைவான பாலின விகிதத்துடன் காணப்படுகின்றன.

**17. 2011 - ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி எழுத்தறிவு விகிதம் என்ன?**

| அதிகம் | | | குறைவு | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | விகிதம் | வ.எண் | மாவட்டத்தின் பெயர் | விகிதம் |
| 1 | கன்னியாகுமரி | 91.75% | 1 | தருமபுரி | 68.54% |
| 2 | சென்னை | 90.18% | 2 | அரியலூர் | 71.34% |
| 3 | தூத்துக்குடி | 86.16% | 3 | கிருஷ்ணகிரி | 71.46% |
| 4 | நீலகிரி | 85.20% | 4 | விழுப்புரம் | 71.88% |

**18. பாலின விகிதம் – 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தலா ஆயிரம் ஆண்டுகளுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை:**

| அதிகம் | | | குறைவு | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | பாலின விகிதம் | வ.எண் | மாவட்டத்தின் பெயர் | பாலின விகிதம் |
| 1 | நீலகிரி | 1041 | 1 | தருமபுரி | 946 |
| 2 | தஞ்சாவூர் | 1031 | 2 | சேலம் | 954 |
| 3 | நாகப்பட்டினம் | 1025 | 3 | கிருஷ்ணகிரி | 956 |
| 4 | தூத்துக்குடி | 1024 | 4 | இராமநாதபுரம் | 977 |

**19. இந்திய சமுதாயத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டினை நீக்குவதற்கான தீர்வுகள் யாவை?**

1) அனைவருக்கும் தரமான உடல்நலம் மற்றும் கல்வியினை கிடைக்கச் செய்தல்.
2) தற்போதைய பாலின பாரபட்சத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்
3) பாலின ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்காக பொது வாழ்வில் மற்றும் நிறுவனத்தில் பெண்களின் திறன்களை வெளிப்படுத்துதல்.
4) மற்ற மதங்களை பற்றி தெரிந்து கொள்ளும் வெளிப்படையான மனநிலை வளர்த்தல்.
5) வகுப்பறையில் குழுவாக சாப்பிடுவதை ஊக்குவித்தல் மூலம் சாதி, மதம், பாலினம் ஆகியவற்றின் எந்தவித பாரபட்சமின்றி மாணவர்களை ஒன்றாக இணைக்கச் செய்தல்.
6) பல தரப்பட்ட மக்களிடமும் பேசுதல்.
7) சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துதல்.

**20. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று கூறும் அரசியலமைப்பின் பிரிவு எது?**

பிரிவு 14

**21. இந்திய அரசியலமைப்பு என்றால் என்ன?**

ஒரு அரசியலமைப்பு என்பது நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும்.

**22. சமுதாயத்தின் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான இரண்டு காரணிகள் யாவை?**

- பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல்
- சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்

**23. பல்வேறு வகையான சுதந்திரம் என்றால் என்ன?**

பல்வேறு வகையான சுதந்திரம் என்பது அவரவர் மதத்தை பின்பற்றவும், மொழியைப் பேசவும் விழாக்களைக் கொண்டாடவும், கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதும் ஆகும்.

24. அரசியலமைப்பு என்பது **விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்** சட்டவடிவமைப்பாகும். இதன்படி ஒரு நாடு நிர்வகிக்கப்படும்,

**25. தீண்டாமை ஒழிப்பிற்கான இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?**

பிரிவு 17

26. **சமத்துவம்** என்பது தீண்டாமையை ஒரு குற்றமாகக் காண்பதாகும்.

## 6th Social Science Lesson 9 Notes in Tamil

## 9. வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்

**1. யாருடைய வருகையால் வேதகாலம் எனும் காலகட்டம் தொடங்கியது?**

ஆரியர்

**2. வேதகாலம் – இந்திய வரலாற்றில் கி.மு. (பொ.ஆ.மு) 1500 -600 காலகட்டம். 'வேதங்கள்' என்பதில் இருந்து இப்பெயரைப் பெற்றது.**

**3. ஆரியர்கள் பேசும் மொழி எது?**

இந்தோ-ஆரிய

**4. ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து அலையலையாகக் குடிபெயர்ந்து இந்துகுஷ் மலைகளிலுள்ள கைபர் கணவாய் வழியாக வந்தனர்.**

**5. ஆரியர்களின் முதன்மைத்தொழில் எது?**

கால்நடைகளை மேய்ப்பது

**6. காலம், பரப்பு, சான்றுகள்**

| புவியியல் பரப்பு | வட இந்தியா |
|---|---|
| காலப்பகுதி | இரும்புக்காலம் |
| கால அளவு | கி.மு. (பொ.ஆ.மு) 1500-600 வரை |
| சான்றுகள் | வேதகால இலக்கியங்கள் |
| நாகரிகத்தின் இயல்பு | கிராம நாகரிகம் |

**7. ஆரியர்களும் இந்தியாவில் அவர்களின் வாழ்விடங்களும்:**

- ரிக்வேதகால ஆரியர்கள் நாடோடிகள் ஆவார். அடிப்படையில் மேய்ச்சல் சமூகத்தினரான அவர்களுக்கு கால்நடைகளே முக்கிய சொத்து ஆகும்.
- ரிக்வேத காலத்தில் ஆரியர்களின் வாழ்விடம் பஞ்சாப் ஆகும். அப்போது அப்பகுதி 'சப்த சிந்து' அதாவது ஏழு ஆறுகள் ஓடும் நிலப்பகுதி என்றழைக்கப்பட்டது.
- ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு) 1000-இல் ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து சிந்து கங்கைச் சமவெளியில் குடியமர்ந்தனர்.
- இரும்புக் கோடரி, இரும்பினாலான கொழுமுனையைக் கொண்ட கலப்பை ஆகியவற்றைப் பரவலாக பயன்படுத்தினர்.

**8. நான்கு வேதங்கள் யாவை?**

ரிக், யஜுர், சாம, அதர்வன.

**9. வேத கால இலக்கியங்களை இருபெரும் பிரிவுகள் யாவை?**

1. சுருதிகள் – நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும். அவைகள் புனிதமானவை, நிலையானவை, கேள்விகள் கேட்கப்பட முடியாத உண்மை எனக் கருதப்பட்டவை. சுருதி என்பது கேட்டல் (அல்லது எழுதப்படாதது) எனும் பொருள் கொண்டது; இவை வாய்மொழி வாயிலாக் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்பட்டன.

**10. ஸ்மிருதிகள் - ஆகமங்கள், தாந்திரீகங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய மதம் குறித்த போதனைகளைக் கொண்ட நூல்களாகும். அவை நிலையானவை அல்ல்ல, தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகுபவை.**

**11. 'ஸ்மிருதி' என்பதன் பொருள் என்ன?**

எழுதப்பட்ட பிரதி

**12. இந்தியாவின் தேசிய குறிக்கோள் "சத்யமேவ ஜெயதே" ("வாய்மையே வெல்லும்") என்ற வாக்கியம் எதிலிருந்து எடுக்கப்பட்டது?**

முண்டக உபநிடதம்

**13. தொல்பொருள் சான்றுகள்:**

சிந்து மற்றும் கங்கை நதிப்பகுதிகளிலும் பஞ்சாப், உத்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய தொல்லியல் ஆய்விடங்களிலும் கிடைத்துள்ள இரும்புக் கருவிகள், மட்பாண்டங்கள் ஆகியன.

**14. வேதகாலத்தின் இரண்டு கட்டங்கள் யாவை?**

- தொடக்க வேத காலம் - கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 1000
- பின்வேதகாலம் - கி.மு. (பொ.ஆ.மு) 1000 – 600

**15. அரசியலின் அடிப்படை அலகு என்ன?**

குலம் (clan)

**16. குலத்தின் தலைவர் யார்?**

குலபதி

**17. ரிக் வேத கால அரசியல் எதனை அடிப்படையாகக் கொண்டது?**

ரத்த உறவுகளை

**18. கிராமம்:**

பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கிராமம் ஆகும்.

கிராமத்திற்கு கிராமணி தலைவர் ஆவார்.

19. பல கிராமங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு **'விஸ்' (குலம்)** என்றழைக்கப்பட்டது. இதற்கு **விசயபதி** தலைவர் ஆவார். **'ஜனா'** (இனக்குழு)வின் தலைவர் ராஜன் ஆவார். இவர் **ஜனஸ்யகோபா** (மக்களின் பாதுகாவலர்) எனப்பட்டார்.

20. ரிக் வேத காலத்தில் பல இனக்குழு அரசுகள் (ராஷ்டிரம்) இருந்தன. (பரதர், மத்சயர், புரு)

**21. அரசனின் முக்கியப் பொறுப்பு எது?**

தனது இனக்குழுவைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பது

22. அரசருடைய அதிகாரம் இனக்குழு மன்றங்களான **விதாதா, சபா, சமிதி, கணா** ஆகிய அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டது.

**23. இனக்குழு மன்றங்களில் மிகப்பழமையானது எது?**

விதாதா

24. **சபா** - மூத்தோர்களைக் கொண்ட மன்றம்.

**சமிதி** - மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு

**25. யாரை தனக்கு உதவி செய்வதற்காக அரசர் பணியில் அமர்த்தினார்?**

புரோகிதர் (தலைமை குரு)

**26. அரசியல், பொருளாதாரம், இராணுவம் தொடர்பான விஷயங்களில் அரசனுக்கு உதவி செய்தவர் யார்?**

சேனானி (படைத்தளபதி)

**27. கிராமங்களின் தலைவர் யார்?**

கிராமணி

**28. எந்த ஆட்சி முறையில் அரசரின் அதிகாரங்கள் அதிகரித்தன?**

முடியாட்சி முறை

29. ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து கங்கை, யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குடியேறியபோது தொடக்கக்காலக் குடியேற்றங்கள் மாற்றம் பெற்று பிரதேச அரசுகளாயின. பரம்பரை அரசுரிமை தோன்றியது.

30. பின்வேத காலத்தில் பல ஜனாக்கள் அல்லது இனக்குழுக்கள் இணைக்கப்பட்டு **ஜனபதங்கள் அல்லது ராஷ்டிரங்கள்** உருவாயின.

**31. பாலி என்றால் என்ன?**

மக்கள் தாங்களாகவே மனமுவந்து அரசனுக்கு கொடுத்துவந்த காணிக்கையாகும்.

**32. அயோத்தி, இந்திரப்பிரஸ்தம், மதுரா போன்ற நகரங்கள் எப்பொழுது உருவாயின?**

பின்வேதகாலம்

33. **பாலி** - இது ஒரு வரி ஆகும். ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் 1/6 பங்கை இவ்வரியாகச் செலுத்த வேண்டும்.

34. வேதகால சமூகம் **தந்தைவழிச்** சமூகமாகும்.

**35. தசயுக்கள் தாசர்கள் என்று அழைக்கப்பட்டவர் யார்?**

கருப்பு நிற ஆரியர் அல்லாத மக்கள்

**36. தொடக்க வேதகால சமுதாயத்துக்குள் காணப்படும் பிரிவுகள் யாவை?**

1) பொது மக்கள் விஸ் என்று அழைக்கப்பட்டனர்.
2) போர்வீரர்கள் சத்ரியர்கள் எனவும்
3) மதகுருமார்கள் பிராமணர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

**37. நான்கு வர்ணங்கள் கொண்ட சமூக அமைப்புகள் யாவை?**

- மதகுருவான பிராமணர்,
- போரிடும் சத்ரியர்,
- நில உடைமையாளர்களான வைசியர்,
- வேலைத் திறம் கொண்ட சூத்திரர்

**38. ரிக்வேதகால சமூகத்தில் பெண்களின் நிலை என்ன?**

- பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரம் பெற்றிருந்தனர்.
- மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார்.
- பெண்கள் தனது கணவருடன் தமது வீட்டில் சடங்குகள் நடத்தினார்.
- குழந்தைத் திருமணத்தையும், உடன்கட்டை ஏறுதலையும் அறிந்திருக்கவில்லை.
- கைப்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளத் தடைகள் இல்லை.
- பெற்றோரிடமிருந்து சொத்துக்களைப் பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது.
- பொது நிகழ்வுகளில் பெண்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை.

**39. பின்வேதகாலத்தில் சமூகத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்தது?**

- சமூகத்தில் மட்டுமின்றி, குடும்பத்திலும் கூட பெண்களின் பங்கும் அவர்களுக்கான நிலையும் குறைந்துபோனது.
- பெண்கள் குடும்பத்தில் சடங்குகளை நடத்த முடியாத நிலை உருவானது.
- திருமணம் தொடர்பான விதிகள் இறுக்கமும் குழப்பமும் பெற்றன. பலதார மணம் சாதாரணமாக நடைபெற்றது.
- கைம்பெண் மறுமணத்திற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை.
- பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.
- சாதிகளுக்கு இடையிலான திருமணம் நிராகரிக்கப்பட்டது.

**40. வேதகாலத்தில் பொருளாதார வாழ்க்கையின் நிலை என்ன?**

வேதகாலப் பொருளாதாரமானது கால்நடை மேய்ச்சலும் வேளாண்மையும் கலந்ததாகும்.

**41. ரிக்வேதகால ஆரியர்களின் முதன்மைத் தொழில் என்ன?**

கால்நடைமேய்ப்பது என்றாலும் மரவேலை செய்வோரும், தேர்கள் செய்வோரும், மட்பாண்டங்கள் செய்வோரும்,உலோக வேலை செய்வோரும், துணி நெய்வோரும், தோல்வேலை செய்பவர்களும் இருந்தனர்.

**42. பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் எக்காலத்தைச் சேர்ந்தது?**

வேதகாலம்

43. வேதகாலத்தில் குதிரைகள், பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காளைகள் மற்றும் நாய்கள் வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டன.

**44. ஆரியர்கள் நிரந்தரமாகக் குடியேறி வேளாண்மை செய்யத் தொடங்கிய பகுதி எது?**

சிந்து மற்றும் பஞ்சாப்

**45. ஆரியர்களின் முதன்மைப் பயிர் எது?**

யவா (பார்லி)

**46. ரிக் வேதகாலத்தில் இருபோகம் சாகுபடி செய்யப்பட்ட பயிர் எது?**

கோதுமை , பருத்தி

**47. பின்வேத காலத்தில் ஆரியர்கள் பழக்கப்படுத்திய விலங்குகள் யாவை?**

பசு, வெள்ளாசு, செம்மறியாடு, குதிரை மற்றும் யானை

**48. ரிக்வேதகாலப் பண்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

வர்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு

49. **பண்டமாற்று முறை** என்பது - பொருள் கொடுத்து பொருள் வாங்குவது

**50. வேதகால மக்கள் வணிகத்தில் பயன்படுத்திய நாணயங்கள் எவை?**

நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்களையும், கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாயணங்களையும் வணிகத்தில் பயன்படுத்தினர்.

**51. ரிக்வேத காலமக்கள் அறிந்திருந்த உலோகங்கள் யாவை?**

- தங்கம் (ஹிரண்யா)
- இரும்பு (சியாமா)
- தாமிரம் / செம்பு (அயாஸ்)

**52. ரிக்வேதகால ஆரியர்கள் வழிபட்ட கடவுள்:**

- நில மற்றும் ஆகாய கடவுள்
- ப்ருத்வி (நிலம்), அக்னி(நெருப்பு), வாயு (காற்று), வருணன் (மழை), இந்திரன் (இடி) போன்றவற்றை வணங்கினர்.
- மேலும் அதிதி (நித்தியக் கடவுள்), உஷா(விடியற்காலைத் தோற்றம்) ஆகிய குறைவான பெண் தெய்வங்களை வணங்கினர்.

**53. வேதகாலத்தில் புனித விலங்காகக் கருதப்பட்டது எது?**

பசு

54. வேதகாலத்தில் **கோவில்கள் இல்லை, சிலை வழிபாடும் வழக்கத்தில்** இல்லை.

**55. வேதகாலத்தில் முக்கியத்துவம் பெற்ற கடவுளர்கள் யாவர்?**

பிரஜாபதி (படைப்பவர்), விஷ்ணு (காப்பவர்), ருத்ரன் (அழிப்பவர்)

**56. வேதகாலத்தில் குருகுலக்கல்வி முறை எவ்வாறு இருந்தது?**

- குருகுலக் கல்வி முறை என்பது பழங்கால கற்றல் முறை ஆகும்.
- குருகுலம் என்னும் சொல் குரு (ஆசிரியர்), குலம் (குடும்பம் அல்லது வீடு) என்ற இரண்டு சமஸ்கிருத வார்த்தைகளின் கூட்டாகும்.
- இம்முறையில் மாணவர்கள் (சிஷ்யர்கள்) குருவுடன் தங்கியிருந்து, அவருக்குச் சேவை செய்வதோடு கல்வியும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்வர்.
- வாய்மொழி மரபில் மாணவர்கள் பாடங்களைக் கற்றனர். கற்றவை அனைத்தையும் மாணவர்கள் மனப்பாடம் செய்தனர்.
- நான்கு வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், தர்க்கவியல், நெறிமுறைகள், ஜோதிடம், கணிதம், இராணுவ உத்திகள் ஆகியன மாணவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டன.
- ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இரு பிறப்பாளர்கள் (Dvijas) மட்டுமே குருகுலத்தில் மாணவர்களாகச் சேர்க்கப்படுவர். பெண்களுக்கு பொது கல்வி அளிக்கப்படவில்லை.

**57. பின்வேத கால இறுதியில் வாழ்க்கையின் நான்கு நிலைகள் (நான்கு ஆஸ்ரமங்கள்) யாவை?**

- பிரம்மச்சரியம் (மாணவப் பருவம்)
- கிரகஸ்தம் (திருமண வாழ்க்கை)
- வனப்பிரஸ்தம் (காடுகளுக்குச் சென்று தவம் செய்தல்)
- சன்னியாசம் (மோட்சம் அடைவதற்காக துறவற வாழ்க்கை மேற்கொள்ளல்)

**58. செம்புக் காலகட்டம் (Chalcolithic Culture):**

மக்கள் செம்பையும் கல்லையும் (lithic) ஒரே காலகட்டத்தில் பயன்படுத்தியதால் இது **செம்புக் காலகட்டம்** என்று அழைக்கப்படுகிறது.

59. இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடு முதிர்ந்த நிலை **ஹரப்பா பண்பாட்டின் சமகாலப்** பண்பாடாகும். ஹரப்பா பண்பாட்டின் வீழ்ச்சிக்குப் பின்னருங்கூட, செம்புக் காலப் பண்பாடு தொடர்ந்து நிலவியது.

60. வடஇந்தியாவின் பின்வேதகாலப் பண்பாடும், தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தைச் சேர்ந்தவை ஆகும். இரும்புக் காலத்தின் முடிவில் மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டினுள் **கி.மு (பொ.ஆ.மு) 600 – கி.பி. (பொ.ஆ) 100** காலடி எடுத்து வைத்தனர்.

61. பண்டைய தமிழகத்தின் பெருங்கற்காலம், சங்ககாலத்திற்கு முந்திய காலத்தோடு ஒத்துப்போகிறது. கருப்பு மற்றும் சிவப்புநிற மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் ஒரு கூறாக உள்ளது.

**62. தமிழ்நாட்டின் பெருங்கற்காலம்/ இரும்புக்காலம் என்று அழைக்கப்படுவது எது?**

பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithc Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, lith என்றால் 'கல்' என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியததால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

**தமிழகத்திலுள்ள பெருங்கற்கால/ இரும்புக்கால தொல்லியல் ஆய்விடங்கள்**

63. ஆதிச்சநல்லூர் –தூத்துக்குடி மாவட்டம்:

- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் , முதுமக்கள் தாழிகள், பல்வகைப்பட்ட மட்பாண்டங்கள் (கருப்பு, சிவப்பு) இரும்பாலான குத்துவாள், கத்திகள், ஈட்டிகள், அம்புகள், சில கல்மணிகள், ஒரு சில தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன.
- வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளான புலி, யானை, மான் போன்றவற்றின் வெண்கலத்தாலான உருவங்கள் கிடைத்துள்ளன.
- மட்பாண்டங்கள் செய்தல், கல் மற்றும் மரங்களைப் பயன்படுத்தி பொருட்கள் செய்தல் போன்ற திறன்களை மக்கள் பெற்றிருந்தனர்.

**64. கீழடி – சிவகங்கை மாவட்டம்:**

- இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிலால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன.
- மேலும் தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள் , செம்மணிகள், வெண்கல் படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள்,

சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

- 2017 ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள பீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது.
- அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு.(பொ.ஆ.மு) 200ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது.
- இங்கு ரோம் நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன.
- இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும்.

65. தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் **பெரிப்பிளஸ்** குறிப்பிடுகிறார்.

**66. பொருந்தல் - திண்டுக்கல் மாவட்டம்:**

- கிடைத்துள்ள பொருட்கள்: புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள் , நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில்) இரும்பு வாள்கள், தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களான படிகக்கல், சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள்.
- இரும்பினாலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன.
- இங்கு கிடைத்துள்ள அரிசி நிரம்பிய பானை, மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

**67. பையம்பள்ளி - வேலூர் மாவட்டம்**

- இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் - இரும்பினால் செய்யப்பட்ட தொல் பொருட்களோடு பெருங்கற்காலத்து கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.
- பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- ரேடியோ கார்பன் முறையில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 என கணிக்கப்பட்டுள்ளது.

**68. கொடுமணல் – ஈரோடு மாவட்டம்:**

- பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணல் என்னும் ஊர் இதுவே என அடையாளப்படுத்தப்படுகிறது.
- இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- நூல் சுற்றி வைக்கப்பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.
- புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக்கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

**69. முதுமக்கள் தாழிகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?**

இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண் பானைகள் ஆகும்.

**70. தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவுச்சின்னங்கள் யாவை?**

- புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர்.
- இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும்.
- ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும்.
- இந்த பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவிப்பைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.

**71. கற்திட்டைகள் (Dolmens) என்பவை யாவை?**

- இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும்.
- இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்), கும்மாளமருதுப்பட்டி (திண்டுக்கள் மாவட்டம்), நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

72. பிரிட்டானிய (Breton) மொழியில் **'மென்' என்றால் கல், 'கிர்' என்றால் 'நீளமான'** என்று பொருள்.

**73. நினைவு கற்கள் (Menhir) என்பவை யாவை?**

- ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும்.
- திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இடங்களில் இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன.
- இவை உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.
- மதுரை மாவட்டம் நரசிங்கப்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.

**74. நடுகற்கள் என்பவை யாவை?**

- இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும்.
- தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும்.
- திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.

## 6th Social Science Lesson 10 Notes in Tamil

## 10. மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும்

1. **பண்டைய இந்திய வரலாற்றில் முக்கியமான காலகட்டம் எது?**

   கி.மு. (பொ.ஆ.மு.)

2. **இந்தியாவின் அறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அடையாளச் சின்னமாக விளங்கும் காலம் எது?**

   கி.மு. (பொ.ஆ.மு.) (அறிவுமலர்ச்சிக் காலம்)

3. **வரலாற்று அறிஞர் வில் டூராண்ட் அறிவுமலர்ச்சிக் காலம் (கி.மு. (பொ.ஆ.மு)) காலத்தை எவ்வாறு வர்ணிக்கிறார்?**

   நட்சத்திரங்களின் மழை

4. **இலக்கியச் சான்றுகள் யாவை?**
   - அங்கங்கள் - சமண நூல்கள்
   - திரிபிடகங்கள் மற்றும் ஜாதகங்கள் - பௌத்த நூல்கள்

5. **புதிய அறிவுமலர்ச்சி ஏற்பட்டதற்கான காரணங்கள் யாவை?**
   - பின்வேத காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட சிக்கலான சடங்குகளும் வேள்விகளும்.
   - அதிக அளவில் செலவு செய்ய வேண்டி இருந்த வேள்விச் சடங்குகள்
   - மூடநம்பிக்கைகளும், நடைமுறைகளும் சாதாரண மக்களைக் குழப்பம் அடையச் செய்தன.
   - வேள்விச் சடங்குகளுக்கு மாற்றாகக் கற்பிக்கப்பட்ட உபநிடதத் தத்துவங்களைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.
   - அடிமைமுறை, சாதிமுறை மற்றும் பாலியல் பாகுபாடுகளும் புதிய விழிப்புணர்வு தோன்றுவதற்குக் காரணமாயின.

6. **சமண மதத்தின் தோற்றம் யாவை?**
   - உலகத்தின் மிகப்பழமையான, தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் மதங்கைல் சமணமும் ஒன்றாகும்.
   - சமணம் 24 தீர்த்தங்கரர்களை மையமாகக் கொண்டது.
   - தீர்த்தங்கரர்கள் பல்வேறு காலங்களில் மதம் தொடர்பான உண்மைகளைப் போதித்தோர் ஆவர்.
   - முதல் தீர்த்தங்கரர் ரிஷபர்.
   - கடைசி தீர்த்தங்கரர் மகாவீரர் ஆவார்.
   - கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் மகாவீரரின் வழிகாட்டுதலில் சமணம் முக்கியத்துவம் பெற்றது.

7. **மகாவீரரின் இயற்பெயர் என்ன?**

வர்த்தமானர்

**8. மகாவீரர் பிறந்த ஊர் எது?**

வைசாலிக்கு அருகேயுள்ள குந்தகிராமம், பீகார்

**9. மகாவீரரின் பெற்றோர் யாவர்?**

சித்தார்த்தர், திரிசலா

**10. மகாவீரரின் இறப்பு:** பவபுரி –பீகார்

11. சமணம் (Jain) என்னும் சொல் ஜினா (Jina) என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

**12. மகாவீரர் (தலைசிறந்த வீரர்)**

- வர்த்தமானர் (செழிப்பு என்று பொருள்) ஒரு சத்திரிய இளவரசர்.
- அவர் தன்னுடைய 30வது வயதில் இளவரசர் என்னும் தகுதியைக் கைவிட்டுவிட்டு துறவறம் மேற்கொண்டார்.
- தீவிரமான தியானத்தை மேற்கொண்டார்.
- பன்னிரண்டரை ஆண்டுகால கடுமையான தவத்திற்குப் பின்னர் அவர் எல்லையற்ற அறிவை அடைந்தார். இந்நிலைக்கு 'கைவல்ய' என்று பெயர்.
- பின்னர் அவர் ஜினா (Jina) ஆனார்.
- இவரைப் பின்பற்றியவர்கள் சமணர் (Jains) என்று அழைக்கப்பட்டனர்.
- மகாவீரர் பண்டைய சிரமானிய (Sramanic) மரபுகளை மறு ஆய்வு செய்தார்.
- அவற்றின் அடிப்படையில் புதிய கோட்பாடுகளை உருவாக்கினார்.
- ஆகவே இவர்தான் உண்மையிலேயே சமணத்தை உருவாக்கியவர் என நம்பப்படுகிறது.

**13. சமணத்தின் தனித்தன்மை வாய்ந்த போதனைகள் யாவை?**

- இப்பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கடவுள் என்பதை சமணம் மறுக்கிறது.
- அகிம்சை அல்லது அறவழியே சமணத்தின் அடிப்படைத் தத்துவம்.
- முக்தி அடைவது அல்லது பிறப்பு-இறப்பு-மறுபிறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபடுவதே சமணத்தின் இறுதி லட்சியமாகும்.
- இறுதித் தீர்ப்பு என்ற நம்பிக்கையை சமணம் மறுக்கிறது.
- ஒருவருடைய வாழ்வின் நலன் அல்லது தரம் என்பது அவருடைய கர்மவினையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை சமணம் ஆதரிக்கிறது.

**14. கர்மா அல்லது கர்மவினை என்றால் என்ன?**

இப்பிறவியில் ஒருவர் செய்யும் செயல்களே அவருடைய/ அவளுடைய இப்பிறவியின் பிற்பகுதி வாழ்க்கையையும், அடுத்த பிறவியில் அவர் வாழப்போகும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்ற நம்பிக்கை ஆகும்.

15. **திரிரத்தினங்கள் அல்லது மூன்று ரத்தினங்கள் யாவை?**

- நன்னம்பிக்கை
- நல்லறிவு
- நற்செயல்

16. **மோட்சம் என்றால் என்ன?**

பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுதல் ஆகும்.

17. **சமணத்தின் நடத்தை விதிகள் யாவை?**

- அகிம்சை - எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது.
- சத்யா - உண்மையை மட்டுமே பேசுதல்
- அஸ்தேய - திருடாமை
- அபரிக்கிரகா - பணம், பொருள் சொத்துக்கள் மீது ஆசை கொள்ளாமல் இருப்பது
- பிரம்மச்சரியா - திருமணம் செய்து கொள்ளாமை

18. **ஆகம சித்தாந்தம் என்றால் என்ன?**

மகாவீரரின் தலைமைச் சீடரான கௌதமசுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். அதன் பெயர் ஆகம சித்தாந்தம் எனப்படும்.

19. சமணம் திகம்பரர், சுவேதாம்பரர் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

20. **திகம்பரர்:**

- திகம்பரர் வைதீக பழமைவாதப் போக்குடைய சீடர்கள்.
- திகம்பரர் பிரிவைச் சேர்ந்த சமணத் துறவிகள் ஆடைகள் அணிவதில்லை. நிர்வாணமாக வாழ்ந்தனர். அவர்கள் எந்த விதமான உடைமையும் வைத்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது.
- பெண்கள் நேரடியாக விடுதலை பெறவோ நிர்வாண நிலையை அடையவோ முடியாது என திகம்பரர் நம்பினர்.

21. **சுவேதாம்பரர்:**

- சுவேதாம்பரர்கள் முற்போக்கானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.
- சுவேதாம்பர பிரிவைச் சேர்ந்த துறவிகள் வெள்ளை நிற ஆடைகளை அணிகின்றனர். ரஜோகரனா (கம்பளி நூல்களைக் கொண்ட சிறிய துடைப்பம்) பிச்சைப் பாத்திரம், புத்தகம் ஆகியவை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

- ஆண்களைப் போலவே பெண்களும் விடுதலை பெற சமமான தகுதிகளைக் கொண்டுள்ளனர் என சுவேதாம்பரர்கள் நம்புகின்றனர்.

**22. சமணம் பரவியதற்கான காரணங்கள் யாவை?**

- மக்கள் பேசிய மொழியிலேயே சமணக் கருத்துக்கள் சொல்லப்பட்டன.
- புரிந்து கொள்ளும்படியான போதனைகள்.
- அரசர்கள் மற்றும் வணிகர்களின் ஆதரவு.
- சமணத் துறவிகளின் விடாமுயற்சி.

**23. தமிழகத்தில் சமணத்தின் செல்வாக்கு என்ன?**

- பண்டைய தமிழ் இலக்கியக்கள் ஜைனம் என்பதை சமணம் என்று குறிப்பிடுகின்றன.
- மதுரை நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் கீழக்குயில்குடி கிராமத்தில் சமணர் மலை என்ற பெயரில் ஒரு குன்று உள்ளது. சமணத் துறவிகளால் உருவாக்கப்பட்ட தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. இது இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்படும் நினைவு சின்னமாக உள்ளது.
- மதுரையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள அரிட்டாபட்டி என்ற கிராமத்தில் கலிஞ்சமலை உள்ளது. இதன் ஒரு பகுதியில் பாண்டவர் படுக்கை என்று அழைக்கப்படும் சமணர் குகைகள் உள்ளன. சமணத் துறவிகளுக்கான கற்படுக்கைகளே பாண்டவர் படுக்கை என அழைக்கப்படுகிறது.
- அறவோர் பள்ளி என்பது சமணத் துறவிகள் வாழ்ந்த இடங்கள் என மணிமேகலையில் குறிப்பு உள்ளது.
- கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் சமண பெண் துறவியான கவுந்தியடிகள் அவர்களை ஆசிர்வதித்து அவர்களுடன் சென்றதக தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- புகார், உறையூர், மதுரை, வஞ்சி(கருவூர்), காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சமண மடாலயங்கள் இருந்துள்ளன.
- ஜைனக் காஞ்சி – காஞ்சிபுரத்திலுள்ள திருப்பருத்திக் குன்றம் என்ற கிராமத்தில் இரண்டு பழமையான சமணக் கோவில்கள் உள்ளன. இக்கிராமம் முன்னர் ஜைனக் காஞ்சி என்று அழைக்கப்பட்டுள்ளது.
- திருப்பருத்திக்குன்றம் சித்தன்னவாசல் சிதாறல் மலைக்கோவில்.

**24. பௌத்தம்:**

- பௌத்த மதத்தை நிறுவியவர் கௌதம புத்தர் ஆவார்.
- இவரின் இயற்பெயர் சித்தார்த்தர்.
- மகாவீரரைப் போலவே இவரும் ஒரு சத்திரிய இளவரசர்.

- அரசாட்சி செய்து கொண்டிருந்த சாக்கிய அரசவம்சத்தில் பிறந்தவர்.
- சித்தார்த்தர் ஏழு நாள் குழந்தையாக இருந்தபோது அவருடைய தாயார் இயற்கை எய்தினார். எனவே அவருடைய சிற்றன்னை கைதமி அவரை வளர்த்தார்.

**25. சித்தார்த்தா தனது 29வது வயதில் கண்ட நான்கு துயரம் மிகுந்த காட்சிகள் யாவை?**

- கூன் விழுந்த முதுகுடனும், கந்தல் ஆடைகளுடனும் கவனிப்பாரற்ற ஒரு முதியவர்.
- குணப்படுத்த முடியாத வியாதியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நோயாளி.
- இறந்துவிட்ட ஒரு மனிதனின் சடலம் அழுது கொண்டிருக்கும் அவனின் உறவினர்களால் இடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்படுதல்.
- ஒரு துறவி

**26. சித்தார்த்தா(கௌதம புத்தர்) பிறந்த ஊர் எது?**

லும்பினி தோட்டம் , நேபாளம்

**27. கௌதம புத்தரின் பெற்றோர் யாவர்?**

சுத்தோதனா, மாயாதேவி

**28. கௌதம புத்தரின் இறப்பு :** குசி நகரம், உத்திரப்பிரதேசம்.

**29. புத்தர் என்பதன் பொருள் என்ன?**

ஞானம் பெற்ற ஒருவர் என்று பொருள்

**30. புத்தர் எத்தனை ஆண்டுகள் தவமிருந்தார்?**

ஆறு ஆண்டுகள்

**31. தன்னைத்தானே வருத்திக் கொள்வது விமோச்சினத்திற்கான பாதை அல்ல என்பதை உணர்ந்தவர் யார்?**

கௌதம புத்தர்

**32. புத்தர் அரசமரத்தடியில் அமர்ந்து தியானம் மேற்கொண்ட ஊர் எது?**

கயா

33. புத்தர் தியானத்தில் இருந்தபோது 49ஆம் நாள் அவர் ஞானம் பெற்றார்.

**34. சாக்கிய முனி என்று அழைக்கப்படுபவர் யார்?**

கௌதம புத்தர்

35. வாரணாசிக்கு அருகேயுள்ள, சாரநாத் என்னும் இடத்தில் உள்ள மான்கள் பூங்கா என்ற இடத்தில் உள்ள மான்கள் பூங்கா என்ற இடத்தில் புத்தர் தனது முதல் போதனைச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இது 'தர்ம சக்ர பரிவர்த்தனா' அல்லது தர்ம சக்கரத்தை நகர்த்துதல் என்று அழைக்கப்படுகிறது.

**36. புத்தரின் நான்கு பேருண்மைகள் யாவை?**

- வாழ்க்கை துன்பங்கள், துயரங்கள் நிறைந்தது.

- ஆசையே துன்பங்களுக்கான காரணம்.
- ஆசையைத் துறந்துவிட்டால் துன்ப துயரங்களைப் போக்கி விடலாம்.
- சரியான பாதையைப் பின்பற்றினால் (எண்வகை வழிகள்) ஆசைகளை வென்று விடலாம்.

**37. புத்தரின் எண்வகை வழிகள் யாவை?**

- நல்ல நம்பிக்கை
- நல்ல எண்ணம்
- நல்ல பேச்சு
- நல்ல செயல்
- நல்ல வாழ்க்கை
- நல்ல முயற்சி
- நல்ல அறிவு
- நல்ல தியானம்

**38. புத்தரின் போதனைகள் யாவை?**

- புத்தரின் போதனைகள் 'தம்மா' ந்ன்று குறிப்பிடப்படுகின்றன.
- கர்மா கோட்பாட்டை பௌத்தம் ஏற்றுக் கொண்டது. (ஒருவனுடைய செயல்களே அவனது வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கிறது என்பதாகும்).
- புத்தர் கடவுளின் இருப்பை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. ஆனால் பிரபஞ்ச விதிகளை நம்பினார்.
- நிர்வாண நிலை அடைவதே வாழ்க்கையின் இறுதி நோக்கம் என்று புத்தர் வலியுறுத்தினார்.
- புத்தர் அகிம்சையை வலியுறுத்தினார்.
- சாதிபடிநிலையினை புத்தர் நிராகரித்தார்.
- வாழ்க்கைச் சக்கரம் - உலகைப் பற்றிய புத்தரின் பார்வையை பிரதிபலிக்கிறது.

**39. பிட்சுக்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் யார்?**

புத்தர் தனது கருத்துக்களைப் பரப்புவதற்காக சங்கம் ஒன்றை நிறுவினார். அதில் உறுப்பினர்களாக இருந்த துறவிகள் 'பிட்சுக்கள்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர்.

**40.**

- சைத்தியம் - ஒரு பௌத்தக் கோவில் அல்லது தியானக்கூடம்.
- விகாரைகள் - மடாலயங்கள் / துறவிகள் வாழும் இடங்கள்.
- ஸ்தூபி- புத்தருடைய உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடம். இவை கலைத்திறமை வாய்ந்த நினைவுச்சின்னங்கள் ஆகும்.

**41. பௌத்தப் பிரிவுகள் யாவை?**

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| • புத்தரின் சிலைகளையோ உருவப் படங்களையோ வணங்க மாட்டார்கள்.<br>• மிக எளிமையாக இருப்பர்.<br>• தனிமனிதர்கள் முக்தி அடைவதே தங்களின் நோக்கம் என்று நம்பினர்.<br>• பிராகிருத மொழியைப் பயன்படுத்தினர்.<br>• ஹீனயானம் தேரவாதம் என்றும் அழைக்கப்படுகிறது. | • புத்தரின் உருவங்களை வணங்கினர்.<br>• விரிவான சடங்குகளைப் பின்பற்றினர்.<br>• அனைத்து உயிரினங்களும் முக்தி பெறுவதே தங்களது நோக்கம் என நம்பினர்.<br>• சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர்.<br>• இப்பிரிவு மத்திய ஆசியா இலங்கை, பர்மா, நேபாளம், திபெத், சீனா, ஜப்பான், ஆகிய நாடுகளில் பரவியது. இந்நாடுகளில் மத்திம வழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

**42. பௌத்தம் பரவியதற்கான காரணங்கள் யாவை?**

- புத்தரின் போதனைகள் மிக எளிமையாக உள்ளூர் மக்கள் பேசிய மொழிகளில் இருந்தன.
- விரிவான மதச் சடங்குகளை பௌத்தம் நிராகரித்தது. மாறாக பண்டைய வேதமதம் செலவு மிக்க சடங்குகளையும் வேள்விகளையும் நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது.
- மக்கள் தம்மத்தைக் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்தியது.
- புத்தரின் கருத்துக்களைப் பரப்பியதில் பௌத்த சங்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.
- அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் போன்ற அரசர்கள் பௌத்தம் பரவுவதற்கு ஆதரவு அளித்தனர்.
- பௌத்த விகாரைகள் அல்லது மடாலயங்கள் சிறந்த கல்வி மையங்களாகச் செயல்பட்டன. அவற்றில் ஒன்று நாளந்தா அங்கு சீனயாத்ரிகர் யுவான் –சுவாங் பல ஆண்டுகள் தங்கி கல்வி பயின்றார்.

**43. சுவரோவியங்கள் என்பவை யாவை?**

மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள அஜந்தா குகைகளின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதக கதைகளை சித்தரிக்கின்றன.

**44. இடை வழி (அ) நடுவு நிலை வழி என்றால் என்ன?**

உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.

**45. சமணம் மற்றும் பௌத்தத்தின் ஒற்றுமைகள் யாவை?**

- மகாவீரர், புத்தர் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்கள் அரச குடும்ப உரிமைகளை நிராகரித்து, துறவு வாழ்க்கையைத் தேர்வு செய்தனர்.

- வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தனர்.
- மக்கள் பேசிய மொழிகளில் போதித்தனர்.
- அனைத்து சாதியினரையும், பெண்களையும், சீடர்களாக ஏற்றுக் கொண்டனர்.
- இரத்த பலிகளை எதிர்த்தனர்.
- 'கர்மா' என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.
- மதச் சடங்குகளை நடத்துவதன் மூலம் முக்தி அடையமுடியும் என்பதற்கு மாறாக சரியான நடத்தையும் சரியான அறிவுமே முக்திக்கான வழி எனக் கூறினர்.

**46. சமணம் மற்றும் பௌத்தத்தின் வேறுபாடுகள் யாவை?**

| சமண மதம் | பௌத்த மதம் |
|---|---|
| • சமணம் தீவிரமான துறவறத்தைப் பின்பற்றியது.<br>• இந்தியாவில் மட்டுமே இருந்தது.<br>• கடவுள் இருப்பதாக சமணம் நம்பவில்லை. ஆனால் ஒவ்வொரு உயிரியிலும் ஜீவன் இருப்பதை நம்பியது. | • பௌத்தம் இடைப்பட்ட வழியைப் பின்பற்றியது.<br>• உலகத்தின் பல பகுதிகளிலும் பரவியது.<br>• அனாத்மா (எல்லையற்ற ஆன்மா) அனித்யா (நிலையாமை) ஆகிய கருத்துகளுக்கு அழுத்தம் வழங்கியது. |

**47. பௌத்த மாநாடுகள் நடைபெற்ற இடங்கள் யாவை?**

- முதலாவது - இராஜகிருகம்
- இரண்டாவது - வைசாலி
- மூன்றாவது - பாடலிபுத்திரம்
- நான்காவது - காஷ்மீர்

**48. தமிழ்நாட்டில் பௌத்தத்தின் செல்வாக்கு என்ன?**

- சமணத்திற்கு மிகவும் பிற்பட்டே தமிழகத்தில் பௌத்தம் பரவியது.
- சங்க காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த இலக்கியமாகும்.
- மணிமேகலையில் காஞ்சிபுரம் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் புகழ் பெற்ற ஒரு பௌத்த மையமாகும். பௌத்த தர்க்கவியல் அறிஞரான தின்னகர் மற்றும் நாளந்தா பல்கலைக் கழகத்தின் மிகப்பெரும் அறிஞர் தர்மபாலர் இவ்வூரைச் சேர்ந்தவர் ஆவார்.
- கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார். அங்கு அசோகரால் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள ஸ்தூபியை அவர் பார்த்தாய்க் குறிப்பிட்டுள்ளார்.

**49. ஜாதகக் கதைகள்:**

ஜாதகக் கதைகள் புகழ் பெற்றவை. புத்தர் முந்தைய பிறவிகளில் மனிதராகவும், விலங்காகவும் இருந்ததைக் குறித்த கதைகளாகும். இவை அறநெறிகளைக் கூறுவன ஆகும்.

# 6th Social Science Lesson 11 Notes in Tamil

## 11. குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

1. **கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் என்ன?**
    - கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் புதிய பிராந்திய அரசுகள் உருவாயின.
    - இதன் விளைவாக கங்கைச் சமவெளியில் வாழ்ந்த மக்களின் அரசியல் சமூகப் பொருளாதார வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.
    - வட இந்தியாவில் புதிய அறிவு மலர்ச்சி தோன்றி வளரத் தொடங்கியது.
    - மகாவீரரும் கௌதம புத்தரும் இந்த புது எழுச்சிக்கு வித்திட்டனர்.
2. **சமூகத்தை மாற்றியதில் இரும்பின் பங்கு என்ன?**
    - சமூக மாற்றத்தில் **இரும்பு** குறிப்பிடத்தக்கப் பங்கினை வகித்தது.
    - கங்கைச் சமவெளியின் **வளமான மண், இரும்பினாலான கொழுமுனையின் பயன்பாடு** ஆகியவற்றால் வேளாண் உற்பத்தி அதிகரித்தது.
    - இத்துடன் இரும்பு, கைவினைப் பொருட்களின் உற்பத்தியை எளிதாக்கியதோடு அதிகரிக்கவும் உதவியது.
    - வேளாண் உபரியும், அதிக அளவிலான கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் வணிக மற்றும் பரிமாற்ற மையங்களைத் தோற்றுவித்தன.
    - இவ்வளர்ச்சி நகரங்களும் பெருநகரங்களும் உருவாவதற்கு வழி வகுத்தது.
    - இரும்பைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட நிபுணத்துவம் மற்றைய மகாஜனபதங்களைவிட மகதம் எழுச்சி பெற முக்கிய காரணமாயிற்று.
3. **'கணா'** என்னும் சொல் சரிசமமான சமூக அந்தஸ்தைக் கொண்ட மக்களைக் குறிக்கும். **'சங்கா'** என்றால் **'மன்றம்'** என்று பொருள். கண சங்கங்கள் சிறிய நிலப்பகுதியில் மேட்டுக்குடி மக்களைக் கொண்ட குழுவால் ஆளப்பட்டது. கண சங்கங்கள் சமத்துவ மரபுகளைப் பின்பற்றின.
4. **'முடியாட்சி'** அரசு என்பது ஒரு நிலப்பகுதியை அரசனோ அல்லது அரசியோ ஆள்வதாகும். முடியாட்சி முறை அரசில் ஒரு குடும்பம் நீண்ட காலம் ஆட்சி செய்யும்போது அது அரச வம்சமாக மாறுகிறது. இந்த அரசுகள் வைதீக வேத மரபுகளைப் பின்பற்றின.
5. **கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் செயல்பட்ட இருவகை அரசுகள் யாவை?**
    - **கண-சங்கங்கள்** - முடியாட்சி முறைக்கு முன்னால் மேட்டுக்குடி மக்கள் அடங்கிய குழுவின் ஆட்சி.
    - **முடியாட்சி அரசுகள்** – மன்னராட்சி முறையில் அமைந்தவை.
6. **ஜனபதங்கள் என்றால் என்ன?**

மக்கள் குழுவான குடியேறிய தொடக்ககால இடங்களே **ஜனபதங்கள்** ஆகும். பின்னர் ஜனபதங்கள் குடியரசுகளாகவோ, சிற்றரசுகளாகவோ ஆனது.

7. **மகாஜனபதங்கள் என்றால் என்ன?**

கங்கைச் சமவெளியில் இரும்பின் பரவலான பயன்பாட்டால் பரந்து விரிந்த மக்கள் வாழும் பகுதிகள் தோன்றின. இதனால் ஜனபதங்கள் மகாஜனபதங்களாக மாற்றம் பெற்றன.

8. **பதினாறு மகாஜனபதங்கள் ("பெரும் அரசுகள்")**

- கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் சிந்து கங்கைச் சமவெளியில் பதினாறு மகாஜனபதங்கள் இருந்தன.
- இது நாடோடி வாழ்க்கை முறையையும், இரத்த உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்த ஒரு சமூகம், வேளாண் சமூகமாக மாறத் தொடங்கிய காலம் ஆகும்.
- அத்துடன் வணிகம் செய்யவும், பரிமாற்றம் செய்யவும் தொடங்கியது.
- எனவே நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் வலுவான ஆட்சி அவசியமாயிற்று. அதற்கு மையப்படுத்தப்பட்ட அரசு தேவைப்பட்டது.

9. **கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் இருந்த நான்கு முக்கிய மகாஜனபதங்கள் யாவை?**

- **மகதம்** - பீகார்
- **அவந்தி** - உஜ்ஜைனி
- **கோசலம்** - கிழக்கு உத்திரப்பிரதேசம்
- **வத்சம்** - கோசாம்பி, அலகாபாத்

10. **நான்கு மகாஜனபதங்களில் எது பேரரசாக உருவானது?**

மகதம்




மகதப் பேரரசு

11. **மகதத்தின் எழுச்சிக்கான காரணங்கள் யாவை?**

- மகதம் கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் அமைந்து இருந்தது. வளம் மிகுந்த இந்தச் சமவெளி வேளாண் விளைச்சலை அதிகரித்தது. இது அரசுக்கு நிலையான, கணிசமான வருமானத்தை அளித்தது.
- அடர்ந்த காடுகள் கட்டுமானங்களுக்குத் தேவையான மரங்களையும் படைகளுக்குத் தேவையான யானைகளையும் வழங்கியது.
- அதிக அளவிலான இயற்கை வளங்கள் குறிப்பாக இரும்பு ஆயுதங்கள் செய்யவும் மேம்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியது.
- வணிக, வர்த்தக வளர்ச்சி மக்களை இடம்விட்டு இடம் சென்று கலை மற்றும் தொஃழில் மையங்களில் குடியேறச் செய்தது.
- இவற்றின் விளைவாக நகரமயமாதல் ஏற்பட்டு மகதம் பேரரசாக எழுச்சி பெற்றது.

**12. பண்டைய மகதத்தை ஆண்ட அரச வம்சங்கள் யாவை?**

- ஹரியங்கா வம்சம்
- சிசுநாக வம்சம்
- நந்த வம்சம்
- மௌரிய வம்சம்

**13. ஹரியங்கா வம்சம்:**

- மகதத்தின் படிப்படியான அரசியல் மேலாதிக்க வளர்ச்சி ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர் காலத்தில் தொடங்கியது.
- படையெடுப்பு, திருமண உறவு ஆகிய வழிகளில் பிம்பிசாரர் லிச்சாவி, மதுரா மற்றும் கோசல ஆகிய பகுதிகளில் தமது அரசை விரிவுபடுத்தினார். அவருடைய மகன் அஜாதசத்ரு (புத்தரின் சமகாலத்தவர்) ராஜகிரகத்தில் முதல் பௌத்த சபை மாநாட்டைக் கூட்டினார்.
- அவருடைய வாரிசான உதயன் பாடலிபுத்திரத்தில் புதிய தலைநகருக்கான அடித்தளமிட்டார்.

**14. சிசுநாக வம்சம்:**

- ஹர்யங்கா அரச வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக அரச வம்சத்தினர் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.
- இவ்வம்சத்தைச் சேர்ந்த அரசர் காலசோகா தலைநகரை ராஜகிரகத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றினார்.
- இவர் இரண்டாம் பௌத்த மாநாட்டை வைசாலியில் கூட்டினார்.

**15. நந்த வம்சம்:**

- நந்தர்களே இந்தியாவில் முதன்முதலாகப் பேரரசை உருவாக்கியவர்கள் ஆவர்.
- முதல் நந்தவம்ச அரசர் மகாபத்ம நந்தர் ஆவார்.
- அவரைத் தொடர்ந்து அவருடைய எட்டு மகன்களும் ஆட்சி செய்தனர்.

- அவர்கள் நவநந்தர்கள் (ஒன்பது நந்தர்கள்) என்றழைக்கப்பட்டனர்.
- கடைசி அரசரான தனநந்தர் சந்திரகுப்த மௌரியரால் வெற்றி கொள்ளப்பட்டார்.

16. **நாளந்த – யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னம்**

நாளந்தா பண்டைய மகத நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஆகும். குப்தர்களின் காலத்தில் அது மிகப் புகழ் பெற்ற கல்வி மையமாகத் திகழ்ந்தது. நாளந்தா என்னும் சமஸ்கிருதச் சொல் நா+அலம்+தா என்ற மூன்று சமஸ்கிருத சொற்களின் இணைப்பில் உருவானது. இதன் பொருள் 'வற்றாத அறிவை அளிப்பவர்' என்பதாகும்.

17. **மௌரியப் பேரரசுக்கான சான்றுகள்:**

| **தொல்லியல் சான்றுகள்** | **முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள்** |
|---|---|
| கல்வெட்டுகள் | அசோகரின் கல்வெட்டுப் பேராணைகள், ஜுனாகத் கல்வெட்டு ஆகியவை. |
| மதச்சார்பற்ற இலக்கியங்கள் | கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் விசாகதத்தரின் முத்ராராட்சஷம் மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் |
| மதம் சார்ந்த இலக்கியங்கள் | சமண, பௌத்த நூல்கள், புராணங்கள் |
| வெளிநாட்டுச் சான்றுகள் | தீபவம்சம், மகாவம்சம், இன்டிகா. |

18. **மெகஸ்தனிஸ்**

கிரேக்க ஆட்சியாளர் **செலுக்கஸ் நிகேட்டரி**ன் தூதுவராக, **சந்திரகுப்த மௌரிய** அரசவையில் இருந்தவர். பதினான்கு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார். அவர் எழுதிய நூலின் பெயர் இண்டிகா. மௌரியப் பேரரசைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு முக்கியச் சான்றாகும்.

19. **இந்தியாவின் முதல் பேரரசு எது?**

மௌரியப் பேரரசு

20. **மௌரியப் பேரரசின் தலைநகரம் எது?**

பாடலிபுத்திரம் (தற்போதைய பாட்னா)

21. **மௌரியப் பேரரசின் அரசு :** முடியாட்சி
22. **மௌரியப் பேரரசின் வரலாற்றுக் காலம்** : ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு.) 322 முதல் 187 வரை
23. **மௌரியப் பேரரசின் முக்கிய அரசர்கள்** : சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர்.
24. பௌரியப் பேரரசின் மாபெரும் தலைந்கரான பாடலிபுத்திர நகருக்கு 64 நுழைவு வாயில்களும் 570 கண்காணிப்பு கோபுரங்களும் இருந்தன.
25. **சந்திரகுப்த மௌரியர்:**

- மௌரியப் பேரரசே இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும்.

- சந்திரகுப்த மௌரியர் இப்பேரரசை மகதத்தில் நிறுவினார்.
- **பத்ரபாகு** எனும் சமணத்துறவி சந்திரகுப்தரை தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்றார்.
- சந்திரகுப்தர் சரவணபெலகொலாவில் (கர்நாடகா) சமணச் சடங்கான சல்லேகனா செய்து உயிர் துறந்தார். (சல்லேகனா என்பது உண்ணா நோன்பிருந்து உயிர் துறத்தல் ஆகும். இது ஒரு சமணச் சடங்கு முறையாகும்.)

**26. பிந்துசாரார்:**

- பிந்துசாரரின் இயற்பெயர் **சிம்ஹசேனா**.
- இவர் **சந்திரகுப்த மௌரியரின்** மகன் ஆவார்.
- கிரேக்கர்கள் பிந்துசாரரை **அமிர்தகதா** என்று அழைத்தனர்.
- அதன் பொருள் **'எதிரிகளை அழிப்பவன்'** என்பதாகும்.
- பிந்துசாரரின் ஆட்சியின்போது மௌரியரின் ஆட்சி இந்தியாவின் பெரும்பகுதியில் பரவியது.
- அவர் தனது **மகன் அசோகரை உஜ்ஜைனியின் ஆளுநராக** நியமித்தார்.
- அவருக்குப்பின் அசோகர் மகதத்தின் அரசரானார்.

27. **அசோகர்**

- மௌரிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர் ஆவார்.
- அவர் '**தேவனாம்பிரியர்**' என்றழைக்கப்பட்டார்.
- **'கடவுளுக்குப் பிரியமானவன்'** என்பது இதன் பொருள் ஆகும்.
- அசோகர் கி.மு. (பொ.ஆ.மு.) 261ல் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார்.
- அப்போரில் வென்று **கலிங்கத்தைக்** கைப்பற்றினார்.
- அப்போரின் பயங்கரத்தை அசோகரே தன்னுடைய 13வது பாறைக் கல்வெட்டில் விவரித்துள்ளார்.

28. **"அசோகர் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல இன்று வரை ஒளிர்கிறார்"** - H.G.வெல்ஸ் – வரலாற்றறிஞர்

**29. அசோகர் எப்போது பௌத்தர் ஆனார்?**

கலிங்கப்போருக்குப் பின்

**30. அசோகரின் இரண்டாம் தூண் கல்வெட்டு:**

- இதில் தர்மத்தின் பொருள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.
- அது அனைத்து மதங்களின் சாரமாகவுள்ள மிக உயர்ந்த கருத்தான மனிதாபிமானத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

31. **சந்த அசோகர்** - தீய அசோகர்

**தம்ம அசோகர்** - நீதிமான் அசோகர்

**32. அசோகர் எவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்?**

- இரக்க உணர்வு
- அறக்கொடை
- தூய்மை
- புனிதத்தன்மை
- சுய-கட்டுப்பாடு
- உண்மையுடைமை
- மூத்தோர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரிடத்தில் மரியாதையுடனும், பணிவுடனும் நடந்து கொள்ளல்.




**33. சிங்கமுகத் தூண்:**

சாரநாத்திலுள்ள அசோகருடைய தூணின் சிகரப் பகுதியில் அமைந்துள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், வட்ட வடிவ அடிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சக்கரம் இந்தியாவின் தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

34. அசோகர் தன்னுடைய **மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் பௌத்தத்தைப் பரப்புவதற்காக** இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.
35. தம்மத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக மேற்கு ஆசியா, எகிப்து, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு சமயப்பரப்பாளர்களை அனுப்பி வைத்தார்.
36. அசோகர் தர்ம-மகாமாத்திரர்கள் என்னும் புதிய அதிகாரிகளை நியமித்தார்.
37. பேரரசு முழுவதிலும் பௌத்தமதத்தைப் பரப்புவதே அவர்களுடைய பணியாகும்.
38. அசோகர் தனது தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாம் பௌத்தமத மாநாட்டைக் கூட்டினார்.
39. **அசோகரின் பேராணைகள்:**
    - பேரரசர் அசோகருடைய ஆணைகள் மொத்தம் முப்பத்திமூன்று.
    - அவைகள் அசோகரால் தூண்களிலும், பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.
    - அவை அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அசோகர் கொண்டிருந்த நம்பிக்கையையும், மக்களின் நலன்மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் விவரிக்கின்றன.
40. **பேராணை என்றால் என்ன?**

    அரசரால் அல்லது உயர் பதவியில் இருப்பவரால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது பிரகடனம் ஆகும்.
41. **அசோகர் கல்வெட்டுகளில் எழுத்துமுறை:**

    சாஞ்சி - பிராமி

    காந்தகார் - கிரேக்கம் மற்றும் அராமிக்

    வடமேற்குப் பகுதிகள் - கரோஸ்தி
42. **அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டுகள் யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?**

    மூவேந்தர்களான பாண்டியர், சோழர், கேரளபுத்திரர் ஆகியோரையும் சத்யபுத்திரர்களையும் குறிப்பிடுகின்றன.
43. **மௌரியப் பேரரசின் நிர்வாகம்:**

    **அரசர்**
    - அரசரே மௌரியப் பேரரசின் மேலான இறையாண்மை மற்றும் அதிகாரம் உடையவர் ஆவார்.
    - 'மந்திரிபரிஷத்' எனும் அமைச்சரவை அரசருக்கு உதவியது. இந்த அமைச்சரவை ஒரு புரோகிதர், ஒரு சேனாபதி, ஒரு மகாமந்திரி மற்றும் இளவரசனைக் கொண்டதாகும்.
    - அரசர் ஒரு மிகச் சிறந்த உளவுத்துறையைக் கொண்டிருந்தார்.

44. **மௌரியப் பேரரசருடைய காலத்தில் வருவாய் முறை எப்படி இருந்தது?**

- நிலங்களே அரசுக்கு அதிக வருவாயை ஈட்டுத் தந்தது. லும்பினியிலுள்ள அசோகரது கல்வெட்டு பாலி மற்றும் பாகா என்னும் இரண்டு வரிகளைக் குறிப்பிடுகின்றது.
- மொத்த விளைச்சலில் 1/6 பங்கு (பாகா) நிலவரியாக வசூல் செய்யப்பட்டது.
- காடுகள், சுரங்கங்கள், உப்பு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வரிகள் அரசுக்கு கூடுதல் வருவாயாக அமைந்தன.
- அரசு வருவாயில் பெரும்பகுதி இராணுவத்திற்கான ஊதியம், அரசு அதிகாரிகளுக்கான ஊதியம், அறக் கட்டளைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல் போன்ற பொதுப்பணிகள் ஆகியவைகளுக்காகச் செலவழிக்கப்பட்டது.

**45. மௌரியப் பேரரசருடைய காலத்தில் நீதி நிர்வாகம் எப்படி இருந்தது?**

- அரசரே நீதித்துறையின் தலைவராவார். அவரே மேல்முறையீட்டு நீதிமன்றமும் ஆவார்.
- அரசர் தனக்குக் கீழாக பல துணை நீதிபதிகளை நியமித்தார். தண்டனைகள் கடுமையாக இருந்தன.

**46. மௌரியர் காலத்தில் படைகளின் தலைமைத் தளபதி யார்?**

அரசர்

47. முப்பது நபர்களைக் கொண்ட குழு **ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களாகப்** பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குழுவும் கீழ்க்கண்டவற்றை நிர்வாகம் செய்தது.

- கடற்படை
- ஆயுதங்கள் (போக்குவரத்து மற்றும் விநியோகம்)
- காலாட்படை
- குதிரைப்படை
- தேர்ப்படை
- யானைப்படை

**48. மௌரியர் காலத்தில் நகராட்சி நிர்வாகம்(நகரம் மற்றும் மாநகரம்) எப்படி இருந்தது?**

- நகரத்தை நிர்வாகம் செய்வதற்காக 30 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது 5 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- நகரம் நிர்வாகம் 'நகரிகா' என்னும் அதிகாரியின் கீழிருந்தது. அவருக்கு ஸ்தானிகா, கோபா எனும் அதிகாரிகள் உதவி செய்தனர்.

49. **ருத்ரதாமனின் ஜுனாகத்/கிர்னார் கல்வெட்டு சுதர்சனா ஏரி** எனும் நீர்நிலை உருவாக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் தொடங்கப்பட்டது. அசோகரின் காலத்தில் பணிகள் நிறைவு பெற்றன.

**50. மௌரியர் காலத்தில் அரசினுடைய நாணயங்கள் யாவை?**

மயில், மலை மற்றும் பிறைச் சந்திர வடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் (பணம்), 'மாஸாகாஸ்' என்று அழைக்கப்பட்ட செப்பு நாணயங்கள் ஆகியன அரசினுடைய நாணயங்களாக இருந்தன.

51. மௌரியர் காலத்தில் வணிகம் செழிப்புற்றது. குறிப்பாக **கிரேக்கம் (ஹெலனிக்) மலேயா, இலங்கை, பர்மா** ஆகிய நாடுகளுடன் பெருமளவு வணிகம் நடைபெற்றது.

52. **காசி (பனாரஸ்), வங்கா (வங்காளம்), காமரூபா (அஸ்ஸாம்) மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மதுரை** ஆகிய இடங்களில் சிறப்பு மிக்க **துணிகள் உற்பத்தி** செய்யப்பட்டன என்று அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது.

**53. மௌரியர் காலத்தில் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் யாவை?**

நறுமணப் பொருள்கள், முத்துக்கள், வைரங்கள், பருத்தி இழை துணி, தந்தத்தினாலான பொருட்கள், சங்குகள், சிப்பிகள் ஆகியவை.

**54. மௌரியர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?**

குதிரைகள், தங்கம், கண்ணாடிப் பொருட்கள், பட்டு(லினன்) ஆகியவை.

**55. மௌரியர் கால கலையின் இரண்டு வகைகள் யாவை?**

- **உள்ளூர்க் கலை** - யக்ஷன் , யக்ஷி உருவச் சிலைகள்.
- **அரச கலைகள்** - அரண்மனைகள் மற்றும் பொதுக் கட்டடங்கள், ஒற்றைக்கல் தூண்கள், பாறை குடைவரைக் கட்டடக்கலை, ஸ்தூபிகள்.

**56. யக்ஷன் மற்றும் யக்ஷி என்பதன் பொருள் என்ன?**

**யக்ஷன்** என்பது நீர், வளம், மரங்கள், காடுகள் , காட்டுச்சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் ஆவார்.

**யக்ஷி** என்பது யக்ஷாவின் பெண்வடிவமாகும்.

**57. ஸ்தூபி என்றால் என்ன?**

- ஸ்தூபியானது செங்கல் அல்லது கற்களால் கட்டப்பட்டுள்ள அரைக்கோள வடிவமுடைய குவிமாடம் போன்ற அமைப்பாகும்.
- புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

58. **சாரநாத்திலுள்ள ஒற்றைக்கல்** தூணின் சிகரப்பகுதியில் **தர்மச்சக்கரம்** இடம் பெற்றுள்ளது.

59. **நாகார்ஜுனா பராபர்** குன்றுகளிலுள்ள பாறை குடைவரைக் குகைக் கோவில்கள்.

**60. அசோகருடைய அர்ப்பணிப்புக் கல்வெட்டுகள் எங்குள்ளன?**

பராபர் குன்றிலுள்ள மூன்று குகைகள்

**61. தசரத மௌரியரின் கல்வெட்டுகள் எங்கு இடம்பெற்றுள்ளன?**

நாகர்ஜுன கொண்டாவிலுள்ள மூன்று குகைகள்

**62. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?**

- அசோகருக்குப் பின்வந்த அரசர்கள் மிகவும் வலிமை குன்றியவர்களாக இருந்தனர்.
- பேரரசின் பல பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்ற கலகங்கள்.
- பாக்டீரிய நாட்டைச் சேர்ந்த கிரேக்கர்களின் படையெடுப்பு பேரரசை மேலும் வலிமை குன்றச் செய்தது.
- மௌரியப் பேரரசின் கடைசி அரசர் பிருகத்ரதா அவருடைய படைத்தளபதியான புஷ்யமித்ர சுங்கரால் கொல்லப்பட்டார். அவரே சுங்க அரசவம்சத்தை நிறுவினார்.

63.

| **பண்டைய பெயர்** | **தற்போதைய பெயர்** |
|---|---|
| ராஜகிரகம் | ராஜ்கிர் |
| பாடலிபுத்திரம் | பாட்னா |
| கலிங்கா | ஒடிசா |

64. **சீனப்பெருஞ்சுவர்:** இது பழங்காலத்தில் கட்டப்பட்ட தொடர்ச்சியான பல கோட்டைச் சுவராகும் குன் –சி-ஹங் என்னும் பேரரசர் தனது பேரரசின் வட எல்லையை பாதுகாப்பதற்காக கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சுவர்களை இணைத்தார்.

65. **ஒலிம்பியாவின் ஜியஸ் கோவில்:** கிரிஸ்நாட்டில் உள்ள ஒலிம்பியாவில் கி.மு. (பொ.ஆ.மு.) ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் ஜியஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.

## 6th Social Science Lesson 12 Notes in Tamil

## 12. வளங்கள்

1. **சூரிய ஒளித்தகடு என்றால் என்ன?**

மணல் என்ற இயற்கை வளத்திலிருந்து **சிலிக்கான்** என்ற தனிமத்தை பிரித்து அதிலிருந்து **PV (Photo Voltaic) செல்**களைப் பயன்படுத்தி ஒளி மின்னழுத்தக் கலம் தயாரிக்கப்படுகிறது. இவை **சூரிய ஆற்றலை மின்னாற்றலாக** மாற்றுகின்றன.

2. **உற்பத்தி செய்யப்பட்ட வளங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்

3. **வளம் என்றால் என்ன?**

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்தவொரு பொருளும் வளமாகும்.

4. **எதனைப் பொறுத்து மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது?**

பொருளின் பயன்பாட்டைப் பொறுத்துதான் அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

5. **மதிப்பு என்றால் என்ன?**

மதிப்பு என்பது **பண மதிப்புள்ளதாகவோ, பணமதிப்பற்றதாகவோ** இருக்கலாம். பொருளாதாரத்தில் பணமதிப்புள்ள வளங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. (எ.கா) பெட்ரோலியம்.

பணமதிப்பற்ற வளங்கல் எளிதில் கிடைக்கக்கூடியதாக இருக்கும். (எ.கா) காற்று.

6. **ஒரு பொருளை வளமாக மாற்றுவதற்கான காரணிகள் யாவை?**

காலமும் தொழில்நுட்பமும்

7. நிலக்கரியும், பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வரும் இக்காலகட்டத்தில், புதிய கண்டுபிடிப்பான சூரியத்தகடுகள், **சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்ற உதவுகிறது** எனவே தற்போது **இது ஒரு சிறந்த வளமாகவே நீடிக்கிறது.**

8. **வளங்களின் வகைகள் யாவை?**

   1) இயற்கை வளங்கள்
   2) மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் மற்றும்
   3) மனித வளங்கள்

9. **இயற்கை வளங்கள் (Natural Resources) என்றால் என்ன?**

- இயற்கையிலிருந்து நேரடியாகப் பெறப்படும் அனைத்து வளங்களும் **இயற்கை வளங்கள்** எனப்படும்.
- காற்று, நீர், மண், கனிமங்கள், நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்தும் இயற்கை வளங்களாகும்.

- இயற்கை வளங்களின் பயன்பாடானது அவைகள் காணப்படும் இடம், காணப்படும் நிலை மற்றும் அதை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் தொழில்நுட்பத்தினைச் சார்ந்திருக்கும்.

**10. இயற்கை வளங்களை எவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்?**

இயற்கை வளங்களை அதன் **தோற்றம், வளர்ச்சிநிலை, புதுப்பித்தல், பரவல் மற்றும் உரிமை** ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

**11. தோற்றத்தின் அடிப்படையில் வளங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

- உயிரியல் வளங்கள் (Biotic Resources)
- உயிரற்ற வளங்கள் (Abiotic Resources)

**12. உயிரியல் வளங்கள் என்றால் என்ன?**

உயிருள்ள அனைத்தும் உயிரியல் வளங்கள் எனப்படும். உதாரணமாக தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள்.

**13. உயிரற்ற வளங்கள் என்றால் என்ன?**

உயிரில்லாத அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் எனப்படும். உதாரணமாக நிலம், நீர் , காற்று மற்றும் கனிமங்கள்.




**14. மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்ன?**

உணவு, உடை, இருப்பிடம்

15. உலகில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் மனிதனால் அடையாளம் காணப்பட்ட பிறகுதான் உயிரியல் வளங்களாக அறியப்பட்டன.

**16. தன் தேவைகளை நிறைவேற்ற மனிதன் ஈடுபட்ட செயல்பாடுகள் யாவை?**

- முதல்நிலை செயல்பாடுகளான **வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மீன்பிடித்தல் மற்றும் காட்டு வளங்களை சேகரித்தல்** போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டான்.
- அதன் பின்னர் வளங்களில் பற்றாக்குறை ஏற்பட்டதால் **விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பின்** மூலமாக தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டான்.

**17. மனிதன் முதன் முதலில் எதனைக் கொண்டு கருவிகள் செய்தான்?**

கற்கள்

**18. மனிதன் கருவிகள் செய்ய தோண்டும்போது கண்டுபிடித்த வளங்கள் எவை?**

தாமிரம் மற்றும் இரும்பு

**19. சுரங்கத்தொழில் எவ்வாறு உருவானது?**

மனிதன் கருவிகளைச் செய்ய வேறு மாற்று வளங்களைத் தேடி புவியைத் தோண்டினான். அவ்வாறு தோண்டும்போது முதல் தாமிரத்தையும் பின்பு இரும்பையும் கண்டுபிடித்தான். இவற்றைத் தேடும் முயற்சியின்போதுதான் வேறு சில விலைமதிப்புள்ள உலோகங்களையும் கண்டறிந்து அவற்றினால் அணிகலன்கள் செய்தான். இவ்வாறு சுரங்கத்தொழில் உருவானது. இன்றைய நிலையிலும் சுரங்கத் தொழில்தான் அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளிலும் முன்னிலை வகிக்கிறது.

**20. வளர்ச்சிநிலையின் அடிப்படையில் வளங்களின் வகைகள் யாவை?**

- கண்டறியப்பட்ட வளங்கள் (Actual Resources)
- மறைந்திருக்கும் வளங்கள் (Potential Resources)

**21. கண்டறியப்பட்ட வளங்கள் என்றால் என்ன?**

தற்போது பயன்படுத்தப்படுவதும் அதன் இருப்பின் அளவும் அறியப்பட்டிருக்கிறது. (எ.கா) நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்

**22. மறைந்திருக்கும் வளங்கள் என்றால் என்ன?**

தற்பொழுது அதிக பயன்பாட்டில் இல்லாததும், அதன் அளவு மற்றும் இருப்பிடம் அறியப்படாமல் இருப்பதாகும். இவ்வளத்தினை எடுத்து பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை.

(எ.கா) வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலில் காணப்படும் கடல் ஈஸ்ட் (Marine Yeast)

23. **கடல் ஈஸ்ட்டானது** (Marine Yeast) நிலப்பரப்பிலுள்ள ஈஸ்டைவிட (Terrestrial Yeast) **மிகுந்த ஆற்றல் உடையது**. இச்சத்தை ரொட்டி தயாரித்தல், மது வடித்தல், திராட்சை ரசம் தயாரித்தல், உயிரி எத்தினால் தயாரித்தல் மற்றும் மருத்துவப்புரதம் தயாரித்தலுக்குப் பயன்படுகிறது.

**24. புதுப்பித்தலின் அடிப்படையில் வளத்தின் வகைகள் யாவை?**

- புதுப்பிக்கக்கூடிய வளங்கள் (Renewable Resources)
- புதுப்பிக்க இயலா வளங்கள் (Non Renewable Resources)

**25. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் என்றால் என்ன?**

ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள், **புதுப்பிக்கக்கூடிய வளங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

எ.கா: காற்று, நீர், சூரிய ஒளி ஆகும்.

**26. புதுப்பிக்க இயலா வளங்கள் என்றால் என்ன?**

குறிப்பிட்ட அளவில் உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும்.

எ.கா: நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு மற்றும் கனிமங்கள் ஆகும்.

**27. பயன்பாட்டிற்கு வராத வளங்கள் (அ) மறைந்திருக்கும் வளங்கள் என்றால் என்ன?**

மனிதன் புதிய பொருள்களை, வளமா அல்லது வளமற்றதா என்று பல ஆய்வுகள் செய்து அறிந்த பின்பு, அவற்றைப் பிரித்தெடுக்க புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அப்பொருளின் பரவலைக் கண்டறிய முயல்கிறான். எனவே இவ்வகை வளங்கள் பயன்பாட்டிற்கு வராத வளங்கள் அல்லது மறைந்திருக்கும் வளங்கள் (Potential Resources) ஆகும். **காற்றின் ஆற்றல் இவற்றில் ஒன்றாகும்.**

28. **பரவலின் அடிப்படையில் வளங்களின் வகைகள் யாவை**?

- உள்ளூர் வளங்கள்
- உலகளாவிய வளங்கள்

**29. உள்ளூர் வளங்கள் (Localized Resources) என்றால் என்ன?**

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும் வளங்கள் **உள்ளூர் வளங்கள்** (Localized Resources) என்கிறோம். (எ.கா) கனிமங்கள்.

**30. உலகளாவிய வளங்கள் (Universal Resources) என்றால் என்ன?**

சில வளங்கள் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் வளங்கள் உலகளாவிய வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எ.கா: சூரிய ஒளி மற்றும் காற்று.

**31. உரிமையின் அடிப்படையில் வளங்களின் வகைகள் யாவை?**

- தனிநபர் வளங்கள் (Individual Resources)
- சமூக வளங்கள் (Community- owned Resources)
- நாட்டு வளங்கள் (National Resources)
- பன்னாட்டு வளங்கள் (International Resources)

**32. தனிநபர் வளங்கள் என்றால் என்ன?**

தனிநபர் வளங்கள் என்பது, ஒரு தனி நபருக்கு மட்டுமே சொந்தமானவையாகும். எ.கா: அடுக்குமாடிக் கட்டடங்கள்

**33. சமூக வளங்கள் என்றால் என்ன?**

ஒரு பகுதியில் வாழும் மக்கள் தங்கள், பகுதியில் உள்ள வளத்தினைப் பயன்படுத்திக்கொள்வர். இதுவே சமூக வளம் என்று அழைக்கப்படுகிறது. (எ.கா) பூங்கா.

**34. நாட்டு வளங்கள் என்றால் என்ன?**

ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் பெருங்கடல் பகுதிகளுக்கு உட்பட்ட வளங்கள் ஆகும். எ.கா: இந்தியாவின் வெப்பமண்டல மழைக்காடுகள்.

**35. பன்னாட்டு வளங்கள் என்றால் என்ன?**

எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத மிகப்பரந்த திறந்தவெளி பெருங்கடல் பகுதியில் காணப்படும் வளங்கள் பன்னாட்டு வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. **இப்பகுதிக்குட்பட்ட வளங்களை உலக நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களின் மூலமாகவே பயன்படுத்த இயலும்.** (எ.கா) திமிங்கலப் புனுகு.

**36. உலகின் பெரும் மருந்தகம் (world's largest pharmacy) என அழைக்கப்படுவது எது?**

வெப்ப மண்டல மழைக்காடுகள் "**உலகின் பெரும் மருந்தகம்**" என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் தாவரங்களில் **25% தாவரங்கள் மருத்துவ குணம்** கொண்ட தாவரங்களாகும். (எ.கா) சின்கோனா.

**37. ஸ்பெர்ம் திமிங்கலத்தில்** இருந்து பெறப்படும் ஒரு வகை திடப்பொருளே **திமிங்கலப் புனுகு** ஆகும். **ஒரு பவுண்டு (0.454 கி.கி.)** திமிங்கலப்புனுகின் விலை **63,000 அமெரிக்க டாலர்** மதிப்புடையதாகும். இது **வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.**

**38. மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்(Man-Made Resources) என்றால் என்ன?**

இயற்கை வளங்கள் தொழில்நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு, புதிய பொருள்களாகக் கிடைக்கின்றன. அவ்வாறு பெறப்பட்ட வளங்களை **மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்** என்று அழைக்கிறோம். (எ.கா): கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை

39. மனிதனால் உருவாக்கப்படும் எல்லாக் கட்டுமானங்களும் மனிதனால் **உருவாக்கப்பட்ட வளங்களாகும்**. எ.கா: பாலங்கள், வீடுகள், சாலைகள்

**40. இரண்டாம் நிலை செயல்பாடுகள் (Secondary Activities) என்றால் என்ன?**

மூலப்பொருள்களிலிருந்து வேறு பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றும் இச்செயல்பாடு இரண்டாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.

**41. இரண்டாம் நிலை செயல்பாட்டின் அடிப்படைத் தேவைகள் எவை?**

மனிதத் திறனும் அவனது சிந்தனைகளும்

**42. மனித வளம் (Human Resources) என்றால் என்ன?**

இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் **மனித வளம்** என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு இயற்கை வளம்.

**43. மனிதன் ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் என்ன?**

அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**44. மூன்றாம் நிலை செயல்பாடுகள் (Tertiary Activities) என்றால் என்ன?**

முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்வதற்கான போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே **மூன்றாம் நிலை செயல்பாடுகள்** எனப்படும். எ.கா: வங்கி, வணிகம் மற்றும் தகவல் தொடர்புத்துறை

45. ஒரு **நாட்டின் மனித வளம்** அந்நாட்டில் உள்ள **நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தை**ச் சார்ந்துள்ளது.

46. "**வளங்கள் மனிதனின் பேராசைக்கு அன்று, அவனது தேவைக்கு மட்டுமே**" என்று கூறியவர் யார்?

மகாத்மா காந்தி

47. உலகில் வளங்கள் குறைவதற்கு மனித இனமே காரணம் எனக் கூறியவர் யார்?

மகாத்மா காந்தி.

**காரணம்:**

i. வளங்கள் மிகுதியாக எடுக்கப்படுகின்றன.
ii. மனிதத் தேவைகளும் எல்லையை மீறுகின்றன.

ஆகவே, மனிதன் நினைத்தால் மட்டுமே வளங்கள் பாதுகாக்கப்படும்.

**48. வளத்திட்டமிடுதல் / வளமேலாண்மை (Resources planning / Management) என்றால் என்ன?**

வளத்திட்டமிடுதல் என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும். வளத்தினைத் திட்டமிடுதல் என்பது அவசியமான ஒன்றாகும். ஏனெனில்,

i. வளங்கள் மிகவும் குறைவாக உள்ளன. வளத்திட்டமிடுதல் தற்போது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், வருங்காலத் தலைமுறைகளுக்குச் சேமித்து வைக்கவும் உதவிபுரிகிறது.
ii. வளங்கள் மிகக்குறைவாக இருப்பன மட்டுமன்று அவை புவியின்மீது ஒழுங்கற்றப் பரவலுடன் காணப்படுகின்றன.
iii. வளங்களை அதிகச் சுரண்டலில் இருந்து தடுத்துப் பாதுகாக்க வளத்திட்டமிடுதல் அவசியமாகும்.

**49. வளங்களின் பயன்பாடு எதனால் அதிகரிக்கிறது?**

மக்கள் தொகையின் திடீர்ப் பெருக்கத்தினால்

**50. நிலையான வளர்ச்சி (Sustainable Development) என்றால் என்ன?**

நிகழ்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி எனப்படும்.

**51. நிலையான வளர்ச்சி நடைபெறச் செய்தலின் அவசியம் என்ன?**

i. வளங்கள் குறைந்து கொண்டு வருவதற்கான காரணங்களை அறிதல்.
ii. வீணாக்குதலையும், அதிகப்படியான பயன்பாட்டினையும் தடுத்தல்.
iii. மறுபயன்பாடுள்ள வளங்களை மறுசுழற்சி செய்தல்.
iv. மாசைக் கட்டுப்படுத்துதல்.
v. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்
vi. இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாத்தல்.
vii. மாற்று வளங்களைப் பயன்படுத்துதல்.

**52. வளங்களைப் பாதுகாக்கப் பின்பற்றப்படும் வழிமுறைகள் யாவை?**

குறைத்தல் (Reduce), மறுபயன்பாடு (Reuse), மறுசுழற்சி செய்தல் (Recycle)

## 6th Social Science Lesson 13 Notes in Tamil

## 13. தேசிய சின்னங்கள்

1. காட்டின் மைய அச்சு **புலி.**
2. **மயிலுக்கு போர்வையை கொடையாக அளித்த குறுநில மன்னன் யார்?**

   சங்ககால தமிழகத்தைச் சேர்ந்தவரும், கடையேழு வள்ளல்களுள் ஒருவருமான **பேகன்**
3. **தமிழ்நாட்டில் மயில்களுக்கான சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?**

   புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை
4. **"கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம்" என்று புகழ்ந்து பாடியவர் யார்?**

   பாரதியார்
5. **இந்தியாவின் மிக நீண்ட தொலைவுக்குப் பாயும் நதி எது?**

   கங்கை (2525 கி.மீ) (*பாயும் தொலைவு அதிகம்*)
6. **இந்தியாவின் நீளமான நதி எது?**

   பிரம்மபுத்திரா(3848 கி.மீ) (*பாயும் தொலைவு குறைவு*)
7. **கூடு கட்டி, முட்டை வைத்து இனப்பெருக்கம் செய்யும் பாம்பு வகை எது?**

   கருநாகம் (King Cobra).
8. **நஞ்சு கொண்ட பாம்புகளில் உலகிலேயே நீளமானது எது?**

   கருநாகம் (King Cobra). (சாதாரணமாக 18 அடி நீளம் வளரும்)
9. **இயற்கை தேசிய சின்னங்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுகள் யாவை?**

| தேசிய சின்னங்கள் | ஆண்டு |
|---|---|
| **ஆலமரம்**<br>இது பெருமையின் சின்னமாகும். மருத்துவ குணம் கொண்டது. | 1950 |
| **மாம்பழம்**<br>வைட்டமின் ஏ, சி, டி யை அதிக அளவில் கொண்டது. பெரும்பாலும் சமவெளிகளில் விளைவிக்கப்படுகிறது. | 1950 |
| **தாமரை**<br>சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன. | 1950 |
| **மயில்**<br>இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது. தோகையைக் கொண்ட பறவை மயில். | 1963 |
| **புலி**<br>பூனை இனத்தில் மிகப்பெரியது. உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70% கொண்டுள்ளது. | 1973 |
| **கங்கை ஆறு** | 2008 |

| | |
|---|---|
| இது வற்றாத ஆறு. வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின. | |
| **யானை**<br>ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேசங்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. | 2010 |
| **ஆற்று ஓங்கில்**<br>தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது. | 2010 |
| **லாக்சோ பேசில்லஸ்**<br>இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது. | 2012 |
| **ராஜநாகம்**<br>(ஹோஃபிபாகஸ் ஹானா) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன. | |

10. **தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள் யாவை?**

மாநில விலங்கு - வரையாடு

மாநிலப் பறவை - மரகதப் புறா

மாநில மலர் - செங்காந்தள் மலர்

மாநில மரம் - பனைமரம்

11. **நமது தேசியக்கொடியில் அமைந்துள்ள நிறங்கள் குறிப்பன யாவை?**

மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சைநிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

12. **தேசியக் கொடியின் நீள, அகல விகிதம் என்ன?**

3 : 2

13. **தேசியக்கொடியில் உள்ள அசோகச் சக்கரம் எத்தனை ஆரங்களைக் கொண்டுள்ளது?**

**24**

14. **இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் யார்?**

ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா

15. **விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடு எங்கு நெய்யப்பட்டது?**

தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தம் (வேலூர் மாவட்டம்)

16. **தேசியக்கொடியை முதன் முதலில் யார் எங்கு ஏற்றினார்கள்?**

பண்டித ஜவஹர்லால் நேரு, செங்கோட்டை(15.08.1947)

17. **விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி தற்போது எங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது?**

புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை

18. **திருப்பூர் குமரன் பிறந்த ஊர் எது?**

ஈரோடு மாவட்டம் சென்னிமலை

19. **"கொடி காத்த குமரன்" என அழைக்கப்படுபவர் யார்?**

திருப்பூர் குமரன்

20. **சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு எது?**

ஜனவரி 26, 1950

21. **சாரநாத் அசோகத் தூணின் அடிப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள வாக்கியம் என்ன?**

சத்யமேவ ஜெயதே. இதன் பொருள் *"வாய்மையே வெல்லும்"*

22. **சாரநாத் அசோகத் தூணில் உள்ள விலங்குகள் யாவை?**

யானை, குதிரை, காளை, சிங்கம்

23. **யாருடைய காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் எங்கு பாதுகாக்கப்படுகிறது?**

அசோகர் காலம், சாரநாத் அருங்காட்சியகம்

24. **நமது தேசியச் சின்னமான 'ஜன கண மன......' எவற்றை அடையாளச் சின்னமாக விளங்குகிறது?**

இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு

**25. தேசிய கீதத்தை எழுதியவர் யார்?**

இரவீந்திரநாத் தாகூர் (வங்காள மொழி)

**26. தேசிய கீதத்தின் இந்தி மொழியாக்கம் எப்பொழுது இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது?**

ஜனவரி 24, 1950

**27. தேசிய கீதம் முதன் முதலாக எங்கு எப்பொழுது பாடப்பட்டது?**

1911, டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில்

**28. தேசியகீதத்தை எத்தனை வினாடிகளில் பாட வேண்டும்?**

சுமார் 52 வினாடிகள்

**29. வந்தே மாதரம் எனும் பாடலை எழுதியவர் யார்?**

பங்கிம் சந்திர சட்டர்ஜி (வங்க எழுத்தாளர்)

**30. ‘வந்தே மாதரம்’ எனும் பாடல் எந்த நாவலிலிருந்து எடுக்கப்பட்டது?**

ஆனந்தமடம்

**31. “இந்தியா எனது தாய்நாடு…….” எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியை எழுதியவர் யார்?**

பிதிமாரி வெங்கட சுப்பாராவ்

**32. நாம் அன்றாடம் சாப்பிடும் தயிர் பாலிலிருந்து உருவாகப் பயன்படும் நுண்ணுயிரி எது?**

லாக்டோபேசில்லஸ் டெல்புரூக்கி.

**33. ‘லாக்டோபேசில்லஸ் டெல்புரூக்கி’ தேசிய நுண்ணுயிரியாக அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு எது?**

2012

**34. இந்திய நாணயம் “ரூபாய்” எதிலிருந்து மருவியது?**

ருபியா

**35. வெள்ளி நாணயத்துக்கு ‘ருபியா’ என்று பெயரிட்ட மன்னர் யார்?**

ஷெர்ஷா சூரி (16-ம் நூற்றாண்டு)

**36. இந்திய ரூபாய்க்கான சின்னத்தை (₹) வடிவமைத்தவர் யார்?**

டி. உதயகுமார் (2010)

**37. முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு எது?**

மார்ச் 22, 1957

**38. யார் தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் முதல் தேசிய நாட்காட்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது?**

பிரபல வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா

**39. ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே” என்ற பாடலை எழுதியவர் யார்?**

மகாகவி பாரதியார்

**40. ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே” என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடியவர் யார்?**

கர்னாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள்

**41. “பாசறைக்கு திரும்புதல்” என்ற விழா எப்பொழுது நடைபெறும்?**

ஜனவரி 29 (இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாள்)

**42. யாருடைய பிறந்தநாள் “சர்வதேச அகிம்சை நாள்” ஆகக் கொண்டாடப்படுகிறது?**

மகாத்மா காந்தி (2007)

**43. மூவண்ணக்கொடியைத் தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு எது?**

ஜுலை 22, 1947

## 6th Social Science Lesson 14 Notes in Tamil

## 14. இந்திய அரசமைப்புச் சட்டம்

**1. நமது அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?**

ஜனவரி 26, 1950

**2. இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?**

389 (1946).

**3. இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

முனைவர் ராஜேந்திரபிரசாத்

**4. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் யார்?**

அம்பேத்கார். (*ஆலோசகர் – பி.என்.ராவ்*)

**5. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு எது?**

டிசம்பர் 9, 1946

**6. 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?**

அண்ணல் அம்பேத்கர்

**7. எப்போது இச்சட்டம் எழுதி முடிக்கப்பட்டது?**

நவம்பர் 26, 1949 (2 ஆண்டுகள், 11 மாதம், 17 நாட்கள்)

**8. நமது அரசமைப்புச் சட்டம் எவற்றை வலியுறுத்துகிறது?**

ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்தல், மற்றும் சகோதரத்துவம்

**9. ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தை எவ்வாறு கூறுகிறோம்?**

இறையாண்மை

**10. இந்திய அரசு எதன் வழியே ஆளப்படுகிறது?**

சட்டமன்றம் (மாநில மற்றும் ஒன்றிய அரசுகள்)

**11. ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத் தேவையான உரிமைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

அடிப்படை உரிமைகள்

**12. அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் இடம்பெற்றிருந்த வல்லுனர்கள் யாவர்?**

பி.ஆர்.அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம்.முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி.எல்.மிட்டர், என்.மாதவ ராவ், டி.டி.கே. டி.பி. கேதான்

**13. நமது அரசியல் சட்டம் உருவானபோது இடம்பெற்றிருந்த உறுப்புகள், பகுதிகள், அட்டவணைகளின் எண்ணிக்கை யாது?**

395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள்

(தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள்)

**14. அரசமைப்புச் சட்டம் எத்தனை முறை திருத்தப்பட்டுள்ளது?**

101 (16.09.2016 வரை)

**15. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் பேழையில் எந்த வாயு நிரப்பப்பட்டுள்ளது?**

ஹீலியம்

16. இந்தியா ஒரு **இறையாண்மையுடைய சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசு நாடாகும்.**

**17. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள் கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்.

**18. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவையெல்லாம் இடம்பெற்றுள்ளன?**

இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது , கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

**19. அரசமைப்புச் சட்டத்தின் ஆரம்பகட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட்டன?**

அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946- ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**20. இந்திய அரசமைப்புச் சட்ட அமைப்பில் இடம்பெற்றிருந்த பெண்கள் எத்தனை பேர்?**

15 பெண்கள்

**21. நாம் ஏன் குடியரசு தினம் கொண்டாடுகிறோம்?**

நமது அரசமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்.

**22. நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள்:**

1929 – ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக் (Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது.

**23. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எவ்வளவு செலவானது?**

64 லட்சம் **ரூபாய்**

**24. நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்ன?**

நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை , சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

**25. முகப்புரை என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது.

**26. இறையாண்மை என்பது எதைக் குறிக்கிறது?**

அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.

**27. மதச் சார்பின்மை என்றால் என்ன?**

மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும்சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது.

**28. இந்திய அரசு சட்டமன்றத்தின் வழியே ஆளப்படுகிறது, ஏன்?**

இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்.

**29. அடிப்படை உரிமை என்றால் என்ன?**

ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

**30. அடிப்படை உரிமைகள் யாவை?**

சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை ஆகியை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**31. வழிகாட்டு நெறிமுறை என்றால் என்ன?**

அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.

**32. ஓட்டுரிமை என்றால் என்ன?**

18 வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது.

**33. ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகள் யாவை?**

தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும்போது சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம்பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6 – 14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது.

## 6th Social Science Lesson 15 Notes in Tamil

## 15. பொருளியல் – ஓர் அறிமுகம்

1. **கிராமங்களில் முக்கியத் தொழில் எது?**

   விவசாயம்

2. **சந்தை:**

   கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை.

3. **நுகர்வோர் பொருட்கள் என்றால் என்ன?**

   அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

   (எ.கா) அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை

4. **பண்டமாற்று முறை என்றால் என்ன?**

   ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் பண்டமாற்று முறை எனப்படும்.

5. **முதல்நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

   உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல்நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.

   - வேளாண்மை
   - கால்நடை வளர்த்தல்
   - மீன் பிடித்தல்
   - கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்
   - கனிகள், கொட்டைகள் , தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல்

6. வேளாண்மை செய்வதற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே **கிராமம், ஊர்** என்று அழைக்கப்பட்டன.

7. **இந்தியாவின் பொருளாதார ஆணிவேர் எது?**

   விவசாயம்

8. **உழவர்கள் என்று அழைக்கப்படுவர் யார்?**

வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

9. **நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருப்பவை எவை?**

விவசயம் மற்றும் தொழிற்சாலைகள்

10. **இரண்டாம் நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

11. **தொழில்கள் எவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன?**

உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

12. **மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்:**

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் - பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் - காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- கனிமத் தொழிற்சாலைகள் - சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- கடல்சார் தொழிற்சாலைகள் - கடல் உணவு பதப்படுத்துதல்

13. “கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு” – மகாத்மா காந்தி

14. **மூன்றாம் நிலைத் தொழில்கள் என்றால் என்ன?**

முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- போக்குவரத்து - சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் - பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி - பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.

15. **உற்பத்தித் தொழிலிலும் சேவைத்தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம் எது?**

தமிழ்நாடு. இவை நகரங்களை மையமாகக்கொண்டே இயங்குகின்றன.

16. **அன்றாடப் பணப்புழக்கத்திற்குப்** பெருமளவில் **வங்கிகள்** உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல**
**வில்லாகித் தோன்றாக் கெடும்.** *–குறள் 0479*

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போல தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

## 6th Social Science Lesson 16 Notes in Tamil

## 16. பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும் : சங்க காலம்

1. சங்கம் என்னும் சொல் மதுரைப் பாண்டிய அரசர்களின் ஆதரவில் தழைத்தோங்கிய தமிழ்ப் புலவர்களின் குழுமத்தைச் சுட்டுகிறது. இப்புலவர்கள் இயற்றிய பாடல்கள் மொத்தமாகச் **சங்க இலக்கியம்** என அறியப்படுகிறது. இப்பாடல்கள் இயற்றப்பட்ட காலம் **சங்க காலம்** என அழைக்கப்படுகின்றது.

2. **ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) தாமோதரம் பிள்ளை (யாழ்ப்பாணம்) உ.வெ. சாமிநாத அய்யர்** ஆகியோர் அரும்பாடுபட்டு பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் செவ்வியல் இலக்கியங்களையும் பண்டைக்காலத் தமிழ் நூல்களையும் மீட்டு வெளியிடுவதில் பல ஆண்டுகளைச் செலவிட்டனர்.

3. **சங்க காலத்திற்கான சான்றுகள்:**

- **கல்வெட்டுகள்:**

  கலிங்கநாட்டு அரசன் காரவேலனுடைய ஹதிகும்பா கல்வெட்டு, புகளூர் (கரூர்க்கு அருகே) கல்வெட்டு, அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பேராணைக் கல்வெட்டுகள். மேலும் மாங்குளம், அழகர் மலை, கீழவளவு ஆகிய ஊர்களிலுள்ள (இவ்வூர்கள் அனைத்தும் மதுரைக்கு அருகேயுள்ளன) கல்வெட்டுக்கள்.

- **செப்புப் பட்டயங்கள்**

  வேள்விக்குடி மற்றும் சின்னமனூர் செப்பேடுகள்

- **நாணயங்கள்**

  சங்க காலத்தைச் சேர்ந்த சேர, சோழ பாண்டிய அரசர்களாலும் , குறுநில மன்னர்களாலும் வெளியிடப்பட்ட நாணயங்களும், ரோமானிய நாணயங்களும்

- **பெருங்கால நினைவுச் சின்னங்கள்**

  புதைவிடங்கள், நடுகற்கள்

- **அகழ்வாய்விலிருந்து பொருட்கள் கிடைத்த இடங்கள்**

  ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல், புகார், கொற்கை,அழகன்குளம் உறையூர்.

- **இலக்கியச் சான்றுகள்**

  தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்க்கணக்கு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி ஆகியவை. சிலப்பதிகாரம் – மணிமேகலை ஆகிய காப்பியங்கள்.

- **அயல்நாட்டவர் குறிப்புகள்**

  எரித்திரியக்கடலின் பெரிப்ளஸ் (The Periplus of Erythrean Sea) பிளினியின் இயற்கை வரலாறு (Natural History) தாலமியின் புவியியல் (Geograohy), மெகஸ்தனிஸின் இண்டிகா, ராஜாவளி, மகாவம்சம், தீபவம்சம் ஆகியன.

- **கால அளவு**

கி.மு. (பொ.ஆ.மு) 3 ஆம் நூற்றாண்டு முதல் – கி,பி, (பொ.ஆ) 3 ஆம் நூற்றாண்டு வரை

- **தமிழகத்தின் புவியியல் பரப்பு**

  வடக்கே வேங்கடம் (திருப்பதி) முதல் தெற்கே கன்னியாகுமரி வரை. கிழக்கிலும், மேற்கிலும் கடல்களை எல்லைகளாகக் கொண்டிருந்தது.

- **காலம்**

  இரும்புக்காலம்

- **பண்பாடு**

  பெருங்கற்காலப் பண்பாடு

- **அரசுமுறை**

  முடியாட்சி

- **ஆட்சி புரிந்த அரச வம்சங்கள்**

  சேரர், சோழர், பாண்டியர்

4. **தொல்காப்பியம்** ஒரு தமிழ் இலக்கண நூலாகும். அது **சங்க காலத் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு** ஆகியவற்றின் உயர் தரத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

5. **கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழிப் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட் என்பார் தமிழ்மொழியானது இலத்தீன் மொழியின் அளவிற்குப் பழமையானது** எனும் கருத்தைக் கொண்டுள்ளார். ஏனைய மொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் முற்றிலும் சுதந்திரமான ஒரு மரபாக அது உருபெற்று எழுந்துள்ளது என அவர் கூறுகிறார்.

**6. கல்லணையின் முக்கியத்துவம் என்ன?**

இது கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும். பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக **காவிரி ஆற்றின் குறுக்கே** இவ்வணை கட்டப்பட்டது. கல்லணை கட்டப்பட்டபோது **69,000 ஏக்கர் நிலத்திற்கு அது நீர்ப்பாசன வசதியை வழங்கியது.**

**7. மூவேந்தர்கள் என்பவர் யார்?**

சங்க காலத்தின்போது மூவேந்தர்கள் தமிழகப் பகுதிகளை ஆட்சி புரிந்தனர். வேந்தர் எனும் சொல் **சேரர், சோழர், பாண்டிய** ஆகியோரைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

**8. சேரர்:**

சேரர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய மற்றும் வடக்குத் திருவிதாங்கூர், கொச்சி, தெற்கு மலபார், கொங்கு மண்டலம் ஆகியவற்றை ஆண்டனர். **பதிற்றுப்பத்து** சேர அரசர்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

**9. சேரன் செங்குட்டுவன் என்பவர் யார்?**

சேர அரசன் செங்குட்டுவன் வட இந்தியாவின் மீது படையெடுத்துச் சென்றார். **சிலப்பதிகாரக் காவியப் பாத்திரமான கண்ணகிக்கு சிலை எடுப்பதற்காக அவர் இமயமலையிலிருந்து கற்களைக் கொண்டுவந்தார்** எனத் தெரியவந்துள்ளது. **பத்தினித் தெய்வ வழிபாட்டை அவர் அறிமுகம் செய்தார்.**

**10. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?**

**இளங்கோவடிகள்** சேரன் செங்குட்டுவனின் தம்பியாவார். அவர்தான் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர்.

**11. சேர நாணயங்களை வெளியிட்டவர் யார்?**

**சேரல் இரும்பொறை** எனும் அரசன் தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார். சில சேர நாணயங்களில் அவர்களின் சின்னமான வில்லும் அம்பும் பொறிக்கப்பட்டுள்ளன.

**12. சோழ மண்டலம் என்றால் என்ன?**

சங்க காலத்தில் **சோழ அரசு வேங்கட மலைகள்(திருப்பதி) வரை** விரிந்திருந்தது. **காவிரி கழிமுகப்பகுதி சோழ நாட்டின் மையப் பகுதியாக விளங்கியது**. இப்பகுதி பின்னர் **சோழ மண்டலம்** என அறியப்பட்டது.

**13. கரிகாலன் பற்றி:**

- சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கரிகால் வளவன் அல்லது கரிகாலன் ஆவார். அவர் தன்னை எதிர்த்த சேரர், பாண்டியர் மற்றும் அவர்களை ஆதரித்த பதினொன்று வேளிர் தலைவர்களின் கூட்டுப்படையைத் தஞ்சாவூர் பகுதியில் உள்ள வெண்ணி எனும் சிற்றூரில் தோற்கடித்தார்.
- அவர் காடுகளை விளைநிலங்களாக மாற்றினார். வேளாண்மையை மேம்படுத்துவதற்காகக் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.
- சோழர்களின் துறைமுகமான புகார் இந்தியப் பெருங்கடலின் பல பகுதிகளிலிருந்து வணிகர்களை அதன்பால் ஈர்த்தது. பட்டினப்பாலை எனும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகாலனின் ஆட்சியின்போது அங்கு நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.

**14. பாண்டியர்காலம்:**


பாண்டியர் இன்றைய தென்தமிழகத்தை ஆட்சி செய்தனர். பாண்டிய அரசர்கள் தமிழ்ப்புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தனர். பல பாண்டிய அரசர்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**15. நெடுஞ்செழியன்:**

நெடுஞ்செழியன் மிகவும் புகழ்பெற்ற போர்வீரராகப் போற்றப்படுகிறார். அவர் **தலையாலங்கானம் என்னுமிடத்தில் சேரர், சோழர், ஐந்து வேளிர்குலத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டுப்படையைத் தலையாலங்கானம் என்னுமிடத்தில் தோற்கடித்தார்**. அவர் **கொற்கையின் தலைவன்** எனப் போற்றப்படுகின்றார்.

**16. பாண்டியர்கால நாணயங்களை வெளியிட்டவர் யார்?**

பாண்டிய அரசர்கள் பல நாணயங்களை வெளியிட்டனர். அவர்களின் **நாணயங்கள், ஒருபுறத்தில் யானையின் வடிவத்தையும் மற்றொருபுறத்தில் மீனின் உருவத்தையும் கொண்டுள்ளன**. **முதுகுடுமிப் பெருவழுதி** என்ற பாண்டிய அரசர் பல வேதவேள்விகளை நடத்தியதைக் கொண்டாடும் விதமாக நாணயங்களை வெளியிட்டார்.




**17. மூவேந்தர்கள் சூட்டிக்கொண்ட பட்டங்கள் யாவை?**

**சேரன்**

- ஆதவன்
- குட்டுவன்
- வானவன்
- இரும்பொறை

**சோழன்**

- சென்னி
- செம்பியன்
- கிள்ளி
- வளவன்

**பாண்டியன்**

- மாறன்
- வழுதி
- செழியன்
- தென்னர்

**18. முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள் யாவர்?**

- இளஞ்சேட்சென்னி
- கரிகால் வளவன்
- கோச்செங்கணான்
- கிள்ளிவளவன்
- பெருநற்கிள்ளி

**19. முக்கியத்துவம் மிகுந்த சேர அரசர்கள் யாவர்?**

- உதயன் சேரலாதன்
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
- சேரன் செங்குட்டுவன்
- சேரல் இரும்பொறை

**20. முக்கியத்துவம் வாய்ந்த பாண்டிய அரசர்கள் யாவர்?**



- நெடியோன்
- முதுகுடுமிப் பெருவழுதி
- நன்மாறன்
- நெடுஞ்செழியன்

**21. அரசுரிமைச் சின்னங்கள் யாவை?**

**செங்கோல் (Scepter), முரசு (Drum), வெண்கொற்றக்குடை (White umbrella)** ஆகியன அரசு அதிகாரத்தின் சின்னங்களாகும்.

22.

| **மூவேந்தர்** | **மாலை** | **துறைமுகம்** | **தலைநகர்** | **சின்னம்** |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| சேரர் | பனம்பூ மாலை | முசிறி/ தொண்டி | வஞ்சி/ கரூர் |  |
| சோழர் | அத்திப்பூ மாலை | புகார் | உறையூர் / புகார் |  |
| பாண்டியர் | வேப்பம்பூ மாலை | கொற்கை | மதுரை |  |

**23. குறுநில மன்னர்கள் – ஆய், வேளிர், கிழார்**

முடிசூடிய இம்மூன்று அரசர்களைத் தவிர, பல சுதந்திரமான, நெஞ்சுரம் மிக்க சிறிய குறுநிலமன்னர்களும் இருந்தனர். **ஆய்** என்னும் பெயர் பழந்தமிழ்ச் சொல்லான **ஆயர் (பொருள்: ஆநிரை மேய்ப்போர்)** என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். **சங்க காலத்து ஆய் மன்னர்களில் முக்கியமானவர்களின் பெயர்கள் அந்திரன், திதியன், நன்னன்** ஆகியனவாகும்.

**24. வேளிர்கள் என்பவர் யார்?**

வேளிர்கள் – வேளாளர் – பண்டைய காலத் தமிழகத்தில் ஆட்சி செய்த நிலவுடைமைப் பிரிவினர் ஆவர். **புகழ்பெற்ற வேளிர்கள் கடையெழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, பேகன், ஆய் , அதியமான், நள்ளி ஆகியோராவர்**. அவர்கள் தமிழ்ப்புலவர்களைப் பெருந்தன்மையுடன் தாராளமாக ஆதரித்தமைக்காகப் புகழப்பட்டவர்கள் ஆவர்.

**25. கிழார் என்பவர் யார்?**

கிழார் என்பவர் கிராமத் தலைவர் ஆவார்.

**26. சங்ககால ஆட்சியமைப்பு**

- அரசுரிமை பரம்பரையானது. அரசர் **‘கோ’** என அழைக்கப்பட்டார். அது கோன் எனும் சொல்லின் சுருக்கமாகும்.
- பட்டம் சூட்டப்படும் விழா **‘அரசுக்கட்டிலேறுதல்’** அல்லது முடிசூட்டுவிழா எனப்பட்டது.
- பட்டத்து இளவரசர் **கோமகன்** எனவும் அவருக்கு **இளையோர் இளங்கோ, இளஞ்செழியன், இளஞ்சேரல்** எனவும் அழைக்கப்பட்டனர்.
- அரசர் தினந்தோறும் அரசவையைக் **(நாளவை)** கூட்டினார்.

**27. சங்ககால ஆட்சியமைப்பின் வருவாய் எப்படி இருந்தது?**

அரசின் வருமானம் வரிகள் மூலம் பெறப்பட்டன. **நிலவரியே வருவாயின் முக்கிய ஆதாரமாகும்**. அது **‘இறை’** என அழைக்கப்பட்டது. இதைத்தவிர அரசு சுங்கவரி, கப்பம், அபராதம் ஆகியவற்றையும் வசூல் செய்தது.

**28. வீரக்கழல் என்றால் என்ன?**

அரசர்களும் வீரர்களும் **வீரக்கழல்** அணிந்திருந்தனர். அதன்மீது அணிந்திருப்பவரின் பெயரும், அவரின் சாதனைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. ஒற்றர்கள் நாட்டுக்குள் நடப்பனவற்றவை மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் நடப்பனவற்றையும் தெரிந்துகொள்ளப் பயன்படுத்தப்பட்டனர்.

**29. சங்ககால அரசவை எவ்வாறு இருந்தது?**

அரசருடைய சபை **அரசவை** என அழைக்கப்பட்டது. அரசர் **'அரியணை'** என்றழைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வது வழக்கம். அரசவையில் அரசரைச் சுற்றி அதிகாரிகள், சிறப்பு விருந்தினர்கள், அவைப்புலவர்கள் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

**30. சங்ககால அரசர்களின் ஐந்து கடமைகள் யாவை?**

அரசர்கள் ஐந்து விதக் கடமைகளைச் செய்தனர். கல்விகற்பதை ஊக்குவிப்பது, சடங்குகளை நடத்துவது, பரிசுகள் வழங்குவது, **மக்களைப் பாதுகாப்பது, குற்றவாளிகளைத் தண்டிப்பது** ஆகியன அவ்வைந்து கடமைகளாகும்.

**31. அதிகாரிகள் எவ்வாறு பிரிக்கப்பட்டனர்?**

அரசருக்கு நிர்வாகத்தில் பல அதிகாரிகள் உதவி செய்தனர். அவர்கள் **ஐம்பெருங்குழு (ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு) எண்பேராயம் (எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு)** என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

**32. சங்ககால இராணுவம்:**

அரசருடைய படை என்று அழைக்கப்பட்ட இராணுவம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை **காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை** என்பனவாகும். **படைத்தலைவர் 'தானைத் தலைவன்'** என அழைக்கப்பட்டார்.

**33. சங்க கால மக்கள் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள்:**

- சங்க காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான ஆயுதங்கள் வாள், கேடயம், தோமாரம் (ஏறியீட்டி) ஈட்டி, வில், அம்பு ஆகியனவாகும்.
- **தோமாரம்** எனப்படுவது சற்று தொலைவில் இருந்து எதிரியின் மீது ஏவுகணையைப் போன்று வீசப்படுவதாகும்.
- ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடம் 'படைக் கொட்டில்' என அழைக்கப்பட்டது.
- கோட்டைகள் அரண்களாலும் ஆழமான அகழிகளாலும் பாதுகாக்கப்பட்டன. போர்முரசும் கடவுளாகவே கருதி வணங்கப்பட்டது.

**34. சங்ககாலச் சட்டமும் நீதியும்**

அரசரே இறுதியான மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆவார். தலைநகரில் நீதிமன்றம் **'அவை'** என்றழைக்கப்பட்டது. கிராமங்களில் **'மன்றங்கள்'** என்பவை தீர்ப்பு வழங்கப்படும் இடங்களாயிருந்தன.

**35. சங்ககால மக்கள் தங்கள் வழக்குகளை எவ்வாறு கையாண்டனர்?**

உரிமையியல் (Civil) வழக்குகளில் பின்பற்றப்பட்ட வழிமுறையின் படி **நாகப் பாம்பு இருக்கும் ஒரு பானைக்குள் வாதி தனது கையை நுழைக்க வேண்டும். நாகம் அவரைத் தீண்டினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்படும்**. பாம்பு அவரைத் தீண்டவில்லை எனில் அவர் குற்றமற்றவர் எனக் கருதப்பட்டு விடுவிக்கப்படுவார். தண்டனைகள் எப்போதும் கடுமையாகவே இருந்தன. திருட்டு வழக்குகளில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

**36. குற்றங்களுக்காக வழங்கப்பட்ட வேறு தண்டனைகள் யாவை?**

தலையைச் சீவுதல், உடல் உறுப்புக்களைத் துண்டித்தல், சித்திரவதை செய்வது, சிறையில் அடைப்பது, அபதாரம் விதிப்பது ஆகியவை குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனைகளாகும்.

**37. சங்க காலத்தில் உள்ளாட்சி நிர்வாகம் எவ்வாறு இருந்தது?**

- ஒட்டுமொத்த ஆட்சிப் பகுதியும் **'மண்டலம்'** என்றழைக்கப்பட்டது. மண்டலங்கள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டன.
- நாடு பல கூற்றங்களாகப் (கூற்றம்) பிரிக்கப்பட்டன. ஊர் என்பது கிராமம் ஆகும்.
- அவை பேரூர் (பெரிய கிராமம்), சிற்றூர் (சிறிய கிராமம்), மூதூர் (பழமையான கிராமம்) என அழைக்கப்பட்டன.

**38. கடற்கரையோர நகரங்களுக்குப் பட்டினம்** எனப் பெயர், '**புகார்**' என்பது **துறைமுகங்களைக்** குறிக்கும் பொதுவான சொல்லாகும்.

**39. சங்க கால முக்கிய நகரங்கள் யாவை?**

புகார், உறையூர், கொற்கை, மதுரை, முசிறி, வஞ்சி அல்லது கரூர் , காஞ்சி ஆகியன.

**40. நிலங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டன?**

மண்ணின் வளத்தைப் பொறுத்து நிலங்கள் வகைப்படுத்தப்பட்டன. **மருதநிலம் 'மென்புலம்'** (நன்செய்) என அழைக்கப்பட்டது. அதில் நெல்லும் கரும்பும் விளைந்தன. **நெய்தல் தவிர மற்றவை 'வன்புலம்' (புன்செய்)** என அழைக்கப்பட்டன. அவற்றில் தானியங்களும் பருப்பு வகைகளும் விளைந்தன.

**41. சங்க காலப் பெண்களின் நிலை**

- சமூக வாழ்வில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. கற்றறிந்த, அறிவுக் கூர்மையுடைய பெண்கள் இருந்தனர்.
- திருமணம் சொந்த விருப்பத்தை சார்ந்து அமைந்திருந்தது. இருந்தபோதிலும் 'கற்பு' பெண்களின் மிகச் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது. பெற்றோரின் சொத்துக்களில் மகனும், மகளும் சமமான பங்கைப் பெற்றிருந்தனர்.

**42. சங்க காலத்தில் வாழ்ந்த பெண் புலவர்கள் எத்தனை பேர்?**

**நாற்பது** பெண்புலவர்கள் வாழ்ந்து அரியநூல்களை கொடுத்துச் சென்றுள்ளனர்.

**43. மத நம்பிக்கைகள் மற்றும் சமூகப்பிரிவுகள்**

மக்களின் **முதன்மைக் கடவுள் சேயோன் அல்லது முருகன்**. சங்க காலத்தில் வழிபடப்பட்ட ஏனைய கடவுளர் **சிவன், மாயோன் (விஷ்ணு), இந்திரன், வருணன் , கொற்றவை** ஆகியோராவர். நடுகல் வழிபாடும் வழக்கத்தில் இருந்தது. பௌத்தமும் சமணமும் கூட உடனிருந்தன.

**44. சாதிமுறை எவ்வாறு இருந்தது?**

வட பகுதிகளில் வளர்ந்திருந்ததைப் போன்று தமிழகத்தில் சாதிமுறை வளர்ந்திருக்கவில்லை. ஒப்பீட்டளவில் **வர்ணாசிரம முறை திராவிடத் தென்னாட்டில் பின்னர் வந்ததே.**

**45. சங்க கால மக்களின் உடை :**

பொருளாதார வசதிமிக்க மக்கள் **மஸ்லின், பட்டு மற்றும் நேர்த்தியான பருத்தியிழைத் துணிகளிலால்** ஆன ஆடைகளை அணிந்தனர். சாதாரண மக்கள் பருத்தியினாலான இரு துண்டுகளான ஆடைகளை அணிந்தனர்.

**46. சங்க கால மக்களின் இசைக்கருவிகள் யாவை?**

பலவிதமான இசைக்கருவிகளான **முரசு, புல்லாங்குழல், யாழ்** போன்றவை பற்றிய பல குறிப்புகள் உள்ளன. கரிகாலன் இசையின் ஏழு ஸ்வரங்கள் குறித்து பெரும்புலமை பெற்றிருந்தான் **(ஏழிசை வல்லான்).**

**47. சங்க கால மக்களின் வேறுசில கலைகள் யாவை?**

பாடல்கள் பாடும் புலவர்கள் **'பாணர்', 'விறலியர்'** என அழைக்கப்பட்டனர். **'கணிகையர்'** நடனங்களை நிகழ்த்தினர். கூத்து (நாட்டுப்புற நாடகம்) சங்க்கால மக்களுடைய மிக முக்கியமான பண்பாட்டு அம்சமாக விளங்கியது. அவர்கள் **முத்தமிழ்** எனும் கோட்பாட்டை உருவாக்கினர் **(இயல், இசை, நாடகம்**).

**48. தொழில்கள்:**

- மக்களின் மிக முக்கியமான தொழில்கள் **வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல்** ஆகியவையாகும்.
- மேலும் **கைவினைத் தொழில் செய்வோரான தச்சர், கொல்லர், பொற்கொல்லர், மண்பாண்டம் செய்வோரும்** இருந்தனர்.

**49. சங்க கால மக்களின் பண்டிகைகள் யாவை?**

மக்கள் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினார்கள். அறுவடைத் திருநாள் (பொங்கல்), கார்த்திகை தீப விழா ஆகியன அவற்றில் சிலவாகும். இந்திரவிழா தலைநகரில் கொண்டாடப்பட்டது.

**50. சங்க கால மக்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் யாவை?**

- பல வேடிக்கை நிகழ்ச்சிகளும் விளையாட்டுகளும் நடைபெற்றன. **நடனமாடுதல், எருதுச் சண்டை, சேவல் சண்டை, தாயமாடுதல், வேட்டையாடுதல், மல்யுத்தம் செய்தல், ஊஞ்சலாடுதல்** ஆகியன அவற்றில் முக்கியமானவை ஆகும்
- குழந்தைகள் பொம்மை வண்டிகளோட்டியும், மணல்வீடு கட்டியும் விளையாடினர்.

**51. சங்க கால மக்களின் வணிகம்:**

- வணிகம் உள்ளூர், உள்நாட்டில், கடல் கடந்து வெளிநாட்டில் என மூன்று நிலைகளில் நடைபெற்றது
- இக்காலப்பகுதியில் தமிழகம் மேற்கொண்ட விரிவான மற்றும் இலாபகரமான வெளிநாட்டு வணிகம், **தமிழ்மக்கள் மிகச் சிறந்த கடலோடிகள்** என்பதை மெய்ப்பிக்கின்றது.

52. கடற்கரையோரமாகப் பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காகச் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டன. முக்கியத் துறைமுகங்களில் **'கலங்கரை இலங்குசுடர்'** எனும் ஒளிவிளக்குக் கோபுரங்கள் இருந்தன.

**53. முக்கியச் சந்தைகள்:**

**புகார், மதுரை** போன்ற முக்கியமான நகரங்களில் இரண்டு வகையான சந்தைகள் இருந்தன.

**54. இரண்டு வகையான சந்தைகள் யாவை?**

**'நாளங்காடி'** எனப்படும் காலைநேரச் சந்தையும் **'அல்லங்காடி'** எனப்படும் மாலைநேரச் சந்தையும் இருந்துள்ளன. இச்சந்தைகளில் பல்வகைப்பட்ட பொருட்கள் பெரும் அளவில் விற்கப்பட்டன; வாங்கப்பட்டன.

**55. முக்கியத் துறைமுகங்கள்:** முசிறி, தொண்டி, கொற்கை.

**56. முக்கிய ஏற்றுமதிப்பொருட்கள்**

உப்பு, மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டு, நறுமணப் பொருட்கள், வைரம், குங்குமப்பூ, விலைமதிப்பு மிக்க கற்கள், மஸ்லின், சந்தனக் கட்டை.

**57. முக்கிய இறக்குமதிப் பொருட்கள்**

புஷ்பராகம், ஈயம், திராட்சைமது, கண்ணாடி, குதிரைகள்.

**58. சங்க காலத்தில் கடல்கடந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு எவ்வாறு இருந்தன?**

**தமிழகத்திற்கும் கிரேக்கம், ரோம், எகிப்து, சீனா, தென்கிழக்காசிய, இலங்கை** ஆகிய நாடுகளுக்குமிடையே வணிக உறவுகள் நிலவியதைத் தொல்லியல் அகழ்வாய்வுகள் மெய்ப்பித்துள்ளன.

**59. களப்பிரர்கள்:**

- கி.பி. (பொ.ஆ) மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சங்ககாலம் படிப்படியாகத் தனது சரிவைச் சந்தித்தது. **களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.**
- களப்பிரர்களைப் பற்றி அறிய நமக்குக் குறைவான குறிப்புகளே கிடைத்து உள்ளன.
- **அவர்கள் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்கள், தொல்கலைப் பொருட்கள்** என **எதுவுமில்லை.**
- ஆனால் அவர்களின் **ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. இலக்கியச் சான்றுகள், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்காலம், பெரியபுராணம்** ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- **சீவக சிந்தாமணி, குண்டலகேசி** ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

- தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்ற காலம் அது.
- **சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது**.
- **பதினெண் கீழ்கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன**.
- இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின.
- எனவே களப்பிரர் காலமானது பொதுவாகச் சித்திரிக்கப்பட்டதைப் போன்று இருண்ட காலம் அல்ல.

**60.** இந்திய வணிகர்களால் ரோமப் பேரரசுக்கு விநியோகம் செய்யப்பட்ட பட்டு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. **ரோமப்பேரரசர் ஆரிலியன் அந்தபட்டு**, எடைக்கு எடை **தங்கம்** கொடுத்துப் பெற தகுதியானது என அறிவித்தார்.

**61. முசிறி – முதல் பேரங்காடி**

**ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி** தன்னுடைய **இயற்கை வரலாறு (Natural History) எனும் நூலில் முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி'** எனக் குறிப்பிட்டுள்ளார். **ரோமானியரின் குடியிருப்பு இருந்த முசிறியில் அகஸ்டஸ் கடவுளுக்காகக் கோவிலொன்று கட்டப்பட்டிருந்தது**.

**62. மலபார் கருமிளகு**

**எகிப்து அரசன் இரண்டாம் ராம்செஸின் பதப்படுத்தப்பட்ட உடல் திறக்கப்பட்டபோது, தொல்லியல் அறிஞர்கள் அவருடைய நாசியினுள்ளும் அடிவயிற்றிலும் கருமிளகுக்கதிர் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்**. (இவ்வாறு பதப்படுத்தி உடலைப் பாதுகாப்பது பண்டைய நாட்களில் பின்பற்றப்பட்ட முறையாகும்).

**63. வீரக்கல் / நடுகல்**

பண்டைக்காலத் தமிழர்கள் போர்க்களத்தில் மரணமுற்ற வீரர்கள்மேல் பெரும் பெரும்மரியாதை கொண்டிருந்தனர். **போரில் மரணமடைந்த வீரனின் நினைவைப் போற்றுவதற்காக நடுகற்கள் நடப்பட்டன.**

# 6th Social Science Lesson 17 Notes in Tamil

## 17. பேரரசுகளின் காலம்: குப்தர்

**1. குப்தப் பேரரசு:**

மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவில் குஷாணர்களாலும், தெற்கே சாதவாகனர்களாலும் நிறுவப்பட்டிருந்த வலிமை வாய்ந்த பேரரசுகள் பெருமையையும் வலிமையையும் இழந்தன. இச்சூழல் **சந்திரகுப்தரை** ஒரு அரசை உருவாக்கித் தனது வம்சத்தின் ஆட்சியை நிறுவ வைத்தது. அவ்வாட்சி இருநூறு ஆண்டுக் காலம் நீடித்தது.

**2. தொல்லியல் சான்றுகள்:**

- குப்த அரசர்களால் வெளியிடப்பட்ட தங்க, வெள்ளி, செப்பு நாணயங்கள்
- சமுத்திரகுப்தரின் அலகாபாத் தூண் கல்வெட்டு
- மெக்ராலி இரும்புத்தூண் கல்வெட்டு
- இரண்டாம் சந்திரகுப்தரின் உதயகிரி குகைக் கல்வெட்டு, மதுரா பாறைக் கல்வெட்டு, சாஞ்சி பாறைக் கல்வெட்டு
- ஸ்கந்த குப்தரின் பிதாரி தூண் கல்வெட்டு
- மதுபான் செய்யும் பட்டயம்
- சோனாபட் செப்புப் பட்டயம்
- நாளந்தா களிமண் முத்திரைப் பொறிப்பு

**3. இலக்கியச் சான்றுகள்**

- விஷ்ணு, மத்சய, வாயு, பாகவத புராணங்கள், நாரதரின் நீதி சாஸ்திரம்.
- விசாகதத்தரின் தேவிச்சந்திர குப்தம், முத்ரா ராக்ஸம், பாணரின் ஹர்ஷ சரிதம்.
- காளிதாசரின் நாடகங்கள்
- இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த சீன பௌத்தத்துறவி பாகியானின் பயணக் குறிப்புகள்
- ஹர்ஷரின் ரத்னாவளி, நாகநந்தா, பிரியதர்ஷிகா
- யுவான் சுவாங்கின் சி-யூ-கி.

**4. குப்த அரச வம்சத்தை நிறுவியவர் யார்?**

குப்த அரச வம்சத்தை நிறுவியவர் **ஸ்ரீகுப்தர்** எனக் கருதப்படுகிறார். அவர் தற்போதைய வங்காளம், பீகார் பகுதிகளை ஆண்டதாகக் கருதப்படுகிறது. நாணயங்களில் முதன்முதலாக இடம் பெற்ற குப்த அரசரின் வடிவம் இவருடையதே.

**5. மகாராஜா என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்?**

**ஸ்ரீகுப்தருக்குப் பின்னர் இவருடைய மகன் கடோத்கஜர் அரசப் பதவியேற்றார்.** கல்வெட்டுகளில் இவர்கள் இருவருமே மகாராஜா என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**6. முதலாம் சந்திரகுப்தர் (கி.பி (பொ.ஆ) 319 – 335)**

முதலாம் சந்திரகுப்தர், புகழ்பெற்ற வலிமை மிகுந்த 'லிச்சாவி' அரச குடும்பத்தைச் சேர்ந்த **குமாரதேவி**யை மணந்தார். இக்குடும்பத்தின் ஆதரவோடு, **வட இந்தியச் சிற்றரசுகள் பலவற்றை இவர் வெற்றிகொண்டு, ஒரு பேரரசின் முடியரசராகத்** தன்னை முடி சூட்டிக்கொண்டார்.

**7. தங்க நாணயங்களில் யாரின் உருவங்கள் வெளியிடப்பட்டுள்ளன?**

சந்திரகுப்தரால் வெளியிடப்பட்டவை எனக் கருதப்படும் **தங்க நாணயங்களில் சந்திரகுப்தர், குமாரதேவி** ஆகிய இருவரின் உருவங்கள் இடம்பெற்றுள்ளன. **'லிச்சாவையா'** என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

**8. சமுத்திரகுப்தர் (C.335 – 380)**

முதலாம் சந்திரகுப்தரின் மகனான சமுத்திர குப்தர் அரச வம்சத்தின் தலைசிறந்த அரசர் ஆவார்.

**9. அலகாபாத் தூண் :**

சமுத்திரகுப்தரின் அவைக்களப் புலவரான **'ஹரிசேனர்'** இயற்றிய **பிரயாகை மெய்க்கீர்த்தி (பிரசஸ்தி)** அலகாபாத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திரகுப்தரின் ஆட்சிக்கான மிக முக்கியச் சான்று அலகாபாத் தூண் கல்வெட்டாகும்.

**10. குப்த அரசவம்சம் ஒருங்கிணைக்கப்படல்**

- தென்னிந்தியாவில் பல்லவநாட்டு அரசர் **விஷ்ணுகோபனை** சமுத்திரகுப்தர் தோற்கடித்தார்.
- வட இந்தியாவில் **சமுத்திரகுப்தர் ஒன்பது அரசுகளைக்** கைப்பற்றினார்.
- தென்னிந்தியாவைச் சேர்ந்த **12 அரசர்களைத் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக்கி அவர்களைக் கப்பம் கட்டச் செய்தார்**.
- கிழக்கு வங்காளம், அஸ்ஸாம், நேபாளம், பஞ்சாபின் கிழக்குப் பகுதி, ஆகியவற்றின் அரசர்களும் ராஜஸ்தானத்தைச் சேர்ந்த பல்வேறு பழங்குடியினரும் சமுத்திரகுப்தரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

**11. இரண்டாம் சந்திரகுப்தர் (c.380 – 415)**

- இரண்டாம் சந்திரகுப்தர் சமுத்திரகுப்தரின் மகனாவார். அவர் **விக்கிரமாதித்யர்** என்றும் அறியப்பட்டார்.
- அவர் சாக அரசர்களைத் தோற்கடித்து மேற்கு மாளவத்தையும் குஜராத்தையும் கைப்பற்றினார்.
- தென்னிந்திய அரசுகளோடு அவர் நட்புறவைப் பேணினார்.

**12. நாளந்தா பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர் யார்?**

இரண்டாம் சந்திரகுப்தரைத் தொடர்ந்து அவருடைய மகன் முதலாம் குமாரகுப்தர் அரியணை ஏறினார். அவரே நாளந்தா பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர்.

**13. குப்தப் பேரரசைத் தோற்கடித்தவர் யார்?**

குமாரகுப்தரைத் தொடர்ந்து அரசப் பதவியேற்ற **ஸ்கந்தகுப்தர்.** ஹூணர்களின் படையெடுப்பைச் சந்திக்க நேரிட்டது. அவர் அவர்களைத் தோற்கடித்து விரட்சி அடித்தார். ஆனால் மீண்டும் படையெடுத்து வந்த ஹூணர்கள் குப்தப் பேரரசை தோற்கடித்தனர்.

**14.** மிகச் சிறந்த குப்தப் பேரரசர்களில் கடைசிப் பேரரசரான பாலாதித்யர் முதலாம் நரசிம்மகுப்தர் என்ற பெயரில் அரியணை ஏறினார். இவர் பௌத்த மதத்தால் ஈர்க்கப்பட்டவராவார்.

**15. பாலாதித்யா யாரைத் தோற்கடித்தார்?**

மிகிரகுலரைக் கைது செய்து சிறையில் அடைப்பதில் பாலாதித்யா வெற்றி பெற்றாலும் மிகிரகுலர் வஞ்சகமாகப் பாலாதித்யரை மகதத்திலிருந்து வெளியேற்றினார். பாலாதித்யருக்குப் பின்னர் மாபெரும் குப்தப் பேரரசு தேய்ந்து காணாமற்போனது.

**16. குப்தப் பேரரசின் அங்கீகரிக்கப்பட்ட கடைசி அரசர் யார்?**

குப்தப் பேரரசின் அங்கீகரிக்கப்பட்ட கடைசி அரசர் விஷ்ணுகுப்தர் ஆவார்.

**17. குப்தர்களின் ஆட்சி அமைப்பு**

குப்த அரசர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தினர். (அரசர் கடவுளின் பிரதிநிதியாக கருதப்பட்டார். எனவே, அரசர் கடவுளுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவராவார். மற்றவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை எனும் கோட்பாடு) **குப்த அரசர்கள் அரசியல், நிர்வாகம், இராணுவம், நீதிவழங்கல்** ஆகிய துறைகளில் பெரும அளவிலான அதிகாரம் பெற்றுத் திகழ்ந்தனர்.

**18.** குப்த அரசர்களுக்கு அமைச்சர்கள் (மந்திரி) குழுவொன்று நிர்வாகத்தில் உதவி செய்தது. அக்குழு இளவரசர்களையும், உயர் அதிகாரிகளையும் , கப்பம் கட்டும் சிற்றரசர்களையும் கொண்டிருந்தது. நாட்டின் அன்றாட நிர்வாகத்தைத் திறம்பட நடத்த, பெருமளவிலான அதிகாரிகள் குப்த அரசர்களால் பணியமர்த்தப்பட்டனர்.

- உயர் பதவிகளில் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் 'தண்ட நாயகர்' மற்றும் 'மகாதண்ட நாயகர்' என அழைக்கப்பட்டனர்.
- குப்தப் பேரரசு 'தேசம்' அல்லது 'புக்தி'எனும் பெயரில் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டன. அவற்றை 'உபாரிகா' எனும் ஆளுநர்கள் நிர்வகித்தனர்.
- பிராந்தியங்கள் 'விஷ்யா' எனும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.
- விஷ்யாபதிகள் எனும் அதிகாரிகள் மாவட்ட நிர்வாகத்தை மேற்கொண்டனர்.
- கிராம அளவில் கிராமிகா, கிராமதியாகஷா எனும் அதிகாரிகள் செயல்பட்டனர்.

**19. குப்தப் பேரரசில் இராணுவ அமைப்பின் முக்கியப்பங்கு என்ன?**

முத்திரைகளிலும் கல்வெட்டுக்களிலும் இராணுவப் பதவிகளின் பெயர்கள் **பாலாதிகிரிதா, (காலாட்படையின் தளபதி) மஹாபாலாதிகிரிதா (குதிரைப் படையின் தளபதி)** எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. 'தூதகா' எனும் ஒற்றர்களை உள்ளடக்கிய வேவு பார்க்கும் அமைப்பும் செயல்பட்டது.

**20. சமூகமும் பொருளாதாரமும்**

**காமாந்தகரால்** எழுதப்பட்ட **நிதிசாரம்** எனும் நூல் அரசுக் கருவூலத்தின் முக்கியத்துவத்தையும் வருமானத்திற்கான பல வழிகளையும் குறிப்பிடுகின்றது. சமுத்திரகுப்தரைப் போன்றே அரசர்களின் படையெடுப்பு நடவடிக்கைகளில் , வருவாயின் உபரியே முதலீடு செய்யப்பட்டது.

**21. குப்தர் கால வரி:**

**நிலவரி**யே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. விவசாயிகளின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. அவர்கள் பல்வேறு வரிகளைச் செலுத்த வேண்டிய நிலையில் இருந்தனர். அவர்கள் கொத்தடிமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

**22. வணிகமும், வர்த்தகமும்**

குப்தர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வணிகர்களின் பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கதாக இருந்தது. வணிகர்களில் இரண்டு வகையினர் இருந்தனர். **'சிரேஸ்தி' மற்றும் 'சார்த்தவாகா'** என அவர்கள் அழைக்கப்பட்டனர்.

**23. முக்கிய வணிகப் பொருட்கள் யாவை?**

விற்பனைப் பொருட்கள் அன்றாடப் பயன்பாட்டுக்குத் தேவையான பொருட்களிலிருந்து விலை மிகுந்த ஆரம்பரப் பொருட்களெனப் பல வகைப்பட்டவையாய் இருந்தன. **மிளகு, தங்கம், செம்பு, இரும்பு, குதிரைகள், யானைகள்** ஆகியவை முக்கிய வணிகப் பொருட்களாகும்.

**24. குப்தர் காலப் போக்குவரத்து வசதிகள்:**

நாட்டின் பலபகுதிகளை இணைக்கும் சாலைகளைக் குப்தர்கள் அமைத்தனர். பாடலிபுத்திரம், உஜ்ஜைனி, வாரணாசி, மதுரா ஆகிய முக்கிய வனிக நகரங்காளாக இருந்தன. இந்தியாவில் உள்ள **மேலைக் கடற்கரைத் துறைமுகங்களும் (கல்யாண், மங்களூர், மலபார்) கீழைக் கடற்கரைத் துரைமுகமும் (வங்காளத்திலிருந்த தாமிரலிப்தி) வணிகப் பெருக்கத்திற்கு உதவின.**

**25. உலோகவியல்**

- குப்தர்கள் காலத்தில் சுரங்கத் தொழிலும் உலோகத் தொழிலும் செழிப்புற்று விளங்கின.
- **உலோகத் தொழில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட மெக்ராலி இரும்புத் தூணாகும்.** டெல்லியிலுள்ள இவ்வொற்றை இரும்புத்தூண் இன்றளவும் துருப் பிடிக்காமல் உள்ளது.

**26. சமூகம்**

குப்தர்காலச் சமூகம் நான்கு வர்ணங்களைக் கொண்ட வர்ண முறையில் அமைந்திருந்தது. அது தந்தைவழிச் சமூகமாக இருந்தது. 'மனு'வின் சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. அவற்றின்படி பெண்கள் , தந்தையின், கணவனின் அல்லது மூத்த மகனின் பாதுகாப்பில் இருத்தல் வேண்டும்.

**27. குப்தர் காலச் சமூகத்தின் தீங்கு என்ன?**

பலதார மணம் பரவலாக நடைமுறையில் இருந்தது. அரசர்களும் நிலப்பிரபுக்களும் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியரைப் பெற்றிருந்தனர். **குபேரநாகா, துருபசுவாமினி** ஆகிய இருவரும் இரண்டாம் சந்திரகுப்தரின் அரசர் எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. உடன்கட்டை (சதி) ஏறும் முறை குப்தர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டது.

**28. அடிமை முறை**

இந்தியாவில் அடிமைமுறை மேலைநாடுகளில் இருந்தது போல ஒரு நிறுவனமாக இல்லை. ஆனால் குப்தர்கள் காலத்தில் பல்வகைப்பட்ட அடிமைகள் இருந்ததாகச் சான்றுகள் உணர்த்துகின்றன்

**29. குப்தர் காலத்தல் மதம்:**

வேத மதமும் வேதச் சடங்குகளும் புத்துயிர் பெற்று, மீண்டும் நடைமுறைக்கு வந்தன. சமுத்திரகுப்தரும் முதலாம் குமாரகுப்தரும் **அஸ்வமேத யாகம்** (குதிரைகளைப் பலி கொடுத்துச் செய்யப்படும் வேள்வி) நடத்தினர்.

**30. குப்தர் காலத்தில் தோன்றிய இரு பிரிவுகள் யாவை?**

குப்தர்கள் காலத்தில்தான் உருவ வழிபாடு தொடங்கியதையும் **வைணவம், சைவம்** ஆகிய இரு பிரிவுகள் தோன்றின. ஹீனயானம், மகாயானம் எனப் பௌத்தம் இரண்டாகப் பிரிந்தாலும் அது தொடர்ந்து வளர்ந்து வந்தது.

**31. குப்தர் கால கலையும் கட்டடக்கலையும்**

கட்டுமானக் கோவில்களை முதன்முதலாகக் கட்டியவர்கள் குப்தர்கள். இது முன்பிருந்த மரபான பாறைக் குடைவரைக் கோவில்களின் அடுத்த கட்டப் பரிணாம வளர்ச்சியாகும். கோபுரங்களோடு விரிவான செதுக்குவேலைப்பாடுகளோடும் அனைத்து இந்து தெய்வங்களுக்கும் இக்கோவில்கள் கட்டப்பட்டன.

**32. குப்தர் காலக் கட்டிடக்கலை:**

- மிகவும் குறிப்பிடத்தக்க **பாறைக் குடைவரைக் குகைகள்** அஜந்தா, எல்லோரா (மகாராஷ்டிரா), பாக் (மத்தியப் பிரதேசம்), உதயகிரி (ஒடிசா) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- இக்காலப் பகுதியில் கட்டப்பட்ட **கட்டுமானக் கோவில்கள் , திராவிட பாணிக் கூறுகளை ஒத்திருக்கின்றன.**
- குப்தர்களின் உலோகச் சிற்பத்திற்கு இரு சிறந்த எடுத்துக்காட்டுகள்:
  i. நாளந்தாவிலுள்ள 18 அடி உயரமுள்ள புத்தரின் செப்புச் சிலை.
  ii. சுல்தான் கஞ்ச் என்னும் இடத்திலுள்ள ஏழரை அடி உயரமுள்ள புத்தரின் உலோகச் சிற்பம்.

- குப்தர்களின் ஓவியக் கலைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்பவை அஜந்தா குகை ஓவியங்களும், குவாலியர் பாக் குகையில் காணப்படும் ஓவியங்களும் ஆகும்.

**33. குப்தர்கள் பேசிய மொழி என்ன?**

பிராகிருதம் மக்களால் பேசப்படும் மொழியாக இருந்தபோதிலும் **குப்தர்கள் சமஸ்கிருதத்தை அலுவலகமொழியாகக் கொண்டிருந்தனர்**. அவர்களின் கல்வெட்டுகள், அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே உள்ளன.

**34. குப்தர்கள் காலத்தில் சமஸ்கிருதம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது?**

குப்தர்கள் காலத்தில் சமஸ்கிருத இலக்கணமும் வளர்ச்சி பெற்றது. அது **பாணினி எழுதிய அஷ்டதியாயி, பதஞ்சலி எழுதிய மகா பாஷ்யம்** எனும் நூல்களை அடிப்படையாகக் கொண்டது.

**35. சந்திர வியாகரணத்தை எழுதியவர் யார்?**

வங்காளத்தைச் சேர்ந்த **சந்திரோகோமியா** எனும் பௌத்த அறிஞர் 'சந்திர வியாகரணம்' என்ற இலக்கண நூலை எழுதினார்.

**36. காளிதாசர் இயற்றிய நூல்கள் யாவை?**

காளிதாசர் இயற்றிய நாடக நூல்கள், **சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்கிரம ஊர்வசியம்** என்பனவாகும்.

அவருடைய ஏனைய சிறப்புமிக்க நூல்கள் மேகதூதம், ரகுவம்சம், குமாரசம்பவம், ரிதுசம்காரம் ஆகியனவாகும்.

**37. குப்தர்கள் நவீன உலகிற்கு விட்டுச்சென்றுள்ள மரபுவழிச் சொத்து எது?**

**பூஜ்ஜியத்தின்** கண்டுபிடிப்பும், அதன் பரிணாம வளர்ச்சியாகத் தசம எண் முறையும் குப்தர்கள் நவீன உலகிற்கு விட்டுச்சென்றுள்ள மரபுவழிச் சொத்தாகும்.

**38. மிக முக்கிய கணிதவியல், வானியல் அறிஞர்கள்:**

**ஆரியபட்டர், வராகமிகிரர், பிரம்மகுப்தா** ஆகியோர் குப்தர்கள் காலப் பகுதியைச் சேர்ந்த மிக முக்கிய கணிதவியல், வானியல் அறிஞர்கள் ஆவர்.

**39. பூமி தனது அச்சில் சுழல்கிறது எனும் உண்மையை அறிவித்த முதல் இந்திய வானியல் ஆய்வாளர் யார்?**

**ஆரியப்பட்டர்** தனது நூலான **'சூரிய சித்தாந்தா'**வில் சூரிய , சந்திர கிரகணங்களுக்கான உண்மைக் காரணங்களை விளக்கியுள்ளார். பூமி தனது அச்சில் சுழல்கிறது எனும் உண்மையை அறிவித்த முதல் இந்திய வானியல் ஆய்வாளர் இவரேயாவார்.

40. மருத்துவத்துறையில் புகழ் பெற்ற அறிஞர் **தன்வந்திரி** ஆவார். அவர் ஆயுர்வேத மருத்துவத்தில் நிபுணராகத் திகழ்ந்தார்.

41. **சாராக்கர்** ஒரு மருத்துவ அறிவியல் அறிஞராவார்.

42. **சுஸ்ருதர்** அறுவைச் சிகிச்சை செய்முறையைப் பற்றி விளக்கிய முதல் இந்தியர் ஆவார்.

43. **குப்தர்களால் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள்:**

இரும்பு, தங்கம், தாமிரம், ஈயம், பித்தளை, செம்பு, மணி வெண்கலம், மைக்கா, மாங்கனீசு, சிகப்புச் சுண்ணம் ஆகியவையாகும்.

44. குப்தர்களின் நாணய அமைப்பு முறையை அறிமுகப்படுத்தியவர் சமுத்திரகுப்தர் ஆவார். குஷாணர்களின் நாணயங்கள் சமுத்திர குப்தருக்கு உந்துதலை வழங்கின. குப்தர்களின் பொற்காசுகள் **தினாரா** என்றழைக்கப்பட்டன.

45. **பாகியான்**

இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில், சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி பாகியான் இந்தியாவிற்கு வந்தார். அவருடைய பயணக் குறிப்புகள் குப்தர் காலத்து மக்களின் சமூக-பொருளாதார, மத, ஒழுக்க நிலைகள் பற்றிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன.

46. பாகியான் கூற்றுப்படி, மகதத்து மக்கள் மகிழ்ச்சியோடும் செழிப்போடும் வாழ்ந்தனர். கடுமையான தண்டனையின்றி நீதி வழங்கப்பட்டது. மரணதண்டனை வழங்கப்படவில்லை. கயா பாழடைந்திருந்தது. கபிலவஸ்து காடாகியிருந்தது. ஆனால் பாடலிபுத்திரத்தில் மக்கள் செல்வத்தோடும் செழிப்போடும் வாழ்ந்தனர்.

47. **இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ மேகவர்மன்** எனும் பௌத்த அரசன் சமுத்திரகுப்தரின் சமகாலத்தவராவார்.

**48. இரண்டாம் சந்திரகுப்தரின் பட்டப்பெயர்கள்:**

விக்கிரமாதித்தியர், நரேந்திர சந்திரர், சிம்ம சந்திரர், நரேந்திர சிம்மர், விக்கிரம தேவராஜர், தேவ குப்தர், தேவஸ்ரீ.

**49. சமுத்திரகுப்தரின் முக்கியத்துவம்:**

- சமுத்திரகுப்தர் ஒரு விஷ்ணு பக்தராவார்.
- போர்களில் வெற்றி பெற்றதன் நினைவாக நடத்தப்படும் வேதகாலச் சடங்கான குதிரைகளைப் பலியிடும் வேள்வியைச் சமுத்திரகுப்தர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார். அவர் தங்க நாணயங்களை வெளியிட்டார்.
- அவற்றுள் ஒன்றில் அவர் வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் மிகச் சிறந்த படையெடுப்பாளர் மட்டுமல்ல; கவிதைப் பிரியரும் இசைப் பிரியருமாவார். அதனால் **'கவிராஜா'** எனும் பட்டம் பெற்றார்.

**50. பிரசஸ்தி என்றால் என்ன?**

பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் 'புகழ்வதாகும்'. அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்துபாடி அவர்தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர். இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.

51. **லிச்சாவி** பழமையான கன சங்கங்களில் ஒன்றாகும். அதனுடைய ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாள நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

52. **விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள்**

| | |
|---|---|
| **காளிதாசர்** | **சமஸ்கிருதப் புலவர்** |
| **ஹரிசேனர்** | **சமஸ்கிருதப் புலவர்** |
| **அமர சிம்ஹர்** | **அகராதியியல் ஆசிரியர்** |
| **தன்வந்திரி** | **மருத்துவம்** |
| **காகபானகர்** | **சோதிடர்** |
| **சன்கு** | **கட்டடக் கலை நிபுணர்** |
| **வராகமிகிரர்** | **வானியல் அறிஞர்** |
| **வராச்சி** | **இலக்கண ஆசிரியர் மற்றும் சமஸ்கிருந்தப் புலவர்** |
| **விட்டல்பட்டர்** | **மாயவித்தைக்காரர் (Magician)** |

53.




54. **குப்தர் காலத்தில் நிலங்களை வகைப்படுத்துதல்**

| | |
|---|---|
| **க்ஷேத்ரா** | **வேளாண்மைக்கு உகந்த நிலங்கள்** |
| **கிலா** | **தரிசு நிலங்கள்** |
| **அப்ரகதா** | **வனம் அல்லது காட்டு நிலங்கள்** |
| **வஸ்தி** | **குடியிருப்பதற்கு உகந்த நிலங்கள்** |
| **கபத சரகா** | **மேய்ச்சல் நிலங்கள்** |

55.

| சிரேஸ்தி | சார்த்தவாக |
|---|---|
| சிரேஸ்தி பிரிவைச் சார்ந்த வணிகர்கள் ஓரிடத்தில் நிலையாக இருந்து வணிகம் செய்தவர்கள் | சார்த்தவாகா வணிகர்கள் எருது பூட்டிய வண்டிகளில் சரக்குகளை ஏற்றி பல்வேறு இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தவர்கள். |

**56. நாளந்தா பல்கலைக்கழகம்**

- நாளந்தா பல்கழைக்கழகம் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் குப்தப் பேரரசின் ஆதரவில் தழைத்தோங்கியது. பின்னர் கன்னோசியைச் சேர்ந்த பேரரசர் ஹர்ஷரின் ஆதரவில் சிறப்புற்றது.
- நாளந்தாவில் பௌத்தத் தத்துவமே முக்கியப் பாடப்பிரிவாக இருந்தது. யோகா, வேத இலக்கியங்கள், மருத்துவம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன.
- அப்பல்கலைக்கழகத்தில் யுவான் –சுவாங் பௌத்த தத்துவத்தைப் பற்றிப் படிப்பதில் பல ஆண்டுகள் செலவழித்தார்.
- அந்த வளாகத்தில் எட்டு மகாபாடசாலைகளும் மூன்று மிகப்பெரிய நூலகங்களும் இருந்தன.
- நாளந்தா பல்கலைக்கழகம் பக்தியார்கில்ஜி என்பாரின் தலைமையில் வந்த மம்லுக்குகள் என அழைக்கப்பட்ட துருக்கிய இஸ்லாமிய அடிமை வீரர்களால் அழித்துத்தரைமட்டம் ஆக்கப்பட்டது.
- நாளந்தா யுனெஸ்கோவின் உலகப்பாரம்பரியச் சின்னமாகும்.

**57. ஹூணர்கள் என்போர் யாவர்?**

**ஹூணர்கள்** என்போர் நாடோடிப் பழங்குடியினராவர். தங்கள் மாபெரும் தலைவர் அட்டில்லாவின் தலைமையில் இவர்கள் ரோமாபுரியையும் கான்ஸ்டாண்டிநோபிளையும் பேரச்சத்திற்கு உள்ளாக்கினர். இவர்களோடு தொடர்புடைய **வெள்ளை ஹூணர்கள்** மத்திய ஆசியா வழியாக இந்தியா வந்தனர். தங்கள் தொடர் படையெடுப்புகளின் மூலமாக எல்லையோர நாடுகளுக்குத் தொந்தரவு கொடுத்துவந்தனர். ஸ்கந்தகுப்தரைத் தோற்கடித்த பின்னர் இவர்கள் மத்திய இந்தியப் பகுதிகளில் பரவினர். அவர்களின் தலைவரான தோரமானர் தனக்குத் தானே அரசராக முடி சூட்டிக் கொண்டார். அவருக்குப் பின்னர் அவரது மகன் மிகிரகுலர் ஆட்சி செய்தார். முடிவில், மத்தியில் இந்தியாவில் மாளவத்தை ஆட்சி செய்துவந்த யசோதர்மன் அவர்களைத் தோற்கடித்து அவர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டினார்.

# 6th Social Science Lesson 18 Notes in Tamil

## 18. தென்னிந்திய அரசுகள்

1. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வடக்கே ஹர்ஷருடைய ஆட்சியின் சமகாலத்தில் தொலைதூரத் தென்பகுதிகள் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட **பல்லவ** அரசர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருந்தன. அவர்களின் ஆட்சிப்பகுதி **சோழ, பாண்டிய** அரசுகளின் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

2. மத்திய மற்றும் கிழக்குத் தக்காணத்தின் பெரும்பகுதி வாதாபிச் (பதாமி) சாளுக்கியர்களின் கீழிருந்தன. **சாளுக்கியர்கள்** பின்னர் **ராஷ்டிரக்கூடர்களால்** அங்கிருந்து புறம் தள்ளப்பட்டனர்.

**3. இடைக்கால இந்தியாவின் பண்பம்சமாக இருந்தது, எது?**

பிராந்திய அதிகார மையங்களின் தோற்றமே இடைக்கால இந்தியாவின் பண்பம்சமாக இருந்தது.

**4. பல்லவர் அரசர்கள் ஆண்ட பகுதிகள் யாவை?**

பல்லவ அரசர்கள் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியில் முக்கிய வணிக மையமாகத் திகழ்ந்த காஞ்சிபுரத்தையும், அதன் வளம் நிறைந்த வேளாண்பகுதிகளையும் ஆண்டனர்.

**5. பல்லவர்கள் கால அரசியல் எவ்வாறு இருந்தது?**

வளம் கொழித்த வணிக மையமான காஞ்சிபுரத்திலிருந்து பிற்காலப் பல்லவர்கள் தங்கள் அரசாட்சியை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகம் முழுவதும் விரிவடையச் செய்தனர். ஆனாலும் தொண்டை மண்டலமே பல்லவ அரசின் மையப்பகுதியாக இருந்தது. இப்பெரிய அரசியல் பிரந்தியம் தமிழ்நாட்டின் வட பகுதிகளையும் அருகே அமைந்திருந்த ஆந்திர மாவட்டங்களையும் கொண்டிருந்தது.

**6. பல்லவர்கள் கால சான்றுகள்**

- **கல்வெட்டுகள்**
  மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு
- **செப்பேடுகள்**
  காசக்குடிச் செப்பேடுகள்
- **இலக்கியங்கள்**
  மத்தவிலாசப் பிரகசனம், அவந்தி சுந்தரி காதை, கலிங்கரத்துப்பரணி, பெரியபுராணம், நந்திக் கலம்பகம்.

- **அயலவர் குறிப்புகள்**

  யுவான் சுவாங்கின் குறிப்புகள்

**7. தொடக்ககாலப் பல்லவ அரசர்கள்** சாதவாகனர்களின் **கீழ் சிற்றசர்களாக** இருந்தனர்.

**8. பல்லவ வம்சாவளி**

- இரண்டாம் சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு (கி.பி. (பொ.ஆ.மு) 550 வாக்கில்) களப்பிரர்களை அழித்து ஒரு வலுவான பல்லவ அரசை உருவாக்கினார்.
- சோழர்கள், பாண்டியர்கள் உள்ளிட்ட பல தென்னக அரசர்களை அவர் வெற்றி கொண்டார்.
- அவருடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் மிகத் திறமை வாய்ந்த அரசரால விளங்கினார்.
- அவருக்குப் பின் அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இரண்டாம் நரசிம்மவர்மன் அதாவது ராஜசிம்மன், இரண்டாம் நந்திவர்மன் ஆகியோர் ஏனைய முக்கிய அரசர்கள் ஆவர்.

**9. கடைசிப் பல்லவ மன்னர் யார்?**

அபராஜிதன்

10. முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதி, சிறுத்தொண்டர் (63 நாயன்மார்களில் ஒருவர்) எனப் பிரபலமாக அறியப்பட்டார். பரஞ்சோதி வாதாபிப் படையெடுப்பில் பல்லவர் படைக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அதன் வெற்றிக்குப் பின்னர் மனமாற்றம் பெற்ற அவர் சிவபக்தராக மாறினார்.

- பெரியபுராணம்

**11. மகேந்திரவர்மனின் முக்கியத்துவம்:**

**மகேந்திரவர்மன் (கி.பி. 600 – 630)**

பல்லவ ஆட்சியின் சிறப்புக்குப் பங்களிப்புச் செய்தார். தொடக்கக்காலத்தில் அவர் சமண சமயத்தைப் பின்பற்றினார். பின்னர் **சைவத் துறவி** அப்பரால் (திருநாவுக்கரசர்) சைவத்தைத் தழுவினார்.

**12. கலை மற்றும் கட்டடக்கலையில் மகேந்திரவர்மனின் பங்கு:**

கலை மற்றும் கட்டடக்கலைக்கு அவர் பேராதரவு அளித்தார். திராவிடக் கட்டடக்கலைக்கு ஒரு புதிய பாணியை அறிமுகம் செய்தார். அது 'மகேந்திரபாணி' எனக் குறிப்பிடப்படுகின்றது. மத்தவிலாசப்பிரகசனம் (குடிகாரர்களின் மகிழ்ச்சி) உட்பட சில நாடகங்களைச் சமஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார். இந்நாடகம் பௌத்தத்தை இழிவுபடுத்தும் வகையில் உள்ளது.

**13. மகேந்திரவர்மன் யாருடன் போர்கள் மேற்கொண்டான்?**

மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் வாதாபியைத் தலைநகராகக் கொண்ட மேலைச் **சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி**யோடு தொடர்ந்து போர்கள் மேற்கொள்ளப்பட்டன.

**14. மகேந்திரவர்மனைத் தோற்கடித்தவர் யார்?**

போர்களுள் ஒன்றில் **இரண்டாம் புலிகேசி மகேந்திர வர்மனை வெற்றி கொண்டு நாட்டின் வடக்கில் பெரும் பகுதியை (வெங்கி) கைப்பற்றியதாகத் தெரிகிறது. அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் (ஏறத்தாழ 630 – 668)** இத்தோல்விக்குப் பழிவாங்கும் வகையில் சாளுக்கியரின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார். வாதாபி தீக்கிரையாக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசியும் கொல்லப்பட்டார்.

**15. இரண்டாம் நரசிம்மவர்மன் (ஏறத்தாழ 695 – 722)**

- இரண்டாம் நரசிம்மவர்மன் ராஜசிம்மன் எனவும் அழைக்கப்பட்டார். அவர் மாபெரும் வீரர் ஆவார்.
- சீன அரசுக்கு தூதுக்குழுக்களை அனுப்பினார்.
- சீனநாட்டின் தூதுக்குழுக்களை வரவேற்றார்.
- ஒப்பீட்டளவில் அவரது காலத்தில் அரசியல் பிரச்சனைகள் அதிகம் இல்லாததால் அவரால் கோவில்களைக் கட்டுவதில் கவனம் செலுத்த முடிந்தது.
- **காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலைக் கட்டினார்..**

**16. கட்டடக் கலைக்குப் பல்லவர்களின் பங்களிப்பு**

பல்லவர் காலம் கட்டடக்கலைச் சிறப்புகளுக்குப் பெயர் பெற்ற காலமாகும். **மாமல்ல புரத்திலுள்ள ஒற்றைக் கருங்கல்லில் செதுக்கி உருவாக்கப்பட்ட கடற்கரைக் கோவிலும், ஏனைய கோவில்களும், வராகர் குகையும் (ஏழாம் நூற்றாண்டு)** பல்லவக் கட்டடக் கலையின் ஈடு இணையற்ற அழகிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**17. எப்பொழுது, யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் அட்டவணையில் மாமல்லபுரம் சேர்க்கப்பட்டது?**

1984 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் அட்டவணையில் மாமல்லபுரம் சேர்க்கப்பட்டது.

**18. பல்லவர் கட்டடக் கலையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

1. பாறைக் குடைவரைக் கோவில்கள் – மகேந்திரவர்மன் பாணி

2. ஒற்றைக்கல் ரதங்களும் சிற்ப மண்டபங்களும் – மாமல்லன் பாணி
3. கட்டுமானக் கோவில்கள் – ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி

**19. மகேந்திவர்மன் பாணி**

மகேந்திரவர்மன் பாணியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னங்களுக்கு **மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர், தளவானூர், திருச்சிராப்பள்ளி, வல்லம், திருக்கழுக்குன்றம், சியாமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோவில்கள்** சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**20. மாமல்லன் பாணி:**

**மாமல்லபுரத்திலுள்ள பஞ்சபாண்டவர் ரதங்கள்** எனப் பிரபலமாக அமைக்கப்படும் ஐந்து **ரதங்கள் ஐந்து வகையான கோவில்கட்டட பாணியை உணர்த்துகின்றன.** ஒவ்வொரு இரதமும் ஒவ்வொரு தனிக் கல்லிலிருந்து செதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவை ஒற்றைக்கல் ரதங்கள் என அழைக்கப்படுகின்றன.

**மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம், வராகர் மண்டபம்** ஆகிய அவர் கட்டியுள்ள பிரபலமான மண்டபங்களாகும்.

**21. கட்டடக்கலையில் மாமல்லனின் பங்கு:**

- மாமல்லனின் கட்டடக்கலைப் பாணியில் அமைந்துள்ளவற்றில் மிகவும் முக்கியமானது மகாபலிபுரத்திலுள்ள திறந்தவெளிக் கலையரங்கம் ஆகும்.
- பெரும் பாறையொன்றின் சுவற்றில், **பேன் பார்க்கும் குரங்கு, பெரிய வடிவிலான யானைகள், தவமிருக்கும் பூனை** ஆகிய நுண்ணிய சிற்பங்கள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.
- சிவபெருமானின் தலையிலிருந்து அருவியெனக் கொட்டும் கங்கைநதி, **அர்ச்சுனன் தபசு** ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.
- பெருந்தவ வடிவச் சிற்ப வேலைப்பாடு உலகில் செதுக்கப்பட்ட திறந்தவெளிச் சிற்பங்களில் மிகப்பெரியதாகும்.

**22. ராஜசிம்மன் பாணி**

ராஜசிம்மன் எனவும் அறியப்பட்ட இரண்டாம் நரசிம்மவர்மன் பெருங்கற்களைக் கொண்டு கட்டுமானக் கோவில்களைக் கட்டினார். காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் கட்டுமானக் கோவில் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோவில்கள் மிருதுவான மணற் கற்களால் கட்டப்பட்டவையாகும். **கைலாசநாதர் கோவில் ராஜசிம்மேஸ்வரம் என்று அழைக்கப்படுகிறது.**

**23. நந்திவர்மன் பாணி**

பல்லவ கோவில் கட்டடக்கலையின் இறுதிக் கட்டம் பிற்காலப் பல்லவர்களால் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்களால் பிரதிநித்துவப்படுத்தப்படுகின்றன. **காஞ்சிபுரத்திலுள்ள வைகுண்டப்பெருமாள் கோவில் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.**

**24. பல்லவர்களின் சமூகமும் பண்பாடும்**

பல்லவ அரசர்கள் பௌத்த, சமண சமயங்களையும் வேத சமயத்தையும் ஆதரித்தனர். அவர்கள் இசை, ஓவியம், இலக்கியம் ஆகியவற்றின் புரவலர்களாய்த் திகழ்ந்தனர். பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் புதிய வடிவிலான **சைவம், வைணவம்** ஆகியவற்றைப் போதித்தனர்.

**25. சைவ , வைணவ அடியார்கள் யார்?**

**அப்பரும், மாணிக்கவாசகரும் சைவ அடியார்களாகவும், நம்மாழ்வாரும், ஆண்டாளும் வைணவ அடியார்களாகவும்** விளங்கினர்.

**26. பல்லவர்களின் வழிபாட்டு மொழி:**

பக்தி மார்க்கத்தைப் போதிப்பதை நோக்கமாகக் கொண்ட இவ்வியக்கம் சமஸ்கிருதத்தை விடவும் தமிழுக்கு முன்னுரிமை வழங்கியது. சமயக் கூட்டங்களில் பங்கேற்க பெண்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**27. பௌத்தம் மற்றும் சமணத்தின் வீழ்ச்சி:**

தமிழ் பக்தி வழிபாடு பௌத்த, சமண சமயங்களுசன் போட்டிபோட்டது. இதன் விளைவாகப் பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியுற்றன.

**28. கடிகை என்றால் என்ன?**

காஞ்சியிலிருந்த கடிகை (மடாலயம் அல்லது கல்வி மையம்) பல்லவர் காலத்தில் புகழ்பெற்று விளங்கியது. அது இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்களைத் தன்பால் ஈர்த்தது. **நியாய பாஷ்யா எனும் நூலை எழுதிய வாத்ஸ்யாயர் காஞ்சிக் கடிகையில் ஆசிரியராக இருந்தார்.**

**29. தட்சிண சித்திரம் யாருடைய ஆட்சிக்காலத்தில் தொகுக்கப்பட்டது?**

தென்னிந்திய ஓவியங்கள் குறித்த ஆய்வேடான தட்சிண சித்திரம் **முதலாம் மகேந்திரவர்மனின்** ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்டது.

**30. தண்டின் யாருடைய அவையை அலங்கரித்தார்?**

மாபெரும் சமஸ்கிருத அறிஞரான தண்டின் **முதலாம் நரசிம்மவர்மனின்** அவையை அலங்கரித்தார். **அவர் தசகுமார சரிதம் எனும் நூலை எழுதினார்.**

**31. பாரவி என்பவர் யார்?**

மற்றொரு சமஸ்கிருத அறிஞரான பாரவி **சிம்மவிஷ்ணுவின் காலத்தில் வாழ்ந்தார். அவர் கிராதார்ஜுனியம் என்னும் வடமொழிக் காப்பியத்தை வடித்தார்.**

**32. பல்லவர்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி:**

தமிழ் இலக்கியமும் வளர்ச்சி பெற்றிருந்தது. **நாயன்மார்களால் இயற்றப்பட்ட தேவாரமும் ஆழ்வார்களால் படைக்கப்பட்ட நாலாயிர திவ்விய பிரபந்தமும் பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட சமய இலக்கியங்களாகும்**.

**33. மகாபாரதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?**

இரண்டாம் நந்திவர்மனால் ஆதரிக்கப்பட்ட **பெருந்தேவனார்** மகாபாரதத்தை, பாரதவெண்பா எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார்.

**34. பல்லவர்காலக் கலை:**

பல்லவ அரசர்கள் கவின்கலைகளையும் ஆதரித்தனர். **குடுமியான்மலை, திருமயம்** ஆகிய இடங்களிலுள்ள கோவில்களில் காணப்படும் இசை குறித்த கல்வெட்டுக்கள் இசையில் பல்லவர் கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன.

**35. ருத்ராச்சாரியர் என்பவர் யார்?**

புகழ்பெற்ற இசைக் கலைஞரான **ருத்ராச்சாரியர் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர்.**

**36. பல்லவர்களின் எல்லைப்பரப்புகள்**




**37.**

| அரசர்களின் பெயர்கள் | பட்டங்கள் |
|---|---|
| சிம்ம விஷ்ணு | அவனிசிம்மர் |
| முதலாம் மகேந்திரவர்மன் | சங்கீரணஜதி, மத்தவிலாசன், குணபாரன், சித்திரகாரப் புலி, விசித்திர சித்தன் |
| முதலாம் நரசிம்மவர்மன் | மாமல்லன், வாதாபி கொண்டான் |

**38. சாளுக்கியர்**

சாளுக்கியர் தென்னிந்தியாவின் மத்தியிலும் மேற்கிலும் மராத்திய நாட்டை உள்ளடக்கிய பெரும்பகுதியை ஆண்டனர். அவர்களின் **தலைநகர் வாதாபி(பதாமி)**.

**39. சாளுக்கியரின் வம்சங்கள் யாவை?**

சாளுக்கியர்களில் மூன்று வெவ்வேறு ஆனால் நெருங்கிய தொடர்புடைய, சார்பற்ற வம்சங்கள் இருந்தன. அவை

1. வாதாபிச் சாளுக்கியர்கள்
2. வெங்கிச் சாளுக்கியர்கள் (கீழைச் சாளுக்கியர்கள்)

3. கல்யாணிச் சாளுக்கியர்கள் (மேலைச் சாளுக்கியர்கள்)

**40. சாளுக்கியரின் எல்லைகள்:**

வடக்கே ஹர்ஷரின் பேரரசும், தெற்கே பல்லவ நாடும், கிழக்கே கலிங்கமும் (ஒடிசா) சாளுக்கியர்களின் எல்லைகளாக இருந்தன.

**41. சாளுக்கியர்களின் சான்றுகள்**

**கல்வெட்டுகள்**

மங்களேசனின் வாதாபி குகைக் கல்வெட்டு, காஞ்சி கைலாசநாதர் கோவில் கல்வெட்டு, பட்டடக்கல் விருபாக்ஷாகோவில் கல்வெட்டு, முதலாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு.

**அயலவர் குறிப்புகள்**

யுவான் சுவாங்கின் குறிப்புகள்

**42. வாதாபி மலைக்கோட்டையைக் கைப்பற்றியவர் யார்?**

**முதலாம் புலிகேசி,** பிஜப்பூர் மாவட்டம் பட்டடக்கல்லில் ஒரு குறுநில மன்னராக இருந்தார். **கி.பி. (பொ.ஆ) 543 இல்** வாதாபி மலைக்கோட்டையைக் கைப்பற்றி அதனைச் சுற்றி மதில் சுவர் எழுப்பினார். விரைவில் கிருஷ்ணா, துங்கபத்ரா ஆகிய நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியையும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளையும் கைப்பற்றினார்.

**43. கீர்த்திவர்மன் என்பவர் யார்?**

முதலாம் புலிகேசியின் மகன் முதலாம் கீர்த்திவர்மன் (ஆட்சிக்காலம் கி.பி, (பொ.ஆ) 566-597) கொங்கணக் கடற்கரைப் பகுதியைச் சாளுக்கியரின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

**44. இரண்டாம்புலிகேசி:**

1. இரண்டாம் புலிகேசி (ஆட்சிக்காலம் கி.பி 610-642) இவ்வம்சத்தின் மிகவும் வலிமை பெற்ற அரசராவார்.
2. பாரசீக (ஈரான்) அரசர் இரண்டாம் குஸ்ரூ இரண்டாம் புலிகேசியின் அவைக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பிவைத்தார்.
3. குஜராத், மாளவம் ஆகியவற்றின் சில பகுதிகளைக் கைப்பற்றுவதிலும் புலிகேசி வெற்றி பெற்றார்.
4. இவர் வட இந்திய அரசர் ஹர்ஷருக்கு அடிபணிய மறுத்தார்.

5. இருவரும் ஒப்புக் கொண்டபுரிதலின்படி இருவருக்கும் இடையிலான எல்லையாக நர்மதை நதி வரையறை செய்யப்பட்டது.

**45. வெங்கி அரசைக் கைப்பற்றிய இரண்டாம் புலிகேசி அதை யாருக்கு வழங்கினார்?**

கி.பி. 624 காலப்பகுதியில் வெங்கி அரசைக் கைப்பற்றிய இரண்டாம் புலிகேசி அதைத் தன்னுடைய சகோதரர் விஷ்ணுவர்த்தனருக்கு வழங்கினார். **விஷ்ணுவர்த்தனர் முதல் கீழைச் சாளுக்கிய அரசரானார்.**

**46. தந்திதுர்க்கா போரில் யாரைத் தோற்கடித்தார்?**

**இரண்டாம் கீர்த்திவர்மனை** ராஷ்டிரகூட வம்ச அரசை நிறுவிய தந்திதுர்க்கா போரில் தோற்கடித்தார்.

**47. கல்யாணி மேலைச் சாளுக்கியர்**

இவர்கள் வாதாபிச் சாளுக்கியரின் வழித்தோன்றல்கள் ஆவர். கல்யாணியைத் (தற்போதைய பசவ கல்யாண்) தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். இரண்டாம் தைலப்பர் என்பவர் ராஷ்டிரக்கூடர்களின் சிற்றரசராக பிஜப்பூர் பகுதியை ஆண்டுவந்தார்.

**48. மாளவ அரசர்**

இவர் கி.பி. (பொ.ஆ) 973 இல் மாளவ அரசர் பராமரரைத் தோற்கடித்து கல்யாணியைக் கைப்பற்றினார். இவருடைய வம்சம் **முதலாம் சோமேஸ்வரனின்** ஆட்சியின்போது பேரரசாக வேகமாக வளர்ச்சி பெற்றது. **முதலாம் சோமேஸ்வரர்** தலைநகரை **மன்யகேட்டாவிலிருந்து கல்யாணிக்கு** மாற்றினார்.

**49. வெசாரா என்றால் என்ன?**

சாளுக்கியரின் காலத்தில் வெசாரா பாணியிலான கோவில் விமானங்களைக் கட்டும் முறை வளர்ச்சி பெற்றது. இது தென் இந்திய (திராவிட) மற்றும் வட இந்திய (நாகாரா) கட்டடப் பாணிகளின் கலப்பு ஆகும்.

**50. சாளுக்கியர் காலத்தில் கோவில்கள் எவ்வாறு கட்டப்பட்டன?**

கட்டுமானத்திற்கு மிருதுவான மணற்கற்களைப் பயன்படுத்தினர். சாளுக்கியர்கள் பெரும் எண்ணிக்கையிலான குடைவரைக் குகைக் கோவில்களையும், கட்டுமானக் கோவில்களையும் கட்டி சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய கடவுளர்களுக்கு அர்ப்பணித்தனர். கட்டுமானக் கோவில்கள் அய்கோல், வாதாபி, பட்டடக்கல் ஆகிய இடங்களில் உள்ளன.

**51. கல்யாணி மேலைச் சாளுக்கியரின் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்:**

- **வாதாபி மற்றும் அய்கோலிலுள்ள விஷ்ணு கோவில்கள், பிஜப்பூர் மாவட்டம் பட்டடக்கல்லிலுள்ள விருப்பாக்ஷா கோவில்** ஆகியன கற்களால் கட்டப்பட்ட கோவில்களாகும்.
- **வாதாபியிலுள்ள விஷ்ணு கோவில் சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த மங்களேசனால்** கட்டப்பட்டது.
- இரண்டாம் விக்கிரமாதித்தனுடைய **அய்கோல் கல்வெட்டு** அங்குள்ளது.
- அவர்களின் **குகைக்கோவில்கள் அஜந்தா, எல்லோரா, நாடசிக்** ஆகிய இடங்களில் உள்ளன.
- **வாதாபியிலுள்ள குகைக் கோவில்களில் சேஷநாகர் மீது சாய்ந்திருக்கும் விஷ்ணு, விஷ்ணுவின் வராக , நரசிம்ம, (பாதி சிங்கம் – பாதி மனிதன்) வாமன (குள்ள) அவதாரங்கள் நேர்த்திமிக்க சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன**.
- **லக்கண்டியிலுள்ள காசி விஸ்வேஸ்வரர் கோவில், பகலி என்னுமிடத்திலுள்ள கள்ளேஸ்வரர் கோவில், இட்டகியிலுள்ள மகாதேவா கோவில்** ஆகியவை .

**51. சாளுக்கியர்கள் கால ஓவியக்கலை எவ்வாறு இருந்தன?**

ஓவியங்களில் சாளுக்கியர் வாகடகர் பாணியைப் பின்பற்றினர். **அஜந்தா குகைகளில் காணப்படும் சில சுவரோவியங்கள் சாளுக்கியர் காலத்தைச் சேர்ந்தவை.** பாரசீகத் தூதுக்குழுவை இரண்டாம் புலிகேசி வரவேற்பது போன்றதொரு காட்சி அஜந்தா ஓவியமொன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**52. அய்கோல் கல்வெட்டு:**

இக்கல்வெட்டு அய்கோலிலுள்ள (பாகல்கோட் மாவட்டம், கர்நாடகா) மேகுதி கோவிலில் உள்ளது. இது சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு ஷர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.

**53. பட்டடக்கல் (** யுனெஸ்கோ உலகப்பாரம்பரியச் சின்னம்) கர்நாடக மாநிலம் பாகல்கோட் மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர் ஆகும். அங்கு 10 கோவில்கள் உள்ளன. அவற்றில் நான்கு வட இந்திய பாணியான நாகாரா பாணியிலும் மற்றுமுள்ள ஆறு தென்னிந்திய திராவிட பாணியிலும் கட்டப்பட்டுள்ளன.

54. **விருப்பாக்க்ஷா** கோவிலும் சங்கமேஸ்வரா கோவிலும் திராவிப் பாணியிலும் பாப்பநாதர் கோவில் நாகாரா பாணியில் அமைந்துள்ளன.

**55. காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்ட கோவில் எது?**

**விருப்பாக்க்ஷா கோவில்** காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணியில் காஞ்சிபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

**56. ராஷ்டிரக்கூடர்கள் என்பவர்கள் யார்?**

ராஷ்டிரக்கூடர்கள் தக்காணத்தை மட்டுமல்லாது, தூரத் தெற்குப் பகுதிகளையும் கங்கைச் சமவெளிப்பகுதிகளையும் எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர். அவர்கள் பிறப்பால் கன்னடர்களாவர். அவர்களின் தாய்மொழி கன்னடம்.

**57. ராஷ்டிரக்கூடர் வம்சத்தை நிறுவியவர் யார்?**

**தந்திதுர்க்கர்** ராஷ்டிரக்கூடர் வம்சத்தை நிறுவியவர் ஆவார். அவர் வாதாபிச் சாளுக்கியரிடம் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

**58. முதலாம் கிருஷ்ணரின் சாதனைகள்:**

முதலாம் கிருஷ்ணர் தந்திதுர்க்கரை அடுத்துப் பதவி ஏற்றார். அவர் ராஷ்டிரக்கூடர் ஆட்சியை ஒருங்கிணைத்து விரிவுபடுத்தினார். அவர் கலை மற்றும் கட்டிடக்கலையின் பெரும் ஆதரவாளர் ஆவார். **எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோவில் இவர் கட்டியதாகும்.**

**58. அமோகவர்ஷர் என்பவர் யார்?**

ராஷ்டிரக்கூட அரசர்களில் தலைசிறந்த அரசர் **அமோகவர்ஷர், அவர் மான்யக்கேட்டாவில் (தற்போது கார்நாடகாவிலுள்ள மால்கெட்) புதிய தலைநகரை உருவாக்கினார்**. புரோச், அவர்களின் துறைமுகமானது. அமோகவர்ஷர் (கி.பி. 814-878) ஜினசேனா எனும் சமணத் துறவியால் சமண மதத்திற்கு மாற்றப்பட்டார்.

**59. இரண்டாம் கிருஷ்ணர் என்பவர் யார்?**

அமோகவர்ஷருக்குப் பின்னர் அவரது மகன் இரண்டாம் கிருஷ்ணர் அரசரானார். கி.பி. 916 அவர் பராந்தகச் சோழனால் வல்லம் (தற்போதைய திருவல்லம், வேலூம் மாவட்டம்) போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

**60. மூன்றாம் கிருஷ்ணர் என்பவர் யார்?**

மூன்றாம் கிருஷ்ணர் ராஷ்டிரக்கூட வம்சத்தின் திறமை வாய்ந்த கடைசி அரசனாவார். இவர் சோழர்களைக் தக்கோலம் (தற்போதைய வேலூர் மாட்டத்தில் உள்ளது) போர்க்களத்தில் தோற்கடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார்.

**61. நாட்டைச் சரியான முறையில் வைத்திருந்த கடைசி அரசர் யார்?**

நாட்டைச் சரியான முறையில் வைத்திருந்த கடைசி அரசர் **மூன்றாம் கோவித்தனாவார்.** அவருக்குப்பின் ராஷ்டிரகூடரின் அதிகாரம் வீழ்ந்தது.

**62. கன்னட மொழியின் முதல் கவிதை நூல் எது?**

**அமோகவர்ஷரால்** இயற்றப்பட்ட **கவிராஜ மார்க்கம்** கன்னட மொழியின் முதல் கவிதை நூலாகும்.

**63. கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்கள் எனக் கருதப்படுபவர்கள் யார்?**

கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்கள் எனக் கருதப்படுபவர்கள் **ஆதிகவி பம்பா, ஸ்ரீ பொன்னா, ரன்னா** ஆகியோராவர். ஆதிகவி பம்பா அவரது நூலான ஆதிபுராணம், விக்கிரமார்ஜுன விஜயம் ஆகியவற்றிற்காகப் பெரும்புகழ் பெற்றவர்.

**64.** முதல் சமணத் தீர்த்தங்கரரான **ரிஷபதேவரின் வாழ்க்கையை ஆதிபுராணம் சித்தரிக்கின்றது.**

**65. விக்கிரமார்ஜுனவியம்** மஹாபாரதத்தின் மீள் தருகையாகும். இதில் தன்னை ஆதரித்த சாளுக்கிய அரிகேசரியை **அர்சுனனின்** பாத்திரத்தில் பொருத்தி பம்பா எழுதியுள்ளார்.

**66. ராஷ்டிரகூடர்களின் கலை மற்றும் கட்டிடக் கலை**

இந்தியக் கலைக்கு ராஷ்டிரகூடர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளபர். ராஷ்டிரகூடர்களின் கலை மற்றும் கட்டிடக்கலைச் சாதனைகளை எல்லோராவிலும் எலிபெண்டாவிலும் காணலாம்.

**67. கைலாசநாதர் கோவில் – எல்லோரா**

- **மகாராஷ்டிராவிலுள்ள ஔரங்காபாத் அருகில் உள்ளது.**
- எல்லோராவின் குன்றுப்பகுதியில் அமைத்துள்ள **முப்பது குடைவரைக் கோவில்**களில் கைலாசநாதர் கோவிலும் ஒன்று.
- **முதலாம் கிருஷ்ணருடைய ஆட்சிக் காலத்தில் இக்கோவில் உருவாக்கப்பட்டது**.
- இக்கோவில் அதன் கட்டடக்கலை பிரம்மாண்டத்திற்கும் சிற்பங்களின் அற்புதங்களுக்கும் பெயர் பெற்றதாகும்.
- இக்கோவில் **60,000 சதுர அடிகள் பரப்பளவை**க் கொண்டுள்ளது. இதனுடைய **விமானத்தின் (கோபுரம்) உயரம் 90 அடிகளாகும்.**
- இக்கோவில் மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலின் சாயலைப் பெற்றுள்ளது. கைலாசநாதர் கோவில் திராவிடக் கட்டடக்கலைக் கூறுகளைக் கொண்டுள்ளது.

**68. எலிபெண்டா தீவு**

இத்தீவின் இயற்பெயர் ஸ்ரீபுரி -உள்ளூர் மக்களால் காரபுரி என்று அழைக்கப்படுகிறது. எலிபெண்டா மும்பைக்கு அருகிலுள்ள ஒரு தீவு ஆகும். இத்தீவிலுள்ள பெரிய யானையின் உருவத்தைக் கண்ணுற்ற போர்த்துக்கீசியர்கள், இத்தீவுக்கு எலிபெண்டா தீவு எனப்பெயரிட்டனர்.

- எலிபெண்டா குகையிலுள்ள **திரிமூர்த்தி** (மூன்று முகங்கள் கொண்ட) சிவன் சிலையின் வனப்பு ஈடு இணையற்றதாகும்.
- கோவிலின் நுழைவாயிலில் காணப்படும் **துவாரபாலகர்களின் சிலைகள்** நமது கண்ணையும் கருத்தையும் கவர்பவை.

**69. பட்டடக்கல்**

பட்டடக்கல் வளாகத்தில் ராஷ்டிரகூடர்கள் கோவில்களைக் கட்டியுள்ளனர். **இங்குச் சமண நாராயணர் கோவிலும் காசிவிஸ்வேஸ்வரர் கோவிலும் ராஷ்டிரகூடர்களால் கட்டப்பட்டுள்ளன.**

# 6th Social Science Lesson 19 Notes in Tamil

## 19. ஆசியா

**1. ஆசியாவின் பரப்பளவு:**

ஆசியாவானது உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக மக்கள்தொகை கொண்ட கண்டமாகும். இஃது உலகின் பரப்பளவில் 30 சதவீதத்தையும், மக்கள் தொகையில் 60 சதவீதத்தையும் உள்ளடக்கியது.

**2. ஆசியாவின் நிலப்பரப்பு:**

ஆசியாவின் பெரும்பாலான நிலப்பரப்பு வடஅரைக்கோளத்தில் பரவியுள்ளது. இது பல வகையான நிலத்தோற்றம் மற்றும் கலாச்சாரக் கூறுகளைக் கொண்டுள்ளது. உயர்ந்த மலைகள், பீடபூமிகள், பரந்த சமவெளிகள், தீவுகள் மற்றும் தீபகற்பங்கள் ஆகியவை முக்கிய இயற்கை நிலத் தோற்றங்களாகும்.

**3. நாகரிகங்களின் தொட்டில்:**

வற்றாத ஆறுகள் ஆசியாவின் பல்வேறு நிலப்பரப்புகளில் பாய்கின்றன. இந்த **ஆற்றுப் பள்ளத்தாக்குகள் நாகரிகங்களின் தொட்டிலாகும். (மெசபடோமியா, சிந்துவெளி சீனநாகரீகம்)**

**4. ஆசியாவின் அமைவிடம் மற்றும் பரப்பு**

ஆசியா **$10^{\circ}11$ தெற்கு அட்சத்திலிருந்து $81^{\circ}12'$ வடக்கு அட்சம் வரையிலும், $26^{\circ}2'$ கிழக்கு தீர்க்கம் முதல் $169^{\circ}$ 40' மேற்குத் தீர்க்கம் வரையிலும்** பரவியுள்ளது. இதன் மொத்த பரப்பளவு **44 மில்லியன்** கி.மீ$^2$ ஆகும்.

**5. ஆசியாவின் எல்லைகள்**

ஆசியா கண்டம், **வடக்கில் ஆர்டிக் பெருங்கடல், கிழக்கில் பசிபிக் பெருங்கடல் தெற்கில் இந்தியப் பெருங்கடல், மேற்கில் யூரல், காகசஸ் மலைகள், செங்கடல், மத்தியத் தரைக்கடல், காஸ்பியன் கடல் மற்றும் கருங்கடல்** ஆகியனவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

**6. மற்ற கண்டங்களிலிருந்து ஆசியா எவ்வாறு பிரிக்கப்படுகிறது?**

**சூயஸ் கால்வாய்** ஆசியாவை ஆப்பிரிக்காவிடம் இருந்து பிரிக்கின்றது. **பேரிங் நீர்ச்சந்தி** ஆசியாவை வடஅமெரிக்காவிடம் இருந்து பிரிக்கின்றது.

**7. ஆசியாவின் அரசியல் பிரிவுகள் யாவை?**

ஆசியாவில் நாற்பத்து எட்டு நாடுகள் உள்ளன. இந்நாடுகள் நிலத்தோற்றம் மற்றும் அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை

**1. கிழக்கு ஆசியா** **2. தென்கிழக்கு ஆசியா** **3. தெற்கு ஆசியா**

**4. தென்மேற்கு ஆசியா** **5. மத்திய ஆசியா**

**8. ஆசியாவின் முக்கியத்துவம்**

ஆசியா **நீண்ட மலைத் தொடர்கள், பனி படர்ந்த உயர்ந்த மலைகள், அகன்ற பீடபூமிகள், பரந்த சமவெளிகள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரைகளைக் கொண்டுள்ளது**. இவ்வேறுபட்ட இயற்கைக் கூறுகள், இக்கண்டத்தில் காணப்படும் மக்களின் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணைபுரிகின்றன.

**9. ஆசியாவின் இயற்கை அமைப்பின் பிரிவுகள் யாவை?**

ஆசியாவின் இயற்கை அமைப்பினை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. வட தாழ்நிலங்கள்
2. மத்திய உயர் நிலங்கள்
3. தெற்கு பீடபூமிகள்
4. பெரும் சமவெளிகள்
5. தீவுக்கூட்டங்கள்

**10. வட தாழ்நிலங்கள்**

ஆசியாவிலேயே மிகவும் பரந்து காணப்படும் தாழ்நிலம் **சைபீரியச் சமவெளி** ஆகும். அது மேற்கே யூரல் மலைகளிலிருந்து கிழக்கே வெர்கோயான்ஸ்க் மலைத்தொடர் வரை பரந்து காணப்படுகின்றது.

**11. மத்திய உயர்நிலங்கள்**

மத்திய உயர்நிலங்கள் துருக்கியிலிருந்து **பேரிங் நீர்ச்சந்தி வரை** விரிந்து காணப்படுகின்றன. ஆசியாவில் இரு மலை முடிச்சுக்கள் காணப்படுகின்றன. அவை,

1. பாமீர் முடிச்சு
2. ஆர்மீனியன் முடிச்சு

**12. பாமீர் முடிச்சு**

- **இந்துகுஷ் மலைத்தொடர், சுலைமான் மலைத்தொடர், இமயமலைத்தொடர் மற்றும் டியான் ஷன் மலைத்தொடர்** போன்றன பாமீர் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.
- **இந்துகுஷ் மலைத்தொடர் மேற்கே எல்பர்ஸ்** எனவும், **சுலைமான் மலைத்தொடர் தென் மேற்கே ஜாக்ரோஸ் மலைத்தொடராகவும்** நீண்டு காணப்படுகிறது.

**13. ஆர்மீனியன் முடிச்சு**


- **எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோ**ஸ் இரண்டும் ஆர்மீனியன் முடிச்சில் ஒன்றிணைகிறது.
- **தாரஸ் மற்றும் போண்டைன்** மலைத்தொடர்கள் ஆர்மீனியன் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.
- **பெரிய கிங்கன், அல்டாய், வெர்கோயான்ஸ்க், அரக்கன்யோமா** போன்றவை இங்குக் காணப்படும் முக்கிய **மலைத்தொடர்கள்** ஆகும்.

14. **'முடிச்சு'** என்பது மலைத் தொடர்கள் கூடும்/பிரிவும் இடங்கள் ஆகும்.

**15. ஆசியாவிலுள்ள உயரமான சிகரம் மற்றும் தாழ்வான பகுதி எது?**

- இமயமலைத் தொடர்களே உலகின் உயரமான மலைத்தொடர் ஆகும். ஆசியாவின் உயர்ந்த சிகரம் **எவரெஸ்ட் சிகரம்** (8848மீ). ஆசியாவில் மட்டுமின்றி உலகின் உயரமான சிகரமும் இதுவே ஆகும்.
- உலகின் தாழ்வான பகுதி ஆசியாவிலுள்ள **சாக்கடலில்** உள்ளது.

**16. பாமீர் மற்றும் ஆர்மீனியனி முடிச்சிலிருந்து பிரிந்து செல்லும் மலைத்தொடர்கள்**




**17. ஆசியாவின் இயற்கையமைப்பு**




**18. ஆசியாவின் முக்கியப் பீடபூமிகள் யாவை?**

மலையிடைப் பீடபூமிகள் இம்மலைத் தொடர்களிடையே காணப்படுகின்றன. முக்கிய பீடபூமிகளாவன,

1. அனடோலிய பீடபூமி (போன்டைன் – தாரஸ் மலை)
2. ஈரான் பீடபூமி (எல்பர்ஸ் – ஜாக்ரோஸ்)
3. திபெத்திய பீடபூமி (குன்லுன் – இமயமலை)

19. திபெத் **'உலகின் கூரை'** என அழைக்கப்படுகின்றது. அங்கு நிலவும் கடுங்குளிரின் காரணமாகவும், நன்னீரின் மிகப்பெரும் இருப்பிடமாகவும், மக்கள் வாழ இயலாத சூழல் காணப்படுவதாலும் திபெத் **'மூன்றாம் துருவம்'** என்றும் அழைக்கப்படுகின்றது.

**20. தெற்கு பீடபூமிகளில் முக்கியத்துவம் வாய்ந்த பீடபூமிகள் யாவை?**

**தெற்குப் பீடபூமிகள், வடக்குப் பீடபூமிகளைக் காட்டிலும் உயரம் குறைந்து காணப்படுகின்றன.** தெற்குப் பீடபூமிகளின் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு பீடபூமிகளாவன: அரேபிய பீடபூமி (சௌதி அரேபியா), தக்காண பீடபூமி (இந்தியா), ஷான் பீடபூமி (மியான்மர்), யுனான் பீடபூமி (சீனா).

**21. தெற்கு பீடபூமிகளில் மிகப் பெரியது எது?**

அரேபியப் பீடபூமி

**22. பெரும் சமவெளிகள் எதனால் உருவாக்கப்படுகின்றன?**

- ஆசியாவின் முக்கிய ஆறுகளினால் இப்பெரும் சமவெளிகள் உருவாக்கப்படுகின்றன.
- அவையாவன: மேற்கு சைபீரியச் சமவெளி (ஓப் மற்றும் எனிசி), மஞ்சூரியன் சமவெளி (அமூர்), சீன பெரும் சமவெளி (யாங்சி மற்றும் சிகியாங்), சிந்து-கங்கைச் சமவெளி (சிந்து மற்றும் கங்கை), மெசபடோமிய சமவெளி (யூப்ரடிஸ் மற்றும் டைக்ரிஸ்), ஐராவதி சமவெளி (ஐராவதி).

**23. தீவுக்கூட்டங்கள் என்பவை யாவை?**

தென்கிழக்கு ஆசியாவின் பசிபிக் கடற்கரையையொட்டி எண்ணற்ற தீவுகள் காணப்படுகின்றன. **குரில், தைவான், சிங்கப்பூர்** மற்றும் **போர்னியோ** போன்றவை முக்கியமான தீவுகளாகும். பிலிப்பைன்ஸ், ஜப்பான் மற்றும் இந்தோனேசியா ஆகியவ மிகப்பெரிய தீவுக்கூட்டங்களாகும்.

**24. ஆசியாவின் மேலும் சில தீவுக்கூட்டங்கள்:**

அரபிக்கடலில் உள்ள **மாலத்தீவுகள்** மற்றும் **லட்சத்தீவுகள்,** பாரசீக வளைகுடாவில் உள்ள **பஹ்ரைன்** போன்றவை இந்தியப் பெருங்கடலில் காணப்படும் சிறிய தீவுக்கூட்டங்களாகும். **இலங்கைத்** தீவு வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது.

**25. தீவுக்கூட்டம் என்றால் என்ன?**

ஒன்றிணைக்கப்பட்ட பல தீவுகள், **தீவுக்கூட்டம்** என அழைக்கப்படுகின்றது.**இந்தோனேசியா மிகப்பெரியத் தீவுக்கூட்டம் ஆகும்.**

**26. வடிகால் அமைப்பு என்றால் என்ன?**

ஆசியாவின் பெரும்பான்மையான ஆறுகள் மத்திய உயர்நிலங்களில் தோன்றுகின்றன. **ஓப், எனிசி, லேனா** ஆகிய முக்கிய ஆறுகள் வடக்கு நோக்கிப் பாய்ந்து ஆர்டிக் பெருங்கடலில் கலக்கின்றன. இவை குளிர்காலத்தில் உறைந்து விடுகின்றன.

**27. தெற்காசியாவில் பாயும் ஆறுகள் யாவை?**

தெற்காசியாவில் பாயும் ஆறுகளான **பிரம்மபுத்திரா, சிந்து, கங்கை, ஐராவதி** ஆகிய வற்றாத ஆறுகள் பனிபடர்ந்த உயர்ந்த மலைகளில் தோன்றுகின்றன. இவை குளிர்காலத்தில் உறைவதில்லை.

**28. ஆசியாவில் பாயும் மேலும் சில ஆறுகள் யாவை?**

யுப்ரடிஸ் மற்றும் டைகிரிஸ் ஆறுகள் மேற்கு ஆசியாவில் பாய்கின்றன. **அமூர், ஹோவாங்கோ, யாங்சி மற்றும் மீகாங்** ஆகிய ஆறுகள் ஆசியாவின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் பாய்கின்றன.

**29. ஆசியாவின் மிக நீளமான ஆறு எது?**

ஆசியாவின் மிக நீளமான ஆறு **யாங்சி** ஆகும்.

30. **முப்பள்ளத்தாக்கு** நீர்த் தேக்கமானது **யாங்சி ஆற்றின்** குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இஃது **உலகின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும்**. இது **சீனாவின் மின்சார தேவையில் 10 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது.**

**31. ஆசியாவின் காலநிலை எவ்வாறு நிலவுகின்றன?**

ஆசியாவில் பல வகையான காலநிலைகள் நிலவுகின்றன. வடக்கு ஆசியப் பகுதியில் குளிர்காலம் நீண்டதாகவும், கோடைக்காலம் சற்று குளிர்ந்தும் காணப்படும். (**குளிர்காலம் -37° செ மற்றும் கோடைக்காலம் 10° செ).** இங்குப் பனிப்பொழிவு உண்டு **(250 மி.மீ – 300 மி.மீ).** வடகிழக்குப் பகுதியில் மிகக் குளிர்ந்த குளிர்காலமும், மிதவெப்ப கோடைகாலமும், **50 மி.மீ** முதல் **250 மி.மீ** மிதமான மழைப்பொழிவும் காணப்படுகிறது.

**32. ஆசியாவின் முக்கிய ஆறுகள்**

| **வ.எண்** | **ஆறு** | **பிறப்பிடம்** | **சேருமிடம்** | **நீளம் (கி.மீ)** |
|---|---|---|---|---|
| 1 | யாங்கி | திபெத் பீடபூமி | கிழக்குச் சீனக்கடல் | 6,350 |
| 2 | ஹோவாங்கோ | திபெத் பீடபூமி | போகாய் வளைகுடா | 5,464 |
| 3 | மீகாங் | திபெத் பீடபூமி | தென்சீனக் கடல் | 4,350 |
| 4 | எனிசி | தானுவாலா மலை | ஆர்டிக் பெருங்கடல் | 4,090 |
| 5 | ஓப் | அல்டாய் மலை | ஓப் வளைகுடா | 3,650 |
| 6 | பிரம்மபுத்திரா | இமயமலை | வங்காள விரிகுடா | 2,900 |
| 7 | சிந்து | இமயமலை | அரபிக்கடல் | 3,610 |
| 8 | அமூர் | சிகா, ஆர்கன் ஆறுகளின் சங்கமம் | டாடார் நீர்ச்சந்தி | 2,824 |
| 9 | கங்கை | இமயமலை | வங்காள விரிகுடா | 2,525 |
| 10 | ஐராவதி | வடக்கு மியான்மர் | வங்காள விரிகுடா | 2,170 |

**33.** தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகள் பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளாகும்.

**34. ஆசியாவின் கோடைக்காலப் பருவமழை:**

கோடைக்காலப் பருவமழைக் காற்றுகள் இந்தியா, வங்காளதேசம், இந்தோ-சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சீனா ஆகிய இடக்களுக்கு அதிக மழைப்பொழிவைத் தருகின்றன **(1500 மி.மீ – 2500 மி.மீ).**

**35. உலகின் மிக ஈரப்பதம் வாய்ந்த பகுதி எது?**

- இந்தியாவில் உள்ள **மௌசின்ராம் 11871 மி.மீ** அதிக மழைப்பொழிவைப் பெறுவதால் , இஃது உலகின் மிக ஈரப்பதம் வாய்ந்த பகுதியாகும்.
- நிலநடுக்கோட்டிலும், அதனைச் சுற்றிலும் காணப்படுகின்ற பகுதியிலும் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான காலநிலை உள்ளது. இங்குக் குளிர்காலம் இல்லை.
- இங்குக் காணப்படும் **சராசரி வெப்பம் ($27^{\circ}$ செ), சராசரி மழைப்பொழிவு (1270 மி.மீ).**

**36. ஆசியாவின் வெப்பமான காலநிலை:**

மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் வறண்ட, வெப்பமான காலநிலை காணப்படுகின்றன. இப்பகுதிகளில் வெப்பநிலை பகலில் அதிகமாகவும், இரவில் குறைந்தும் காணப்படும். மழையளவு **25 மி.மீ** முதல் **200 மி.மீ** வரை வேறுபடுகின்றது.

**37. மேற்கு ஆசியாவில் காலநிலை எவ்வாறு இருக்கும்?**

ஆசியாவின் மேற்குக் கடற்கரையோரம் (மத்தியத் தரைகடல் ஓரம்) **குளிர்காலத்தில் மழை**யைப் பெறுகின்றது. இங்குக் கோடைக்காலம் மிதவெப்பத்துடன் காணப்படும்.

**38. ஆசியாவில் காணப்படும் பாலைவனங்கள்:**

ஆசியாவில் பாலைவனங்கள் மேற்குக் கடற்கரையோரமாகக் காணப்படுகின்றன, இங்குள்ள **அரேபிய (சௌதி அரேபியா)** மற்றும் **தார் (இந்தியா பாகிஸ்தான்)** பாலைவனங்கள் மிக வெப்பமான பாலைவனங்கள் ஆகும். **கோபி மற்றும் தக்லாமக்கன்** பாலைவனங்கள் மிகவும் குளிர்ந்த பாலைவனங்கள் ஆகும்.

**39. ஆசியாவின் மிகப்பெரிய பாலைவனம் எது?**

அரேபியப் பாலைவனம்

**40. பாலைவனம்:**

பாலைவனப் பிரதேசம் என்பது மிகக் குறைந்த மழைப்பொழிவைப் பெறும் பகுதியாகும். இங்குக் குறைந்த அளவிலேயே தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப்படுகின்றன. ஆசியாவில் இரண்டு வகையான பாலைவனங்கள் உள்ளன. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர்ப் பாலைவனம்.

41. **ரூப-அல்-காலி பாலைவனம்** உலகின் மிகத் தொடர்ச்சியான மணற்பாங்கான பாலைவனமாகும். இது சௌதி அரேபியாவின் தென்கிழக்குப் பகுதியில் காணப்படுகின்றது.

**42. இயற்கைத் தாவரங்கள்:**

மழைப்பொழிவு, தட்பவெப்பம் மற்றும் மண் ஆகியவற்றைச் சார்ந்து இயற்கைத் தாவரங்கள் உள்ளன. ஆசியா கண்டமானது நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்து, துருவப் பகுதிவரை பரவிக் காணப்படுவதால் இங்கு அனைத்துவகை இயற்கைத் தாவரங்களும் காணப்படுகின்றன. **உராங்குடான், கோமோடோ டிராகன், பெரிய பாண்டாக்கரடி** போன்ற சில அரியவகை விலங்கினங்களும் இங்குக் காணப்படுகின்றன.

**43. ஆசியாவின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்:**

| **வ.எண்** | **காலநிலை** | **இருப்பிடம்** | **தாவரம்** | **விலங்கினம்** |
|---|---|---|---|---|
| 1 | அதிக வெப்ப நிலை, அதிக மழைப்பொழிவு | இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை | பசுமை மாறாத்தாவரங்கள்- மஹோகனி, ரப்பர், செம்மரம், சால் | காண்டாமிருகம், உராங்குடான், கோமோடோ, டிராகன், புலி, பாபிரூஸா. |
| 2 | கோடைகால மழை, வறண்ட குளிர்காலம் | இந்தியா, வியட்நாம், தெற்கு சீனா, கம்போடியா, தாய்லாந்து | இலையுதிர் காடுகள் – தேக்கு, சந்தனம், மூங்கில் | புலி, யானை, இந்திய நாகப்பாம்பு, விரியன் பாம்பு |
| 3 | தீவிரமான காலநிலை | அரேபிய பாலைவனம், வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியா | சப்பாத்திக்கள்ளி, பேரிச்சமரங்கள், (பாலைவனச்சோலை) முட்புதர்கள், கருவேல மரம் | பாக்டிரியன், ஒட்டகம், மண் கௌதாரி, பாலைவன மான். |
| 4 | வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம் | கிழக்கு சீனா, ஜப்பான், வட மற்றும் தென் கொரியா | செர்ரி, ஆப்ரிகாட், பிளம் | பெரிய பாண்டாக்கரடி, ஜப்பானிய மாகாக்யூ |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மிதவெப்ப கோடைக்காலமும் குளிர்கால மழைப்பொழிவும் | இஸ்ரேல், லெபனான், துருக்கி, சிரியா | அத்தி, ஆலிவ், சிட்ரஸ் பழங்கள் | லிங்க்ஸ், ஜேக் முயல் |
| 6 | நீண்ட வறண்ட குளிர்காலம், குறுகிய, குளிர்ச்சியான கோடைகாலம் | சைபீரியா, இமயமலை | ஊசியிலைக்காடுகள் – பைன், ஃபீர் , ஸ்பூஸ் | சைப்பீரியப் புலி, பழுப்புக் கரடி, ஓநாய் |
| 7 | நிரந்தர பனிப் படர்வு | பனி வரைக் கோட்டிற்கு அப்பால் | லிச்சன், பாசிகள், புல் | பனிக்கரடி, லெம்மிங், ஆர்டிக் நரி, கலைமான். |

**44. ஆசியாவின் கனிம வளங்கள்:**

ஆசிய பல்வகையான கனிம வளங்களைக் கொண்டுள்ளது. **இரும்பு, நிலக்கரி, மாங்கனீசு பாக்ஸைட், துத்தநாகம், டங்ஸ்டன், பெட்ரோலியம், தகரம்** ஆகியவற்றின் உற்பத்தியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

**45. ஆசியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு:**

**எண்ணெய்** மற்றும் **இயற்கை வாயு** மேற்காசிய நாடுகளில் காணப்படுகின்றன. உலகின் **மூன்றில் ஒரு பங்கு** எண்ணெ ஆசியாவிலிருந்து கிடைக்கப்பெறுகின்றது. மேற்காசிய நாடுகளிலேயே, ஈரானில் குறிப்பிடத்தக்க அளவில் கனிம வளங்கள் காணப்படுகின்றன.

**46. ஆசியாவில் இரும்புத்தாது வளத்தைக் கொண்டுள்ள நாடுகள் எவை?**

உலகிலேயே மிக அதிகமான இரும்புத்தாது வளத்தை ஆசியா கொண்டுள்ளது. **சீனா மற்றும் இந்தியா** அதிக இரும்புத்தாது இருப்புள்ள நாடுகளாகும். **துருக்கி, பில்லிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, மியான்மர்** மற்றும் பல நாடுகளும் இரும்புத்தாது வளத்தைக் கொண்டுள்ளன.

**47. நிலக்கரி உற்பத்தி செய்யும் இடங்கள்:**

நிலக்கரி ஒரு **படிம எரிபொருள்** ஆகும். உலகிலேயே ஆசியாவில்தான் அதிக நிலக்கரி இருப்பு உள்ளது. ஆசியாவில் **சீனா மற்றும் இந்தியா** அதிகமாக நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடுகளாகத் திகழ்கின்றன.

**48. ஆசியாவின் பெட்ரோலிய வளம்:**

பெட்ரோலியம் ஒரு கனிம எண்ணெய் வளமாகும். தென்மேற்கு ஆசியாவில்தான் அதிக அளவில் பெட்ரோலிய இருப்புகள் காணப்படுகின்றன. **சௌதி அரேபியா, குவைத், ஈரான், பஹ்ரைன் , கத்தார்** மற்றும் **ஐக்கிய அரேபிய குடியரசு** போன்றவை பெட்ரோலிய உற்பத்தி செய்யும் மேற்காசிய நாடுகளாகும். **தெற்குசீனா, மலேசியா, புரூனே , இந்தோனேசியா , இந்தியா, ரஷ்யா** ஆகிய நாடுகள் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் மற்ற நாடுகளாகும்.

**49. ஆசியாவில் காணப்படும் வேறு சில வளங்கள்:**

**பாக்ஸைட், இந்தியா** மற்றும் **இந்தோனேசியா** நாடுகளில் காணப்படுகின்றது. **இந்தியா** உலகிலேயே அதிக அளவில் **மைக்காவினை** உற்பத்தி செய்கின்றது. **மியான்மர், தாய்லாந்து, மலேசியா** மற்றும் **இந்தோனேசியா** ஆகிய நாடுகளில் **தகரம்** காணப்படுகின்றது.

**50. ஆசியாவில் வேளாண்மை:**

ஆசியாவின் மொத்த பரப்பளவில் சுமார் 18 சதவிகிதம் மட்டுமே வேளாண்மைக்கு ஏற்ற நிலமாகக் காணப்படுகிறது. **ஆசியநாட்டு மக்களின் முதன்மையான தொழில் வேளாண்மை ஆகும்.**

**51. ஆசியாவின் வேளாண்மைக்கு உகந்த நிலங்களின் பகுதி எது?**

**தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்காசியா**வில் காணப்படும் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் செழுமையான வண்டல்மண் நிலங்களாகும். ஆற்றுச்சமவெளிகளில் தீவிர வேளாண்மை நடைபெறுகின்றது.

**52.** ஆசியாவின் சில பகுதிகள் வேளாண்மை செய்ய உகந்தவை அன்று. ஆசியாவிலேயே மிக அதிகமான **பயிர்செய்ய ஏற்ற நிலப்பரப்பைக் கொண்டுள்ள நாடு இந்தியா** ஆகும். பல மேற்சாசிய நாடுகளில் நிலத்தடி நீர், நிலப்பரப்பிற்கு அருகில் கிடைக்கும் இடங்களில் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஈராக் நாட்டில் வேளாண் நடவடிக்கைகள் மழைப்பொழிவு மற்றும் யூப்ரடிஸ், டைக்ரிஸ் ஆறுகளிலிருந்து பெறப்படும் நீரினைப் பொறுத்தே அமைகின்றன.

**53. ஆசியாவின் முக்கிய உணவுப் பயிர்கள்**

ஆசியாவின் முக்கிய உணவுப்பயிர்கள் **நெல் மற்றும் கோதுமை** ஆகும். உலகிலேயே மிக அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் நாடுகள் **சீனா மற்றும் இந்தியா** ஆகும். **மியான்மர், ஜப்பான், வங்காளதேசம் மற்றும் தாய்லாந்து** ஆகிய நாடுகள் நெல் விளைவிக்கும் பிற முக்கிய நாடுகளாகும்.

**54. நெல் விளைய ஏற்ற பகுதி எது?**

அதிக மழைப்பொழிவு, செழுமை வாய்ந்த சமவெளிகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றைப் பெற்றிருப்பதால் பருவமழை பெய்யும் ஆசியப்பகுதிகள் நெல் விளைய ஏற்ற பகுதிகளாகத் திகழ்கின்றன. **தாய்லாந்து தென்கிழக்கு ஆசியாவின் 'அரிசிக் கிண்ணம்' என அழைக்கப்படுகின்றது.**

**54. பனாவ் படிக்கட்டு முறை நெல் விவசாயம்**

இப்கௌஸ் என்ற பிலிப்பைன்ஸ் மக்களால் 2000 ஆண்டுகளுக்கு முன் இது உருவாக்கப்பட்டதாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1524 மீ உயரத்தில் அமைந்துள்ளது.

**55. கோதுமையை அதிக அளவு உற்பத்தி செய்யும் நாடுகள் எவை?**

**கோதுமை** ஆசியாவின் **மிதவெப்ப மண்டலப் பகுதி**களில் விளைகின்றது. **ரஷ்யா, இந்தியா, சீனா, பாகிஸ்தான்** ஆகிய நாடுகள் அதிகளவு கோதுமையை உற்பத்தி செய்கின்றன.

56. ஆசியாவின் வறண்ட பகுதிகளின் தினைப்பயிர்களாக **கம்பு, கேழ்வரகு, சோளம் , மக்காச்சோளம்** ஆகியன விளைகின்றன. இவை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சில வளைகுடா நாடுகளில் பயிரிடப்படுகின்றன.

57. ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் **பருப்பு வகைகள், நறுமணப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள்** ஆகியன விளைவிக்கப்படுகின்றன.

58. **சணல் மற்றும் பருத்தி** ஆகிய முக்கிய **இழைப்பயிர்கள்** ஆசியாவில் விளைகின்றன. உலகின் மூன்றில் ஒரு பங்கு பருத்தி ஆசியாவில் விளைகின்றது. ஆசியாவில் அதிக பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகள் **சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் கஜகிஸ்தான். இந்தியா, பாகிஸ்தான், சீனா மற்றும் வங்காளதேசம்** ஆகிய நாடுகள் அதிக அளவில் சணல் உற்பத்தி செய்கின்றன.

**59. ஆசியாவில் கரும்பு உற்பத்தி செய்யும் நாடுகள் எவை?**

வெப்பமண்டலங்களில் காணப்படும் வறண்ட மற்றும் ஈரப்பதம் வாய்ந்த காலநிலை ஆசியாவில் **கரும்பு** உற்பத்திக்கு ஏற்றதாகவுள்ளது. **இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ்** ஆகிய நாடுகள் அதிகமான அளவில் கரும்பு உற்பத்தி செய்கின்றன.

**60. ஆசியாவில் வளர்க்கப்படும் தோட்டப்பயிர்கள் எவை?**

**காபி, தேயிலை, ரப்பர், பனை** மற்றும் **கொக்கோ** ஆகியன இந்தியா, **இலங்கை, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா மற்றும் இந்தோனேசியா** ஆகிய நாடுகளில் வளர்க்கப்படும் முக்கிய தோட்டப்பயிர்களாகும்,

61. **மலேசியா மற்றும் தாய்லாந்து** ஆகிய நாடுகள் **இயற்கை ரப்பர்** உற்பத்தியில் முதன்மையாக விளங்குகின்றன. மேற்காசிய நாடுகள் **பேரீச்சம் பழங்களை** அதிகம் விளைவிக்கின்றன. அவற்றுள் உலகிலேயே **ஈரான்** இப்பழங்களை அதிக அளவு உற்பத்தி செய்கின்றது.

**62. ஆசியாவில் மீன்பிடித்தொழில்:**

மீன்பிடித்தொழில் ஆசியாவின் மிக முக்கியமான பொருளாதார நடவடிக்கை ஆகும். கடல் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளிலும் இத்தொழில் நடைபெறுகின்றது. **சீனா மற்றும் ஜப்பான்** மீன்பிடித்தொழிலில் முன்னணி நாடுகளாகத் திகழ்கின்றன.

**63. மீன்பிடித்தளங்கள்:**

**கம்போடியாவில்** உள்ள **'டோன்லே சாப்'** ஏரி உலகின் மிகச் சிறந்த நன்னீர் மீன்பிடி ஏரியாகும். **இந்தியா, இலங்கை, மியான்மர் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் வங்காள விரிகுடாவில் சிறந்த மீன்பிடித் தளங்களைப்** பெற்றுள்ளன.

மீன்பிடித்தல் மாலத்தீவுகளின் பொருளாதாரத்திற்கு முக்கியப் பங்காற்றுகிறது. முத்துக்குளித்தல் கிழக்கு அரேபியக் கடற்கரையில் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

**64. ஆசியாவின் முக்கிய தொழிற்பிரதேசங்கள்:**

- **மஞ்சூரியன், ஷங்காய்-வியூஹன், பீகிங்-ஷென்யாங், குவான்டோந்ஹாங்காங்** ஆகிய பகுதிகள் சீனாவின் முக்கியத் தொழிற்பிரதேசங்களாகும்.
- **டோக்கியோ, யோக்ஹோஹாமா மற்றும் ஒசாகா-கியோட்டோ** பகுதிகள் ஜப்பானின் முக்கிய தொழிற்பகுதிகளாகும்.
- **இந்தியாவில் , மும்பை, அகமதாபாத், கோயம்புத்தூர், பெங்களூரு, சோட்டா நாக்பூர்** ஆகியன முக்கிய தொழிற்பிரதேசங்களாகும்.

**65. ஆசியாவின் போக்குவரத்து:**

எந்த ஒரு நாட்டிற்கும் பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாக விளங்குவது **போக்குவரத்தே** ஆகும். ஆசியாவின் பல நாடுகளும் தங்களது போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தி வருகின்றன. ஆசியாவில் கானப்படும் மிகப் பொதுவான போக்குவரத்து **சாலைப் போக்குவரத்து** ஆகும்.

**66. சாலைப் போக்குவரத்து:**

- ஆசிய நெடுஞ்சாலை கிழக்கில் டோக்கியோவையும், மேற்கில் துருக்கியையும், வடக்கில் ரஷ்யாவையும், தெற்கில் இந்தோனேசியாவையும் (1,41,000 கி.மீ) இணைக்கின்றது.
- இந்நெடுஞ்சாலை 32 நாடுகளின் வழியே கடந்து செல்கின்றது.
- ஆசிய நெடுஞ்சாலை வலையமைப்பிலேயே மிக நீளமான நெடுஞ்சாலை (20,557 கி.மீ) **ஆசிய நெடுஞ்சாலை 1 (AH1)** ஆகும். இது டோக்கியோவைத் துருக்கியுடன் இணைக்கிறது.
- **ஆசிய நெடுஞ்சாலை 43(AH43)** இந்தியாவிலுள்ள அக்ராவிலிருந்து இலங்கையிலுள்ள மதாரா வரை செல்கின்றது. (3024 கி.மீ)

**67. இருப்புப்பாதை போக்குவரத்து:**

- உலகிலேயே நீண்ட இருப்புப்பாதை வழித்தடம் **டிரான்ஸ்-சைபீரியன் இருப்புப்பாதை** (9258 கி.மீ) ஆகும். அது கண்டம் கடக்கும் இருப்புப்பாதை போக்குவரத்து ஆகும்.
- அது **லெனின் கிரேட்** மற்றும் **விளாடிவோஸ்டாக்** ஆகியவற்றை இணைக்கிறது.
- **டிரான்ஸ் ஆசியா இருப்புப்பாதை சிங்கப்பூரை, துருக்கியிலுள்ள இஸ்தான்புல்லுடன்** இணைக்கின்றது.
- **சின்கான்வென்** எனப்படும் உலகப்புகழ் வாய்ந்த அதிவிரைவு புல்லட் இரயில் (352 கி.மீ/ மணி) ஜப்பானிலுள்ள ஒசாகா மற்றும் டோக்கியோ இடையில் பயைக்கிறது.

68. ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய இருப்புப்பாதை போக்குவரத்து வரையமைப்பு **இந்தியாவில்** காணப்படுகிறது.

**69. நீர்வழிப் பொக்குவரத்து:**

- **நன்னம்பிக்கை முனை வழி**, ஐரோப்பாவைத் தெற்கு ஆசியாவுடன் இணைக்கின்றது.
- **டிடான்ஸ் பசிபிக் வழி** கிழக்காசியத் துறைமுகங்களை மேற்கு அமெரிக நாடுகளின் துறைமுகங்களுடன் இணைக்கின்றது.
- **சூயஸ் கால்வாய் வழி** உலக வர்த்தக வழியின் நடுவே பயணித்து ஐரோப்பாவைத் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கிறது.
- **டோக்கியோ, ஷங்காய், சிங்கப்பூர், ஹாங்காங், சென்னை, மும்பை, கராச்சி மற்றும் துபாய்** ஆகியன ஆசியாவின் முக்கியத் துறைமுகங்களாகும்.

**70. ஆசியாவின் மக்கள்தொகை:**

உலகிலேயே மிக அதிக மக்கள்தொகை கொண்ட கண்டம் ஆசியாவாகும். சுமார் பத்தில் ஆறு பங்கு மக்கள்தொகை ஆசி யாவில் காணப்படுகின்றது. பல்வேறுபட்ட இயற்கை கூறுகளினால் ஆசியாவின்

மக்கட்பரவல் சீரற்றுக் காணப்படுகின்றது. ஆசியாவின் மொத்த மக்கள்தொகையில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் **சீனா மற்றும் இந்தியாவில்** வசிக்கின்றனர்.

**71. ஆசியாவில் மக்கள்தொகை அடர்த்தி எவ்வாறு உள்ளது?**

சீனா மற்றும் இந்தியா மட்டுமின்றி **வங்காளதேசம், இந்தோனேசியா, ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ்** ஆகிய நாடுகளின் மக்கள்தொகை 100 மில்லியனுக்கு அதிகமாக உள்ளது. ஆசியாவின் மக்கள் அடர்த்தியின் **ஒரு சதுர கிலோமீட்டருக்கு 143 நபர்கள்** ஆகும். இந்தியா, ஜப்பான், வங்காளதேசம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மிக அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. குறிப்பாக, ஆற்றுச் சமவெளிகள் மற்றும் தொழிற்பகுதிகள் அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. ஆசியாவின் உட்பகுதிகளில் மக்கள் அடர்த்தி மிகக் குறைந்து காணப்படுகின்றது.

**72. ஆசியாவில் சமயம் மற்றும் மொழி எவ்வாறு உள்ளது?**

- **இந்து, இஸ்லாம் , புத்தம், கிறித்துவம் மற்றும் சீக்கிய** சமயங்கள் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றும் சமயங்கள் ஆகும்.
- மற்ற சமயங்களான **ஜொராஸ்டிரியனிஸம், சமணம், ஷின்டோயிஸம், கன்பூஷியானிசம்** மற்றும் **டாவோயிஸம்** ஆகியனவும் ஆசியாவில் பின்பற்றப்படுகின்றன.
- **மாண்டரின், ஆங்கிலம், இந்தோனேசியன், ஜப்பானிய மொழி, அரபு, கொரியா, வியட்நாமீய, இந்தி** போன்ற மொழிகள் ஆசியாவில் பரவலாகப் பேசப்படுகின்றன.

**73. அங்கோர்வாட்:** இஃது உலகப் பாரம்பரிய தளமாகும். இரண்டாம் சூரியவர்மன் என்ற மன்னரால் கி.பி.(பொ.ஆ) 1100ம் ஆண்டில் கம்போடியாவில் கட்டப்பட்டது. கெமர் மொழியில் 'அங்கோர்வாட்' என்றால் 'கோயில்களின் நகரம்' எனப்பொருள். இதுவே உலகின் மிகப்பெரிய கோயிலாகும்.

**74. ஆசியாவில் கட்டடக்கலையில் பெரும் பங்காற்றியவை எவை?**

ஆசியா மூன்று நாகரிகங்களின் தாயகமாகும். (மெசபடோமியன், சிந்து சமவெளி மற்றும் சீன நாகரிகங்கள்) இம்மூன்றி நாகரிகங்களும் தொடக்கக் காலங்களிலேயே கட்டடக்கலைக்குப் பெரும் பங்காற்றின.

**75. ஆசியக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகள்:**

- உலக அதிசயங்களில் இரண்டு அதிசயங்கள் (இந்தியாவிலுள்ள **தாஜ்மகால் மற்றும் சீனப்பெருங்சுவர்)** ஆசியாவில் உள்ளன.

- ஏமன் நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வானுயர்ந்த **மண் கோபுரத்தைக்** கட்டினர்.
- கம்போடியாவிலுள்ள **அங்கோர்வாட்**, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள **புத்த மடாலயங்கள்**, மேற்கு ஆசியாவிலுள்ள **மசூதிகள் மற்றும் இந்தியாவிலுள்ள கோவில்களும், கோட்டைகளும்** ஆசியக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**76. ஆசிய உணவுகள்:**

- **அரிசி , கோதுமை , சோளம் மற்றும் பார்லி** ஆகியன ஆசியாவின் முதன்மையான உணவுகளாகும்.
- இவைமட்டுமின்றி, **பால் பொருட்கள், பழங்கள் மற்றும் கொட்டைகள்** ஆகியனவற்றையும் உண்கின்றனர்.
- கிழக்கு ஆசியாவில் அரிசி கிடைக்கப்பெறாத இடங்களில் **ரொட்டி மற்றும் நூடுல்ஸ்** போன்ற உணவுகளை உண்கின்றனர்.
- **தேயிலை, காப்பி மற்றும் பச்சைத் தேயிலை** ஆகியன முக்கிய பானங்களாகும்.
- மேற்கு ஆசியாவில் மாமிசம், மூலிகைகள், ஆலிவ் எண்ணெய் ஆகியன உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் முதன்மைப் பொருட்களாகும்.

**77. ஆசியவின் நடனம் மற்றும் இசை:**

ஆசியாவில் **யாங்கி, டிராகன் நடனம், கபாகி** போன்ர நடனங்கள் கிழக்காசியவில் புகழ்பெற்ற நடனங்கள் ஆகும். தாய்லாந்தின் **ராம், தாய்,** இந்தியாவில் **பாங்க்ரா, கதக்** மற்றும் **பரதநாட்டியம்** ஆகியவையும் ஆசியாவின் முக்கிய நடனங்கள் ஆகும். மேற்கு ஆசியாவில் **சூஃபி இசை மற்றும் அரேபியப் பாரம்பரிய இடை** போன்றவை பொதுவாகக் காணப்படுகின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம் **'டினிக்லிங்'** ஆகும்.

**78. ஆசியாவின் அறுவடைத் திருவிழாக்கள் யாவை?**

சீனா , வியட்நாம் மற்றும் தைவானின் **நடு இலையுதிர்கால பண்டிகை** அல்லது **நிலவு பண்டிகை,** இந்தியாவின் பெரும்பான்மையான இடங்களில் **ஹோலி மற்றும் மகர சங்கராந்தி/ பொங்கல்** , இஸ்ரேலின் **சுகோத்** போன்றவை ஆசியாவின் அறுவடைத் திருவிழக்கள் ஆகும்.


**79. ஆசியாவின் புகழ்பெற்ற திருவிழாக்கள் எவை?**

**பனிச்சிற்ப விழ, சீனப்புத்தாண்டு, தைப்பூசம், தீபாவளி, தைவான் விளக்குத் திருவிழா, சங்கிரான் மற்றும் குளிர்கால விளக்குத் திருவிழா** போன்றன ஆசியாவின் புகழ்பெற்ற திருவிழாக்களாகும்.

**80. ஆசிய கண்டம் 'வேற்றுமையின் இருப்பிடம்' என அழைக்கப்படுது , ஏன்?**

உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியாவாகும். அது மலைகள், பீடபூமிகள், சம்வெளிகள், பள்ளத்தாக்குகள், விரிகுடாக்கள், தீவுகள் போன்ற பல்வேறுபட்ட நிலத்தோற்றங்களைக் கொண்டது. நிலநடுக்கோட்டிலிருந்து துருவப் பகுதி வரை பல்வேறு காலநிலைகளை உள்ளடக்கியது. இவைமட்டுமின்றி, பல இனங்கள், மொழிகள், சமயங்கள் மற்றும் கலாச்சாரங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் இடமாகத் திகழ்கின்றது. எனவே, ஆசியா கண்டம், **'வேற்றுமையின் இருப்பிடம்'** என அழைக்கப்படுகின்றது.

**81. ஆசியாவின் அமைவிடம்**



# 6th Social Science Lesson 20 Notes in Tamil

## 20. புவி மாதிரி

**1. அடிப்படைத் திசைகள்**

**வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு** ஆகியவை அடிப்படைத் திசைகளாகும்.

**2. புவி மாதிரி (Globe) என்றால் என்ன?**

புவியை முழுமையாகப் பார்த்துணரவும், அதிலுள்ள சிறப்பம்சங்களை அறியவும் **புவியைப் போன்று கற்பனையாக முப்பரிமாணத்தில்,** குறிப்பிட்ட அளவையில் உருவாக்கப்பட்டதே **புவி மாதிரி** (Globe) ஆகும்.

**3.** புவி 510.1 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டதாகும்.

**4. புவியானது புவிவடிவம் என்று அழைக்கப்படுவது, ஏன்?**

புவியானது **துருவப் பகுதிகளில் தட்டையாகவும், நிலநடுக்கோட்டுப் பகுதியில் சற்றுப் பருத்தும், கோள (Spherical) வடிவமாக காணப்படுகிறது**. ஆனாலும் **புவியின் வடிவத்தை எந்த வடிவியல் உருவத்துடனும் ஒப்பிட முடியாது**. எனவே, இதன் வடிவம் **புவிவடிவம் (Geoid)** என்று அழைக்கப்படுகிறது.

**5. புவியின் சாய்வு:**

புவி தனது அச்சில் **23 ½ °** சாய்ந்த நிலையில், மேற்கிலிருந்து கிழக்காகத் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது. இந்தச் சாய்ந்த நிலையை அச்சாகக் கொண்டு புவிமாதிரி (Globe) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அச்சு ஒரு கற்பனையே, இதுபோல் **உண்மையான அச்சு நமது புவியில் இல்லை.**

**6.** உலகில் முதன்முதலாக புவி மாதிரியை (Globe) கி.பி. (பொ.ஆ) 150- ஆம் ஆண்டில் **கிரேக்கர்கள்** உருவாக்கியுள்ளனர்.

7. இந்திய வானியல் அறிஞர் **முதலாம் ஆரியபட்டர்** அவர்கள் எழுதிய **"ஆர்யபட்ட சித்தாந்தம்"** என்ற நூலில் **"விண்மீன்கள் வானில் மேற்குப்புறமாக நகர்வது போன்ற தோற்றம் , புவி தன்னுடைய அச்சில் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் விளைகிறது"** என்று குறிப்பிட்டுள்ளார்.

**8. அட்சக்கோடுகள் மற்றும் தீர்க்கக்கோடுகள் என்றால் என்ன?**

புவியில் ஓர் இடம் எங்கு அமைந்துள்ளது என்பதை மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளவும், தூரம், நேரம் ஆகியவைகளைக் கணக்கிடவும், புவியின் மீது **கிடைமட்டமாகவும் , செங்குத்தாகவும்** கற்பனையாகக்

கோடுகள் வரையப்பட்டுள்ளன. இவை **அட்சக்கோட்டுகள் மற்றும் தீர்க்கக் கோடுகள்** என்று அழைக்கப்படுகின்றன.

9. கிரேக்க ரோமானிய கணித வல்லுநர், வான் ஆய்வாளர் மற்றும் புவியியல் ஆய்வாளராகிய **தாலமி (Ptolemy)** என்பவர் முதன் முதலில் நில வரைபடத்தில் அட்ச தீர்க்கக் கோடுகளை வரைந்தவராவார்.

இவருடைய **'Geographia'** என்ற நூலில் புவியின் அளவும், அதன் மேற்பரப்பைக் குறித்த விவரங்களும், அட்சக்கோடுகள் மற்றும் தீர்க்கக்கோடுகளின் அடிப்படையில் அமைந்த பல்வேறு இடங்களின் பட்டியலும் இடம் பெற்றுள்ளது.

**10. நிலநடுக்கோடு என்றால் என்ன?**

புவியின்மீது **கிழக்கிலிருந்து மேற்காக கிடைமட்டமாக** வரையப்பட்டுள்ள கற்பனைக் கோடுகள் , அட்சக்கோடுகள் எனப்படும். புவியின் மையத்தில் காணப்படும் 0° அட்சக்கோடு **நிலநடுக்கோடு** எனப்படும்.

11. `ஒவ்வொரு அட்சக்கோட்டிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு தூரம் 111கி.மீ. ஆகும்.

**12. வடதுருவம் மற்றும் தென்துருவம் என்றால் என்ன?**

புவி கோள (Geiod) வடிவத்துடன் காணப்படுவதால், **90° வடக்கு** மற்றும் தெற்கு நோக்கி செல்லச் செல்ல அட்சக்கோடுகளின் நீளம் குறைந்துக் கொண்டே செல்கின்றது. இவை 90° வடக்கு 90° தெற்குப் பகுதியில் கோடாக இல்லாமல், புள்ளியாகக் காணப்படுகின்றன. இவை **வடதுருவம்** மற்றும் **தென்துருவம்** என அழைக்கப்படுகின்றன.

**13. வட அட்சக்கோடுகள் மற்றும் தென் அட்சக்கோடுகள் என்றால் என்ன?**

நிலநடுக்கோட்டிலிருந்து வடதுருவம் வரை வட அரைக் கோளத்தில் கிடைமட்டமாக வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் **'வட அட்சக்கோடுகள்' (Northern Latitudes)** எனவும், தென் அரைக் கோளத்தில் வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் **'தென் அட்சக்கோடுகள்' (Southern Latitudes)** எனவும் அழைக்கப்படுகின்றன.

**14. அட்சக்கோடுகளின் எண்ணிக்கை என்ன?**

**வட அரைக்கோளத்தில் 89 அட்சக்கோடுகளும் தென் அரைக்கோளத்தில் 89 அட்சக்கோடுகளும்**, இடையில் **ஒரு நிலநடுக்கோடும், இரு துருவங்களிலும்**, கோடுகள் புள்ளியாகவும் என,மொத்தம் **181 அட்சக்கோடுகள்** புவியில் வரையப்பட்டுள்ளன.

**15. பெருவட்டம் (Great Circle) என்றால் என்ன?**


புவியின் நடுவில் வரையப்பட்டுள்ள நில நடுக்கோடு (Equator) மற்ற அட்சக் கோடுகளை விட நீளமாகக் காணப்படுகிறது. எனவே, இக்கோடு **'பெருவட்டம்' (Great Circle)** என்று அழைக்கப்படுகிறது.

**16. வட அரைக்கோளம் (Northern Hemisphere) என்றால் என்ன?**

0° நிலநடுக்கோட்டிலிருந்து 90° வடதுருவம் வரையுள்ள புவிப்பரப்பு பகுதி **வட அரைக்கோளம் (Northern Hemisphere)** எனப்படும்.

**17. தென் அரைக்கோளம் (Southern Hemisphere) என்றால் என்ன?**

0° நிலநடுக்கோட்டிலிருந்து 90° தென்துருவம் வரையுள்ள புவிப்பரப்பு பகுதி **தென் அரைக்கோளம் (Southern Hemisphere)** எனப்படும்.




18. 0° அட்சக் கோட்டிலிருந்து 23 ½ ° வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் **'தாழ் அட்சக்கோடுகள்' Low Latitudes** என அழைக்கப்படுகின்றன.

19. **23 ½ ° வடக்கு முதல் 66 ½ ° வடக்கு வரையிலும், 23 ½ ° தெற்கு முதல் 66 ½ ° தெற்கு வரையிலும்** வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் **'மத்திய அட்சக் கோடுகள்' Middle Latitudes** என அழைக்கப்படுகின்றன.


20. **66 ½ ° வடக்கு முதல் 90° வடக்கு வரையிலும், 66 ½ ° தெற்கு முதல் 90° தெற்கு வரையிலும்** வரையப்பட்டுள்ள அட்சக் கோடுகள் **'உயர் அட்சக்கோடுகள்' High Latitudes** என அழைக்கப்படுகின்றன.

**21. புவி காலநிலை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது, ஏன்?**

- சூரியக்கதிர்கள் புவியின் மீது விழுகின்றபோது, கதிர்கள் அனைத்து இடங்களிலும் சமமாக விழுவதில்லை. மாறாக, நிலநடுக்கோட்டுப் பகுதியில் செங்குத்தாகவும், துருவம் நோக்கிச் செல்லச் செல்ல சாய்ந்த நிலையிலும் விழுகின்றன.

- இதனால் ,புவி முழுவதும் சீரான வெப்பநிலை காணப்படுவதில்லை.
- எனவே புவி சூரியனிடமிருந்து பெறுகின்ற வெப்பத்தின் அடிப்படையில் பல மண்டலங்களாக பிரிக்கப்படுகிறது.
- இஃது அட்சக்கோடுகளின் அடிப்படையில் பல காலநிலை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**22. மண்டலங்களின் வகைகள்**




**23. வெப்பமண்டலம்(Torrid Zone) என்றால் என்ன?**

**நிலநடுக்கோட்டிலிருந்து (0°) வடக்கில் கடகரேகை (23 ½ ° தெ) வரை** சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழுவதால் இப்பகுதி அதிக வெப்பமடைகிறது. இதனால் புவியின் மற்ற பகுதிகளைவிட இங்கு அதிக வெப்பநிலை நிலவுகிறது. எனவே, இப்பகுதி **'வெப்பமண்டலம்'** என அழைக்கப்படுகிறது.

**24. மிதவெப்ப மண்டலம் (Temperate Zone) என்றால் என்ன?**

**வட அரைக்கோளம் கடகரேகை (23 ½ ° வ) வரையிலும், தென் அரைக்கோளம் (23 ½ ° தெ) மகரரேகை முதல் (66 ½ ° தெ) அண்டார்டிக் வட்டம் வரையுள்ள பகுதிகளில்** சூரியக்கதிர்கள் சாய்வாக விழுவதால் இங்கு மிதமான வெப்பநிலை நிலவுகிறது. எனவே, இப்பகுதி **'மிதவெப்பமண்டலம்'** என அழைக்கப்படுகிறது.

**25. குளிர் மண்டலம் (Frigid Zone) என்றால் என்ன?**

**வட அரைக்கோளம் ஆர்க்டிக் வட்டம் (66 ½ ° வ) முதல் வடதுருவம் (90° வ) வரையிலும், தென் அரைக்கோளம் அண்டார்டிக் வட்டம் (66 ½ ° தெ) முதல் தென்துருவம் (90°தெ) வரையுள்ள பகுதிகளில்**

சூரியக்கதிர்கள் ஆண்டு முழுவதும் மிகவும் சாய்ந்த நிலையில் விழுவதால், இங்கு மிகமிக குறைவான வெப்பநிலை நிலவுகிறது. எனவே இப்பகுதி **“குளிர்மண்டலம்”** என அழைக்கப்படுகிறது.

26.

Lalitude - அகலாங்கு

Longitude - நெட்டாங்கு

Equator - நிலநடுவரை

Tropic of Cancer – கடகவரை

Tropic of Capricon – மகரவரை

**27. முதன்மை தீர்க்கக்கோடு (Prime Meridian) என்றால் என்ன?**

புவியின் மீது வடக்கு தெற்காக, செங்குத்தாக வரையப்பட்டுள்ள கற்பனைக் கோடுகள் **தீர்க்கக் கோடுகள்** அல்லது **மெரிடியன்கள்** எனப்படும். இக்கோடுகள் வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை அரைவட்டக் கோடுகளாக உள்ளன. **தீர்க்கக்கோடுகளில் 0° தீர்க்கக்கோடு முதன்மைத் தீர்க்கக்கோடு (Prime Meridian)** என்று அழைக்கப்படுகிறது.

**28. முதன்மை தீர்க்கக்கோடுகளின் எண்ணிக்கை:**

இங்கிருந்து கிழக்காக 180° வரை 180 கோடுகளும், மேற்காக 180° வரை 180 கோடுகளும் **மொத்தம் 360 கோடுகள்** வரையப்பட்டுள்ளன. இக்கோடுகள் அனைத்தும் துருவப்பகுதிகளில் ஒன்றிணைகின்றன.

**29. கிழக்கு மற்றும் மேற்கு தீர்க்கக்கோடுகள் என்றால் என்ன?**


0° யிலிருந்து 180° கிழக்கு வரை வரையப்பட்டுள்ள தீர்க்கக்கோடுகள் **‘கிழக்கு தீர்க்கக்கோடுகள்’ (Eastern Longitudes)** எனவும் 180° மேற்கு வரை காணப்படும் தீர்க்கக்கோடுகள் **‘மேற்கு தீர்க்கக்கோடுகள்’ (Western Longitudes)** எனவும் அழைக்கப்படுகின்றன.

**30. பெருவட்டம் எப்பொழுது உருவாகிறது?**

அரைவட்டமாக எதிரெதிரே காணப்படும் தீர்க்கக் கோடுகள் இணையும்பொழுது ஒரு ‘பெருவட்டம்’ உருவாகிறது.


**31.** தீர்க்கக்கோடுகள் புவியில் நிலநடுக்கோட்டுப்பகுதியில் 111 கி.மீ. இடைவெளியிலும், 45° அட்சப்பகுதிகளில் 79 கி.மீ. இடைவெளியிலும், துருவப்பகுதிகளில் இடைவெளியின்றியும் காணப்படுகின்றன.

**32. கிழக்கு அரைக்கோளம் (Eastern Hemisphere) என்றால் என்ன?**





0° தீர்க்கக்கோட்டிலிருந்து 180° கிழக்கு தீர்க்கக்கோடு வரை காணப்படும் புவிப்பரப்பு பகுதி **'கிழக்கு அரைக்கோளம்'** என அழைக்கப்படுகிறது.

**33. மேற்கு அரைக்கோளம் (Western Hemisphere) என்றால் என்ன?**




0° தீர்க்கக் கோட்டிலிருந்து 180° மேற்கு தீர்க்கக் கோடுவரை காணப்படும் புவிப்பரப்புப் பகுதி **'மேற்கு அரைக்கோளம்'** என அழைக்கப்படுகிறது.

**34. முக்கிய தீர்க்கக்கோடுகள் (Significant Lines of Longitude)**




**35. கிரீன்விச் தீர்க்கக்கோடு (Greenwich Meridian) என்றால் என்ன?**


- இங்கிலாந்து நாட்டின் இலண்டனுக்கு அருகிலுள்ள கிரீன்விச் என்னுமிடத்தில் **'இராயல் வானியல் ஆய்வுமையம்' (Royal Astronomical observatory)** அமைந்துள்ளது.
- இம்மையத்தின் வழியே செல்லும் தீர்க்கக் கோட்டினைத் தீர்க்கக் கோடுகளின் தொடக்கக் கோடாக வைத்துக் கொள்வதென, 1884ஆம் ஆண்டு அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடந்த பன்னாட்டு கருத்தரங்கில் அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டன.
- எனவே, இக்கோடு 0° என வரையறுக்கப்பட்டது.
- இக்கோடு **'முதன்மை தீர்க்கக்கோடு' (Prime Meridian)** எனவும், கிரீன்விச் வழியே செல்வதால் **'கிரீன்விச் தீர்க்கக்கோடு' (Greenwich Meridian)** எனவும் அழைக்கப்படுகிறது.

**36. பன்னாட்டு தேதிக்கோடு (International Date Line) என்றால் என்ன?**

தீர்க்கக் கோடுகளின் **180° தீர்க்கக்கோடானது பன்னாட்டு தேதிக்கோடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது**. இது **பசிபிக் பெருங்கடலில்** அலாஸ்காவிற்கும், இரஷ்யாவிற்கும் இடையில் பேரிக் நீர்ச்சந்தி வழியாக செல்கின்றது. ஒருவர் **மேற்கிலிருந்து கிழக்காக** இக்கோட்டுப் பகுதியைக் கடந்தால் **ஒருநாள் குறையும்.** மாறாக, **கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி** கடந்தால் **ஒருநாள் கூடும்.** இக்கோட்டினை அடிப்படையாகக்கொண்டு உலகில் அனைத்துப் பகுதிகளிலும் **தேதி** நிர்ணயிக்கப்படுகிறது.

**37. பன்னாட்டு தேதிக்கோடு வளைந்து செல்வதற்குக் காரணம் என்ன?**

இது நேராகச் சென்றால், ஒரே நாட்டிற்குள் இரண்டு தேதிகள் அமையும். இந்த குழப்பத்தினைத் தவிர்ப்பதற்காகவே இக்கோடு வளைத்து வரையப்பட்டுள்ளது.




**38. புவி வலைப்பின்னல் (Earth Grid) என்றால் என்ன?**

**புவியின் மீது கற்பனையாக வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் மற்றும் தீர்க்கக்கோடுகளின் ஒருங்கிணைந்த அமைப்பு "புவி வலைப்பின்னல் (Earth Grid or Geographic Grid)"** என அழைக்கப்படுகிறது.

**39. நேரம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

வடதுருவத்தையும், தென்துருவத்தையும் இணைத்து 360 தீர்க்கக்கோடுகள் புவியின் மீது வரையப்பட்டுள்ளன. இதில் $180^{\circ}$ கிழக்கு அரைக்கோளம் வரையில் $180^{\circ}$ மேற்கு அரைக்கோளம் வரையிலும் இக்கோடுகள் காணப்படுகின்றன. **இத்தீர்க்கக்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு நேரம் கணக்கிடப்படுகிறது.**

**40.**

- புவி தன் அச்சில் ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் கால அளவு ஒரு நாள்.
- 1 நாள் = 24 மணி நேரம்
- 1 மணி நேரம் = 60 நிமிடங்கள்
- 24 மணி நேரத்திற்கு = 24 X 60 = 1440 நிமிடங்கள்
- புவி கோளத்தின் சுற்றளவு = $360^{\circ}$
- $360^{\circ}$ = 360 தீர்க்கக்கோடுகள்
- $360^{\circ}$ = 1440 நிமிடங்கள்
- $1^{\circ}$ யின் நேரம் = $\frac{1440}{360}$= 4 நிமிடங்கள்
- $1^{\circ}$ யை கடக்க புவி எடுத்துக்கொள்ளும் கால அளவு = 4 நிமிடங்கள்
- 60 நிமிடங்கள் / 4 நிமிடங்கள் = $\frac{60}{4}$= 15
- 1 மணி நேரத்தில் $15^{\circ}$ தீர்க்கக்கோடுகளைப் புவி கடக்கிறது.

**41. தல நேரம் (Local Time) என்றால் என்ன?**

ஒவ்வொரு தீர்க்கக்கோட்டிற்கும் நேராக **சூரியன் உச்சியில் வரும் பொழுது அக்கோட்டிலுள்ள எல்லா இடங்களிலும் நேரம் நண்பகல் 12 மணி** , இதுவே தலநேரம் எனப்படும்.

**42. பன்னாட்டுத் திட்ட நேரம் என்றால் என்ன?**

$0^{\circ}$ கிரீன்விச் தீர்க்ககோட்டிற்குச் சூரியன் உச்சநிலையில் வரும் நண்பகல் 12 மணி இந்த இடத்திற்குத் தலநேரம் ஆகும். மேலும் **பன்னாட்டுத் திட்ட நேரம்** இங்கிருந்து கணக்கிடப்படுகிறது. இது **GMT (Greenwich Mean Time)** என அழைக்கப்படுகிறது.

**43. மெரிடியம் (Meridian)** என்ற சொல் **"மெரிடியானஸ்" (Meridianus)** என்ற **இலத்தீன்** மொழிச் சொல்லிலிருந்து வந்ததாகும். இதற்கு **நண்பகல் Midday (Medius – middle , dies = day)** எனப் பொருள். எனவே Meridian என்பது சூரியன் ஓர் இடத்தின் நேர் மேலே உச்சியில் உள்ளதைக் குறிக்கிறது.

**44. a.m** என்பது '**anti –meridiem**' (anti = before) **நண்பகலுக்கு முன்னதாக** எனப் பொருள்படும்.

45. **p.m** என்பது ‘**post –meridiem**’ (anti = before) **நண்பகலுக்குப் பிறகு** எனப் பொருள்படும்.

**46. திட்டநேரம் (Standard Time) என்றால் என்ன?**

ஒரு நாட்டிற்கு ஒரே மாதிரியான நேரக்கணக்கீடு இருக்கவேண்டும் என்பதற்காகக் **குறிப்பிட்ட ஒரு தீர்க்கக்கோட்டினை ஆதாரமாகக் கொண்டு** பொதுவான நேரத்தை அமைத்துக்கொள்வது **திட்டநேரம்** எனப்படும்.

**47. திட்ட தீர்க்கக்கோடு (Standard Meridian) என்றால் என்ன?**

ஒரு நாட்டின் திட்ட நேரத்தினைக் கணக்கிட அந்நாட்டின் வழியாகச் செல்லும் ஒரு குறிப்பிட்ட தீர்க்கக்கோடு பயன்படுத்தப்படுகிறது. இது **திட்ட தீர்க்கக்கோடு (Standard Meridian)** எனப்படுகிறது.

**48. திட்ட தீர்க்கக்கோடு எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?**

இது **15° அல்லது 7 ½ ° யின் மடங்குகளாக** இருக்கும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம், அந்நாட்டின் திட்ட நேரத்திற்கும், கிரீன்விச் திட்ட நேரத்திற்கும் உள்ள வேறுபாட்டினை **ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம்** என்ற கணக்கீட்டில் அறியலாம்.

**49. இந்திய திட்டநேரம் (Indian Standard Time) என்றால் என்ன?**


- இந்தியாவின் தீர்க்கக் கோடுகளின் பரவல் **68°7’ கிழக்கு முதல் 97°25’ கிழக்கு** வரை உள்ளது.
- இதனடிப்படையில், சுமார் 29 **தீர்க்கக்கோடுகள் இந்தியாவின் வழியே செல்கின்றன**.
- ஆகவே, இந்தியாவிற்கு 29 திட்டநேரங்கள் கணக்கிடுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது.
- எனவே, இந்தியாவின் மையத்தில் செல்லும் 82 ½ ° கிழக்கு தீர்க்கக்கோட்டினை ஆதாரமாகக்கொண்டு **இந்திய திட்டநேரம் IST(Indian Standard Time)** கணக்கிடப்படுகிறது.

50. இந்தியா கிடைமட்டப்பரவலில் மேற்கில் குஜராத்தில் உள்ள **கௌர்மோட்டா (Ghuar Mota)** என்ற இடத்திற்கும், **கிழக்கில்** அருணாச்சல பிரதேசத்திலுள்ள **கிபித்து (Kibithu)** என்ற இடத்திற்கும் சமதூர இடைவெளியில், உத்திரப்பிரதேச மாநிலம் **அலகாபாத்தில் உள்ள மீர்சாபூர் (Mirzabur)** என்ற இடத்தின் வழியே 82 ½ ° கிழக்கு தீர்க்கக்கோடு செல்கிறது.

**51. உலக நேர மண்டலம் (Time Zones) :**

உலகளவில் 24 நேர மண்டலங்கள் உள்ளன. சில நாடுகள் நீண்ட பரப்பளவில் காணப்படுவதால் ஒன்றுக்கும் மேற்பட்ட தல நேரங்களை கொண்டுள்ளன. உதாரணமாக **ரஷ்யா நாட்டிற்கு 7 நேர மண்டலங்கள் உள்ளன.**

**52. உலக நேர மண்டலம்**


உலக நேர மண்டலம்

# 6th Social Science Lesson 21 Notes in Tamil

## 21. பேரிடரைப் புரிந்து கொள்ளுதல்

**1. பேரிடர் என்றால் என்ன?**

ஒரு சமுதாயத்தின் செயல்பாட்டில் **மனித உயிர் மற்றும் உடைமைக்கு ஆபத்தை விளைவிக்கும்படியான தொடர்ச்சியான இடையூறுகளே பேரிடர்** எனப்படுகிறது.

**2. பேரிடரை பிரிவுகள் யாவை?**

**இயற்கை பேரிடர்** மற்றும் **மனிதனால் உண்டாகும் பேரிடர்கள்** என இருபெரும் பிரிவுகளாகப் பேரிடரைப் பிரிக்கலாம்.

**3. நிலநடுக்கம் என்றால் என்ன?**

**சிறிய கால அளவில் திடீரென்று பூமியில் ஏற்படக்கூடிய அதிர்வு நிலநடுக்கம் ஆகும்.** நிலநடுக்கமானது சில வினாடிகளில் இருந்து சில நிமிடங்கள் வரை நீடிக்கலாம்.

**4. நிலநடுக்க மையம்(focus) என்றால் என்ன?**

எந்தப் புள்ளியில் நிலநடுக்கம் தோன்றுகிறதோ இப்புள்ளி நிலநடுக்கம் மையம் எனப்படுகிறது.

**5. மையப்புள்ளி (Epicenter) என்றால் என்ன?**

நிலநடுக்க மையத்திலிருந்து செங்குத்தாகப் புவிப்பரப்பில் காணப்படும் பகுதி **மையப்புள்ளி** ஆகும்.

**6. எரிமலை என்றால் என்ன?**

புவியின் உட்பகுதியிலிருந்து சிறிய திறப்பு வழியாக, லாவா சிறிய பாறைகள் மற்றும் நீராவி போன்றவை புவியின் மேற்பரப்பிற்கு உமிழப்படுவதே **எரிமலை** எனப்படும்.

**7. சுனாமி என்றால் என்ன?**

நிலநடுக்கம், எரிமலை வெடிப்புகள் மற்றும் கடலடி நிலச்சரிவுகளால் தோற்றுவிக்கப்படும் பேரலையே **சுனாமி** ஆகும்.

**8. சூறாவளி என்றால் என்ன?**

அதிக அழுத்தம் உள்ள காற்றால் சூழப்பட்டுள்ள குறைந்த காற்றழுத்தப் பஜ்குதியில் இருந்து **சுறாவளி** உருவாகும்.

**9. வெள்ளம் என்றால் என்ன?**

மழை பெய்யும் பகுதிகளில் இயல்பான அளவையும் மீறி மிக அதிக அளவில் நீர் வழிந்தோடுவது **வெள்ளம்** எனப்படும்.

**10. நிலச்சரிவு என்றால் என்ன?**

பாறைகள், பாறைச் சிதைவுகள் மண் போன்ற பொருள்கள் சரிவை நோக்கி மொத்தமாகக் கீழே நகர்வது.

**11. பனிச்சரிவு என்றால் என்ன?**

பெரும் அளவிலான பனி மற்றும் பனிப்பாறை மிக வேகமாக சரிவை நோக்கி வருவது **பனிச்சரிவு** ஆகும்.

**12. இடி மற்றும் மின்னல் என்றால் என்ன?**

வளிமண்டல காலநிலையினால் திடீரென்று தொடர்ச்சியாக மின்சாரம் வெளிப்படும் நிகழ்வு இடி ஆகும். இதனால் திடீர் ஒளியும், அதிரும் ஒலி அலைகளும் ஏற்படுகிறது. இது **மின்னல்** என்றும் **இடி** என்றும் அழைக்கப்படுகிறது.

**13. நெருப்பு எவ்வாறு உண்டாகிறது?**

மனிதர்களின் கவனக்குறைவாலும், மின்னல், **வறட்சி மற்றும் அதிக வெப்பத்தாலும்** மேலும் பிற நடைமுறை காரணிகளாலும் மிகப் பரந்த அளவில் தீ உண்டாகிறது.

**14. கட்டடங்கள் இடிந்து போவதற்கான காரணம் என்ன?**

**மனிதனின் செயல்பாடுகளால்** கட்டடங்கள் இடிந்து விழுகின்றன.

**15. தொழிற்சாலை விபத்துக்கள் எவ்வாறு நிகழ்கின்றன?**

**மனிதத் தவறுகளால் தொழிற்சாலைகளில் ஏற்படும் வேதியியல், உயிரியியல் சார்ந்த** விபத்துகள் நிகழ்கின்றன. (எ.கா. போபால் விஷவாயு கசிவு)

**16. தீவிரவாதத்திற்கு வழிவகுக்குபவை எவை?**

**சமூக அமைதியின்மை அல்லது கொள்கை வேறுபாடுகள்** போன்றவைகள் தீவிரவாதத்திற்கு வழிவகுக்கின்றன.

**17. கூட்ட நெரிசல் என்றால் என்ன?**

**ஓரிடத்தில் மக்கள் அதிக எண்ணிக்கையில் கூடுவதால்** ஏற்படும் நெரிசலை, **கூட்ட நெரிசல்** என்கிறோம். இதனால் ஏற்படும் மிதிபடுதல் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக காயமடைதலும் மரணமும் ஏற்படுகின்றது.

**18. தென்கிழக்கு ஆசியாவில் கி.பி. (பொ.ஆ.) 2004 டிசம்பர் 26ம் நாள் ஆழிப் பேரலை எனப்படும் சுனாமி** தாக்கியது.

**19. 2004ம் ஆண்டு தாக்கிய சுனாமியின் அளவு என்ன?**

இந்தோனேசிய தீவான சுமித்தாரா தீவுக்கருகில் புவி அதிர்வு மையம் கொண்ட நிலநடுக்கம் **9.1 முதல் 9.3** ரிக்டராகப் பதிவானது. உலகம் இதுவரை கண்டறியாத சுனாமியாக இது அமைந்தது.

**20. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் இறந்தவர்கள்:**

இதனால் ஏற்பட்ட அலைகள் 30மீட்டர் உயரம் வரை எழும்பியது. **2,00,000 க்கும் மேற்பட்ட ஆசிய மக்களைக் கொன்றது. இந்தியாவில் 10,000 மக்கள்** கொல்லப்பட்டார்கள். **தமிழ்நாட்டில் மட்டும் 1,705 பேர்** இறந்து போனார்கள். அனைத்து கடற்கரையோர மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன.

**21. 2004ம் ஆண்டு சுனாமியின் மோசமான பாதிப்பு:**

நாகப்பட்டினம் மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. மீனவர்கள், சுற்றுலா பயணிகள், காலை நடைபயணம் செய்பவர்கள், மணலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், கடற்கரையில் இருந்த மக்கள் என யாவரும் இவ்வலைகளை எதிர்கொள்ள முன்தயாரிப்பு இன்றி இருந்தனர். ஆகவே அவர்கள் அனைவரும் இறந்து விட்டனர். கடற்கரையிலிருந்து **500 மீட்டர்** வரையுள்ள சொத்துக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

**22. INCOIS என்ற அமைப்பு எப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது?**

இந்திய அரசு **கி.பி. 2007ம் ஆண்டு ஐதராபாத்தில் INCOIS (Indian National Centre for Ocean Information Services)** என்ற அமைப்பானது சுனாமி முன்னறிப்பு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**23. சுனாமியின்போது செய்யக்கூடியவை:**

- உனது பள்ளி, வீடு போன்றவை சுனாமி தாக்கத்திற்கு உட்பட்ட கடற்கரை பகுதியில் உள்ளதா என்பதை அறிய வேண்டும்.
- உனது தெரு கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதை அறிய வேண்டும்.

- மீட்பு வழிகளைத் திட்டமிடுதல் மற்றும் மீட்பு முறைகளைப் பயிற்சி செய்து பார்த்தல்.
- சுனாமி பற்றி உனது குடும்பத்தினருடன் கலந்துரையாடுக முன்னெச்சரிக்கை, பாதுகாப்பு முறைகளைப் பற்றி விளக்கிக்கூறுக.
- கடல்நீர் உங்களை நொக்கி முன்னேறி வரும்போது உடனடியாகக் கடற்கரை பகுதியிலிருந்து வெளியேறி உயரமான இடத்திற்குச் செல்ல வேண்டும்.
- சுனாமியை வேடிக்கை பார்க்கவோ அல்லது உலாவுவதற்கோ கடலோரப் பகுதிகளுக்குச் செல்லக்கூடாது.
- சுனாமி பற்றிய உண்மைகளை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

**24. வெள்ளப்பெருக்கு என்றால் என்ன?**

**அளவுக்கு அதிகமாக வழிந்தோடும் நீரையே வெள்ளப்பெருக்கு** என்கிறோம். இஃது அவற்றின் கரைகளை அல்லது சிற்றாறுகளின் கரைகளைக் கடந்து வழிந்தோடுப் பள்ளமான பகுதிகளை மூழ்கடிக்கின்றது.

**25. திடீர் வெள்ளப்பெருக்கு என்றால் என்ன?**

**அதிக மழைப் பொழிவின் போது ஆறு மணி நேரத்திற்குள்** ஏற்படும் வெள்ளப்பெருக்கு திடீர் வெள்ளப்பெருக்காகும்

**26. ஆற்று வெள்ளப்பெருக்கு எதனால் ஏற்படுகிறது?**

ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் ஏற்படும் **அதிகமான மழைப் பொழிவு அல்லது பனிக்கட்டி உருகுதல் அல்லது இரண்டும் சேர்ந்த சூழல்** ஆற்று வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகிறது.

**27. கடற்கரை வெள்ளப்பெருக்கு எதனால் ஏற்படுகிறது?**

சில சமயங்களில் வெள்ளப் பெருக்கானது, **சூறாவளி, உயர் ஓதம் மற்றும் சுனாமி ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டு** கடற்கரை சமவெளிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

**28. வெள்ளப்பெருக்கிற்கான காரணங்கள் யாவை?**

- அடைமழை
- ஆற்றின் கரைகளை மீறி ஆறு பாய்ந்து செல்லுதல்
- ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் அதிகமான மழைப்பொழிவு
- போதுமான பொறியியல் தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்படாத கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் தடுப்பணைகள்.

**29. வெள்ளப்பெருக்கின் தாக்கம் என்ன?**

- கழிவுநீர் வடிகால் அமைப்பு அழிக்கப்படுதல்
- நீர் மாசுபடுதல்
- மண் அரித்தல்
- நீர் தேங்குதல்
- வேளாண்மை நிலங்கள் மற்றும் கால்நடைகள் அழிக்கப்படுதல்
- உயிர்ச் சேதங்கள் ஏற்படுதல் மற்றும் தொற்று நோய் பரவுதல்

**30. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முன் செய்ய வேண்டியவை எவை?**

- குடியிருப்புப் பகுதி வெள்ளப் பாதிப்பிற்கு உட்படும் தன்மையானதா என்பதைக் கண்டறிய வேண்டும்.
- எடுத்துச் செல்லத்தக்க வானொலிப் பெட்டி, டார்ச் மற்றும் கூடுதல் பேட்டரிகள், குடிநீர், உலர் உணவு வகைகள் , உப்பு மற்றும் சர்க்கரை போன்றவற்றை மிக்க பொருள்கள், துணிகள், தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அவசியமான பொருட்களைப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.
- குடை மற்றும் மூங்கில் கொம்பு வைத்திருக்க வேண்டும்.
- முதலுதவிப் பெட்டி, மற்றும் பொருட்களைக் கட்டுவதற்குத் திடமான கயிறு ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.
- வேளாண் நிலங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளிலிருந்து நீர் வழிந்தோடக் கால்வாய்கள் வெட்ட வேண்டும். மணல் மூட்டைகள் வைத்திருக்க வேண்டும்.

**31. வெள்ளப்பெருக்கின் போது செய்யக்கூடாதவை எவை?**

- துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை உடனே இணைத்தல் கூடாது.
- வண்டிகளை இயக்குதல்கூடாது.
- வெள்ளத்தில் நீந்த முயற்சித்தல் கூடாது.
- வெள்ளப் பெருக்கு காலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளக் கூடாது.
- வெள்ளப் பெருக்கு எச்சரிக்கையை அலட்சியப்படுத்துதல் கூடாது.

32. **வெள்ளப் பெருக்கின் போது செய்ய வேண்டியவை என்ன?**

- மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பினைத் துண்டிக்க வேண்டும்.

- கழிப்பிடத் துளை மீதும், கழிவுநீர் வெளியேறும் துளை மீதும் மணல் மூட்டைகளை வைக்க வேண்டும்.
- பரிந்துரைக்கப்பட்ட அல்லது நன்கு தெரிந்த பாதையில் உடனடியாக வெளியேற வேண்டும்.
- குடிநீரைக் காய்ச்சிக் குடித்தல் வேண்டும்.
- பினீச்சிங் பவுடர் கொண்டு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
- எரிவாயுக் கசிவு ஏதும் இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே, தீக்குச்சி மற்றும் மெழுகுவர்த்தியைப் பயன்படுத்த வேண்டும்.
- வயிற்றுப் போக்கு இருந்தால் அதிக அளவில் உணவு உண்ணக் கூடாது.

**33. சென்னை வெள்ளம் – 2015**

இந்தியாவின் பெரும் நகரங்களில் ஒன்றான சென்னை இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இஃது **ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவக்காற்றாலும், வெப்பமண்டல புயலாலும் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகின்றது**.

**34. தமிழகம் எப்போது பேரழிவைச் சந்தித்தது?**

**2015ஆம் ஆண்டு, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில்** பெய்த பெரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சென்னை மற்றும் தமிழகத்தின் சில பகுதிகள் பேரழிவைச் சந்தித்தன. இதில் **சுமார் 400க்கும் மேற்பட்டோர்** உயிரிழந்தனர் பெருமளவில் பொருட்சேதமும் ஏற்பட்டது. மனித உயிர்களைக் காப்பாற்றவும் மக்களின் துயர் துடைக்கவும் மத்திய அரசு மற்றும் தமிழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

**35. பேரிடர் இடர் வாய்ப்பு குறைப்பு: (Disaster Risk Reduction)**

பேரிடருக்கான பொதுவான காரணங்களைப் பகுத்தறிந்தும் அதற்கான திட்டமிட்ட முயற்சிகளைக் கையாண்டும் பேரிடர் இடர் வாய்ப்பைக் குறைக்க இயலும். பேரிடர் இடர் வாய்ப்பு குறைப்பு குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பயன்படும் நான்கு முக்கிய காரணிகளாவன: பரப்புரை செய்தல், பங்கேற்பு கற்றல், முறைசாராக் கல்வி மற்றும் பள்ளியில் முறைசார்ந்த தலையீடு ஆகியவையாகும்.

**36. முன்னறிவிப்பு செய்தல் மற்றும் ஆரம்ப எச்சரிக்கை(Forecasting and Early Warning)**

வானிலை முன்னறிவிப்பு, முறையான சுனாமி எச்சரிக்கை அறிவிப்பு, புயல் முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை ஆகியவை பேரிடரின் போது, இடர் வாய்ப்பு குறைப்பிற்கு மிகவும் பயனுடைய தகவல்களைத் தருகின்றன.

பள்ளி பேரிடர் மேலாண்மைக் குழு, கிராம பேரிடர் மேலாண்மைக் குழு, மாநில மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை அலுவலகங்கள் ஒன்றிணைந்து பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**37. மீட்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்களைத் தருபவை எவை?**

செய்தித்தாள்கள் , வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்கள் மேம்படுத்தப்பட்ட தகவல்களைத் தருகின்றன. மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைப் பற்றி எச்சரிக்கை தருகின்றன. இடர்கள், முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட மீட்பு நடவடிக்கைகள் குறித்து விவரங்களைத் தருகின்றன.

# 6th Social Science Lesson 22 Notes in Tamil

## 22. மக்களாட்சி

**1. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**

**அடிதழீஇ நிற்கும் உலகு**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் சிறந்த ஆட்சியாளரின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

**2. ஆதிமனிதன் எப்படிப்பட்ட சமூக அமைப்பில் வாழ்ந்தான்?**

தொடக்கத்தில் அவர்கள் வேட்டைச் சமூகமாகவும் உணவு சேகரிப்போராகவும் வாழ்ந்தனர். பிறகு ஆற்றோரம் குடியேறி விவசாயம் செய்யத்தொடங்கினர்.

**3. "மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி" – ஆப்ரகாம் லிங்கன்**

**4. மக்களாட்சி என்றால் என்ன?**

ஒரு நாட்டின் குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், அதன்மூலம் அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையும்தான் **மக்களாட்சி** என்கிறோம்.


**5. மக்களாட்சியின் பிறப்பிடம் எது?**

மக்களாட்சியின் பிறப்பிடம் **கிரேக்கம்** ஆகும்.

**6. மக்களாட்சியின் வகைகள் யாவை?**

உலகெங்கும் பல்வேறு முறைகளில் மக்களாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் **நேரடி மக்களாட்சி (Direct Democracy), பிரதிநிதித்துவ மக்களாட்சி (Representative Democracy)** ஆகிய இரண்டும் பிரபலமான முறைகள்.

winmeen.com





**7. நேரடி மக்களாட்சி என்றால் என்ன?**

நேரடி மக்களாட்சி முறையில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றனர். அனைத்து சட்டத்திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்வர். நேரடி மக்களாட்சியை வெற்றிகரமான செயல்படுத்தும் வரலாற்றை **சுவிட்சர்லாந்து** பெற்றுள்ளது.

**8. பிரதிநிதித்துவ மக்களாட்சி என்றால் என்ன?**

**ஏனைய உறுப்பினர்கள் சார்பாக ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கும்** அதிகாரம் கிடைக்கும். இதையே பிரதிநிதித்துவ மக்களாட்சி என்று கூறுகிறோம்.




**9. ஜனநாயக ரீதியாக முடிவெடுப்பது (Democratic Decision making) என்றால் என்ன?**

மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம்தான் இருக்கும். சட்டதிட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டு இயங்கும் அக்குழு, தொடர்புடையோர் அனைவரையும் உள்ளடக்கிய வெளிப்படையான உரையாடல்களை முன்னெடுக்கும். பின்னர் அவர்களிடையே ஒருமித்த கருத்தொருமை ஏற்பட்டதும் இறுதி முடிவினை எடுக்கும். இதைத்தான் ஜனநாயக ரீதியாக முடிவெடுத்தல் என்கிறோம்.

**10. உலக மக்களாட்சி தினம் எப்பொழுது?**

**2007 ல்** ஐ.நா.சபை **செப்டம்பர் 15ஆம்** நாளை **உலக மக்களாட்சி தினமாக** அறிவித்துள்ளது.

**11. அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் எவை?**

இந்தியர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதிபெறும் உரிமையை உறுதி செய்துள்ளது.

**12. வேறு எவையெல்லாம் அதில் இடம்பெற்றுள்ளன?**

- அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுத்துள்ளதோடு, அரசு நிறுவனங்களின் வடிவமைப்பு, அவை பின்பற்றவேண்டிய வழிமுறைகள், அவற்றின் அதிகாரம் மற்றும் கடமைகளையும் விளக்குகிறது.
- மேலும் குடிமக்களுக்கான உரிமைகள், கடமைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் நிர்ணயம் செய்துள்ளது.

இப்படியாக அது ஒரு சிறப்பான கட்டமைப்பை நமக்கு வழங்கியுள்ளது.

**13. இந்திய அரசமைப்புச்சட்டம் இவ்வளவு விளக்கமானதா?**

இந்திய அரசமைப்புச் சட்டம் தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப்பெரியது. இதை **டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின்** தலைமையிலான அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கியது. அதனால்தான் அவர் **நமது அரசமைப்புச்சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக்** கருதப்படுகிறார்.

**14. மக்களாட்சியின் நோக்கம் என்ன?**

- மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சியமைப்பு மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.
- மக்களாட்சி அமைப்பில் அதிகாரம் மக்களிடம் இருக்கும், அதற்கு **அவர்கள் முடிவெடுக்கும் உரிமையைப் பெற வேண்டியது அவசியமாகிறது.**
- ஒவ்வொரு தனிநபரும் முடிவெடுக்கும் வழிமுறைகளில் நேரடியாகப் பங்கேற்க இயலாது என்பதால் முடிவெடுக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- மக்களாட்சி அரசில், **18 வயது நிறைவுற்ற அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை** வழங்கப்பட்டுள்ளது.
- அதேபோல் **தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் மக்கள் நலனைக் காப்பதைத் தனது கடமையாகக் கொள்ள வேண்டும்.**

**15. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு எது?**

நியூஸிலாந்து (New Zealand) (1893)

**16.**

- ஐக்கிய பேரரசில் (United Kingdom) **1918** ஆம் ஆண்டும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (United states of America) **1920-** ஆம் ஆண்டும்தான் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது.
- அதே காலகட்டத்தில் இந்தியாவில் பணக்காரர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை வழங்கப்பட்டிருந்தது.
- மகாத்மா காந்தி உட்படப் பல தலைவர்கள் அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இன்று இந்தியாவில் 18 வயது நிறைவடைந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது. (உலகளாவிய வயதுவந்தோர் உரிமைகளின்படி)

**17. இந்தியக் குடிமக்களில் 79% பேர்** தங்களது நாட்டின் மக்களாட்சியின்மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

**18. உலகின் பழமையான மக்களாட்சி நாடுகள்**

| வ.எண் | மக்களாட்சி நாடு | காலம் | அமைவிடம் | சிறப்புக் கூறுகள் |
|---|---|---|---|---|
| 1 | கிரேக்கம் | கி.மு. (பொ.ஆ.மு) 5ஆம் நூற்றாண்டு | கிரீஸ் | அரசியல் தத்துவத்தின் அடித்தளம் |
| 2 | ரோமானியப் பேரரசு | கி.மு. (பொ.ஆ.மு) 300 -50 | தீபகற்ப இத்தாலி, ரோம் | நாகரிக வளர்ச்சியின் உலகளாவிய விரிவாக்கம் |
| 3 | சான் மரினோஸ் | கி.பி. (பொ.ஆ) 301 | இத்தாலி | பழமையான அரசியலமைப்பு தற்போதும் நடைமுறையில் உள்ளது |
| 4 | ஐஸ்லாந்து | கி.பி. (பொ.ஆ) 930 | திங்வேளிர் | உலகிலேயே பழமையான மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டுவரும் நாடாளுமன்றத்தைக் கொண்டது |
| 5 | மனிதத் தீவு (Isle of Man) | கி.பி, (பொ.ஆ) 927 | இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் இடையே உள்ளது | மன்னராட்சியின் கீழ் சுயாட்சி |
| 6 | இங்கிலாந்து | கி.பி. (பொ.ஆ) 13ஆம் நூற்றாண்டு | இங்கிலாந்து | 1215இல் எழுதப்பட்ட மகாசாசனம் (மாக்னா கார்டா) |
| 7 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | கிபி. (பொ.ஆ) 1789. | அமெரிக்க ஐக்கிய நாடுக | மிகப் பழமையான மக்களாட்சிகளுள் ஒன்று |

winmeen.com

# 6th Social Science Lesson 23 Notes in Tamil

## 23. உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும்

**1. இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பு எது?**

**1688** இல் உருவாக்கப்பட்ட **சென்னை மாநகராட்சி**தான் இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பாகும்.

**2. தமிழ்நாட்டில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி எது?**

தமிழ்நாட்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி **வாலாஜாபேட்டை** நகராட்சி ஆகும் (**வேலூம் மாவட்டம்).**

**3.** நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் **காஞ்சிபுரம் மாவட்டம்.**

**4. உள்ளாட்சி அமைப்புகள் என்றால் என்ன?**

நகர்ப்புறத்தை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்றும் கிராமப்புறத்தை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்றும் பிரிக்கலாம். இவை உள்ளாட்சி அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

**5. நகராட்சி என்றால் என்ன?**

தமிழ்நாட்டில் மாநகராட்சிக்கு அடுத்த நிலையில் **ஒர் லட்சத்துக்கும்** அதிகமான மக்கள் தொகையுடன், வருவாய் அதிகம் இருக்கும் ஊர்களை **ஊராட்சி** என்று பிரித்துள்ளனர்.

**6. பேரூராட்சி என்றால் என்ன?**

நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடைப்பட்ட ஊர். **சுமார் 10 ஆயிரம் பேர்** வாழக்கூடிய ஊர் பேரூராட்சி எனப்படுகிறது.

**7. இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி உள்ளாட்சி அமைப்பு எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது?**

இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி உள்ளாட்சி அமைப்பு **தமிழ்நாட்டில்** தான் அறிமுகப்படுத்தப்பட்டது.

8. **நகராட்சி அலுவலர்கள்:**

மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி (இ.ஆ.ப.) அதிகாரி ஒருவர் ஆணையராக இருப்பார். நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் நகராட்சி ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள். பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் செயல் அலுவலர் (EO) ஆவார்.

**9. கிராம ஊராட்சி என்றால் என்ன?**

கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு கிராம ஊராட்சி ஆகும். கிராம ஊராட்சி மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகிறது. கிராமங்கள், மக்கள் தொகைக்கு ஏற்ப பல பகுதிகளாகப் (Ward) பிரிக்கப்படுகின்றன. இதன் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**10. உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் யார்?**

- ஊராட்சி மன்றத் தலைவர்
- பகுதி உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்)
- மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்

**11. ஊராட்சி ஒன்றியம் என்றால் என்ன?**

- பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- **வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO)** இதன் நிர்வாக அலுவர் ஆவார். ஊராட்சி ஒன்றிய அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**12. விழுப்புரம்** மாவட்டத்தில் தான் அதிகப்படியாக **22 ஊராட்சி ஒன்றியங்கள்** உள்ளன.

13. **நீலகிரி மற்றும் பெரம்பலூர்** மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் **4 ஊராட்சி ஒன்றியங்கள்** தான் உள்ளன.

14. **மாவட்ட ஊராட்சி என்றால் என்ன?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. **50,000 மக்கள் தொகை** என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் (District Panchayat ward) பிரிக்கப்படுகின்றது. பகுதி உறுப்பினர்களைக் கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் செய்கின்றனர்.

**15. பகுதிகள் (wards) என்றால் என்ன?**

உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. **தொகுதிகள், பகுதிகள் (wards) என அழைக்கப்படுகின்றன.** பகுதி உறுப்பினர்களை மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.

**16. மேயர் என்பவர் யார்?**

மாநகராட்சித் தலைவரும்(மேயர்), நகராட்சித் தலைவரும் நேரடி தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநகராட்சித் துணைத்தலைவரும், நகராட்சித் துணைத் தலைவரும் அந்தந்தப் பகுதி (ward) உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்.

**17. உள்ளாட்சி அமைப்புகளின் நன்மைகள் என்ன?**

நிறைய நன்மைகள் உள்ளன. பொதுமக்களுக்குத் தேவையான பணிகளை **அவசியப்பணிகள், விருப்பப்பணிகள்** எனப் பிரிக்கலாம். இவை உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படுகின்றன.

18. **கிராம ஊராட்சியின் அவசியப் பணிகள் யாவை?**

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்கு அமைத்தல்
- தெருக்களைத் தூய்மைப்படுத்துதல்
- கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்
- ஊர்ச்சாலைகள் அமைத்தல்
- மத்திய, மாநில அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

**19. கிராம ஊராட்சியின் விருப்பப் பணிகள் என்ன?**

- பூங்கா அமைத்தல்
- நூலகம் அமைத்தல்
- விளையாட்டு மைதானம் அமைத்தல் இன்னும்பிற

**20. மநகராட்சியின் பணிகள் யாவை?**

- குடிநீர் வசதி

- தெருவிளக்கு அமைத்தல்
- தூய்மைப் பணி
- மருத்துவச் சேவை
- சாலைகள் அமைத்தல்
- மேம்பாலங்கள் அமைத்தல்
- சந்தைகளுக்கான இடவசதி
- கழிவுநீர்க்கால்வாய்
- திடக்கழிவு மேலாண்மை
- மாநகராட்சிப் பள்ளிகள்
- பூங்காக்கள்
- விளையாட்டு மைதானங்கள்
- பிறப்பு, இறப்புப் பதிவு, இன்னும்பிற.,

21. **இந்தப் பணிகளைச் செய்பவர்கள் யார்?**

**மன்றக்கூட்டங்களில் போடப்படும் தீர்மானங்களின்படி ஆணையாளர், அல்லது அதிகாரி அந்தப் பணிகளைத் தனக்குக் கீழுள்ள அலுவலர் மற்றும் ஊழியர்களைக் கொண்டு செயல்படுத்துகிறார்**. இப்படி அப்பணிகள் சிறப்பாக நடைபெற பல அடுக்குகளிலும் பணியாற்ற ஊழியர்கள் உண்டு.

**22. இந்தப் பணிகளைச் செய்ய நிதியை யார் அளிப்பார்கள்?**

நேரடியாக அரசும் அளிக்கும். அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளும் வரிகளாக வசூல் செய்து கொள்வார்கள்.

**23. கிராம ஊராட்சியின் வருவாய் என்ன?**

- வீட்டுவரி
- தொழில்வரி
- கடைகள் மீதான வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு
- சொத்துரிமை மாற்றம் – குறிப்பிட்ட பங்கு
- மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு. இன்னும்பிற.,

**24. மாநகராட்சியின் வருவாய் என்ன?**

- வீட்டுவரி

- குடிநீர்வரி
- கடைகள் மீதான வரி
- தொழில் வரி
- பொழுதுபோக்கு வரி
- வாகனக் காட்டணம்
- மத்திய, மாநில அரசுகளின் நிதிஒதுக்கீடு. இன்னும்பிற.,

**25. கிராமசபைக்கூட்டம் எவ்வாறு நடக்கும்?**

ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம சபை அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நிரந்தர அமைப்பு. கிராம சபைக் கூட்டம் சிறிய கிராமங்களிலும் நடைபெறும். **கிராம சபையே மக்களாட்சி அமைப்பின் ஆணிவேராகும்**

**26. கிராம சபைக்கூட்டத்தில் கலந்துகொள்பவர்கள் யார்?**

இதில் 18 வயசு நிறைவடைந்து, அதே ஊராட்சி வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். இக்கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறை கூடும். மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஆசிரியர் போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள். அப்போது மக்கள் தங்கள் தேவைகளையும் குறைகளையும் நேரடியாகச் சொல்லலாம்.

**27. கிராமசபைக் கூட்டம் ஆண்டுக்கு எத்தனை முறை கூடும்?**

கிராம சபைக் கூட்டம் ஆண்டுக்கு **நான்கு முறை** கூடும்.

**28. கிராமசபைக் கூட்டம் எந்தெந்த நாள்களில் கூடும்?**

இக்கூட்டம் **ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2** ஆகிய நாள்களில் கூடும்.

29. **சிறப்பு கிராமசபைக் கூட்டம் என்றால் என்ன?**

இந்த நான்கு நாள்களைத் தவிர தேவைக்கேற்பவும் அவசர காலங்களிலும் கிராம சபை கூடும். இவை சிறப்பு கிராம சபைக்கூட்டம் எனப்படும்.

30. **உள்ளாட்சி அமைப்பு பற்றிய மகாத்மா காந்தியின் சிந்தனை என்ன?**

உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்குவது என்ற நோக்கத்திற்காகத் தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்படியான ஓர் அமைப்பு வேண்டும் என்று இதற்கு இப்பெயர் வைத்தவர் மகாத்மா காந்தி.

31. **தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது?**

தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி கொண்டுவரப்பட்டது

**32. தேசிய ஊராட்சி தினம் ஏப்ரல் 24.**

33. **பஞ்சாயத்து ராஜ்-சிறப்பம்சங்கள் யாவை?**

- கிராம சபை அமைத்தல்
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு
- இடஒதுக்கீடு
- தேர்தல்
- பதவிக்காலம்
- நிதிக்குழு
- கணக்கு மற்றும் தணிக்கை இன்னும் பிற

**34. உள்ளாட்சியில் பெண்களின் பங்கு என்ன?**

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் **33%** இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. **2011** இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் **38%** இடங்களில் வெற்றி பெற்றனர் என்பது சிறப்பு. **2016 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இடஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.**

**35. உள்ளாட்சித்தேர்தல் :**

உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் **5 ஆண்டுகள்** இதற்கான தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. மாநில தேர்தல் ஆணையம் இதற்கான தேர்தலை நடத்துகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது. **தமிழகத்தின் தேர்தல் ஆணையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது.**

**36. தமிழ்நாட்டிலுள்ள**

கிராம ஊராட்சிகள் - 12,620

ஊராட்சி ஒன்றியங்கள் - 388

மாவட்ட ஊராட்சிகள் - 31

| | |
|---|---|
| பேரூராட்சிகள் | - 561 |
| நகராட்சிகள் | - 145 |
| மாநகராட்சிகள் | - 15 |

37. **மாநகராட்சிகளின் எண்ணிக்கை :**

| | | |
|---|---|---|
| 1. சென்னை | 2. மதுரை | 3. கோயம்புத்தூர் |
| 4. திருச்சி | 5. சேலம் | 6. திருநெல்வேலி |
| 7. ஈரோடு | 8. தூத்துக்குடி | 9. திருப்பூர் |
| 10. வேலூர் | 11. திண்டுக்கல் | 12. தஞ்சாவூர் |
| 13. நாகர்கோவில் | 14. ஒசூர் | 15. ஆவடி |

# 6th Social Science Lesson 24 Notes in Tamil

## 24. சாலைப் பாதுகாப்பு

**1. சாலைவிதிகள் என்றால் என்ன?**

**வாகனங்களை எப்படி, எப்போது, ஏன் இயக்க அனுமதிக்கப்படுகிறீர்கள்** என்பதைக் கட்டுப்படுத்தும் சட்டங்களே சாலைவிதிகள் ஆகும்.

**2. சாலைப் பாதுகாப்புக் கல்வி:**

சாலைப் பாதுகாப்புக் கல்வி குழந்தைகள் மற்றும் இளையோரின் அணுகுமுறைகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகளை உருவாக்குவதில் ஒரு முக்கிய பங்காற்றுகின்றது. மேலும், அவர்களை ஒரு பொறுப்புமிக்க ஓட்டுநராகவும், பயணியாகவும் பாதசாரிகளாகவும் மிதிவண்டி ஓட்டுபவராகவும் உருவாக்குவதை உறுதி செய்கிறது.

**3. சாலைப் பாதுகாப்பு குறித்து குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவது முக்கியமானதா?**

சாலைப் பாதுகாப்பு குறித்து குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவது முக்கியமானதாகும். குழந்தைகளுக்கான சாலை பாதுகாப்புக் கல்வியினை அவர்கள் வீட்டை விட்டு வெளியே தனியாகச் செல்லத் துவங்கும் வயதிலேயே ஆரம்பிப்பது சிறந்ததாகும்.

**4. மூன்று வகையான போக்குவரத்து சமிக்ஞைகள் யாவை?**

**கட்டாயக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள் மற்றும் அறிவுறுத்தும் குறியீடுகள்** என்று மூன்று வகையான போக்குவரத்து சமிக்ஞைகள் உள்ளன.

**5. கட்டாயக் குறியீடுகள் என்றால் என்ன?**

நாம் சாலைகளில் செய்ய வேண்டிய மற்றும் செய்யக்கூடாதவைகள் பற்றிய விதிகளாகும். இவை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை. இச்சமிக்ஞைகள் வட்ட வடிவில் காணப்படுகின்றன.


செல்லக்கூடாது


ஒருவழிப்பாதை


வலப் பக்கம் திரும்பக் கூடாது


இடப் பக்கம் திரும்பக் கூடாது.


U திருப்பம் கிடையாது

winmeen.com

**6. எச்சரிக்கைக் குறியீடுகள் என்றால் என்ன?**

சாலைகளின் சூழ்நிலைகள் குறித்த எச்சரிக்கைகளைச் சாலை பயன்பாட்டாளர்களுக்கு அறிவிப்பவை எச்சரிக்கைக் குறியீடுகள் ஆகும். இவை பொதுவாக முக்கோண வடிவத்தில் காணப்படுகின்றன.



குறுகிய பாலம்



குறுக்கு சாலை



பள்ளி



இடப் பக்க வளைவு



ஆட்கள் வேலை செய்கிறார்கள்

**7. அறிவுறுத்தும் குறியீடுகள் என்றால் என்ன?**

திசைகள் மற்றும் சேர வேண்டிய இடங்கள் குறித்த தகவல்களை அறிவுறுத்துவதாக அமைகின்றன. இவை பொதுவாக செவ்வக வடிவத்தில் காணப்படுகின்றன.




எரிபொருள் நிலையம்




மருத்துவமனை



உணவருந்தும் இடம்




வாகன நிறுத்தம்



தொடர்வண்டி நிலையம்

**8. சிவப்பு நிறம் எவற்றைக் குறிக்கின்றன?**

நிறுத்தக் கோட்டிற்கு முன் காத்திருக்கவும்

- நிறுத்தக்கோடு இல்லாத இடங்களில் சாலை போக்குவரத்து விளக்கு தெளிவாக தெரியும்படி சாலையில் நிற்கவும்.
- பச்சை நிற விளக்கு ஒளிரும் வரை காத்திருக்கவும்.
- சிவப்பு விளக்கு ஒளிரும் நேரத்தில் தடைசெய்யும் குறியீடுகள் இல்லாத போது இடப் பக்கம் திரும்பிச் செல்லலாம். ஆனால் பாதசாரிகளுக்கும், பிற போக்குவரத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

**9. மஞ்சள் நிறம் எவற்றைக் குறிக்கின்றன?**

- நிறுத்தக் கோட்டைத் தாண்டிய பிறகு நிறுத்துவதால் விபத்து ஏற்படும் என்று எண்ணினால் மஞ்சள் விளக்கு ஒளிரும்போது தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ளலாம். எனினும் அதிக கவனத்துடன் செயல்படவும்.

**10. பச்சை நிறம் எவற்றைக் குறிக்கின்றன?**

- பாதை தடையற்று இருப்பதை உறுதி செய்து கொண்டு பயணத்தைத் தொடரலாம்.
- தடை செய்யும் குறியீடுகள் இல்லாதபோது நீங்கள் வலப் பக்கமாகவோ அல்லது இடப்பக்கமாகவோ திரும்பிச் செல்லலாம். ஆனாலும் மிகுந்த கவனத்துடன் இருந்து, பாதையைக் கடக்கும் பாதசாரிகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.
- பச்சை நிறா அம்புக் குறி அது காட்டும் திசை நோக்கிப் பயணிக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

**11. பாதசாரிகள் கடக்கும் இடம்**

பாதசாரிகளுக்கு என்று சாலையில் கடக்கும் பகுதி **1934** ஆம் ஆண்டு பிரிட்டனில் அமைக்கப்பட்டது. சாலைகள் புள்ளிகளால் ஆன கோடுகளால் குறிக்கப்பட்டன. நடைபாதைகளில் **பெலிஷா பேக்கன்** என்று அழைக்கப்பட்ட ஒளிக்கம்பங்கள் அமைக்கப்பட்டன. இது பிரிட்டனின் போக்குவரத்துத்துறை அமைச்சர் **எல்.ஹோர் பெலிஷா** அவர்களின் பெயரில் அமைக்கப்பட்டது.

**12. ஜீப்ரா கிராசிங் என்றால் என்ன?**

ஜீப்ரா கிராசிங் எனப்படும் **கருப்பு வெள்ளைகளால் ஆன பட்டைகள், கருப்பு வெள்ளைக் கோடுகளாக மாற்றமடைந்தன**. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஜீப்ரா கிராசிங் உருவாக்கப்பட்டன.

**13. சாலைகளின் மொழி என்றால் என்ன?**

**சாலை குறியீடுகள் அடையாளங்கள், போக்குவரத்து சமிக்ஞைகள் மற்றும் பிற போக்குவரத்து சாதனங்கள்** ஆகியவை சாலை பயன்பாட்டாளர்களுக்கு வழிகாட்டியாய் விளங்குவதால் இவை சாலைகளின் மொழியாகக் கருதப்படுகின்றன.

**14. சாலைக் குறியீடுகள் எதற்கு உதவுகின்றன?**

சாலை குறியீடுகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் ஆபத்துகள் குறித்து எச்சரிக்கவும் சாலை பயன்பாட்டாளர்களுக்கு வழிகாட்டியாய் விளங்குகின்றன.

**15. பாதசாரிகள் செய்யவேண்டியன யாவை?**

- நடைபாதை இருக்கும் இடங்களில் சாலைகளின் இரு பக்கங்ஆலிலும் நடக்கலாம்.

- நடைபாதைகள் இல்லாத சாலைகளில் எதிர் வரும் வாகனங்களை நோக்கி **வலப் பக்க ஓரத்தில்** நடக்க வேண்டும்.
- ஜீப்ரா கிராஸிங்குகள், பாதசாரிகளுக்கான மேம்பாலங்கள் மற்றும் சுரங்க வழி பாதைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- இவ்வசதிகள் இல்லாத பகுதிகளில் சாலையைக் கடக்கும்போது மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.
- 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பெரியவர்கள் துணையோடு சாலைகளைக் கடக்க வேண்டும்.
- பாதுகாப்பான தூரத்தில் வாகனங்கள் வரும்போது சாலையைக் கடக்க வேண்டும்.
- இரவு நேரங்களில் வெளிர் நிற ஆடைகளை அணிய வேண்டும்.

**16. பாதசாரிகள் செய்யக்கூடாதவை எவை?**

- சாலைகளை ஓடி கடக்கக் கூடாது.
- நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு முன்புறத்திலோ அல்லது வாகனங்களுக்கு இடையிலோ சாலையைக் கடக்கக் கூடாது.
- வாகன ஓட்டுநருக்குத் தெளிவாக தெரியாத மூலைகளிலிருந்தும் வளைவுகளில் இருந்தும் சாலையைக் கடக்கக் கூடாது.
- சாலை தடுப்புகளைத் தாண்டிக் குதித்துச் சாலையைக் கடக்கக் கூடாது.

**17. பாதுகாப்பான மிதிவண்டி பயணம்**

பெரும்பாலும் பள்ளிக்குழந்தைகள் மிதிவண்டிகளில் பள்ளிக்குச் செல்கின்றனர். எனவே சாலை விதிகள் மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியம். மேலும் அவர்களது **மிதிவண்டிகளைச் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும்.**

**18. பாதுகாப்பான மிதிவண்டிப் பயணத்தின்பொழுது செய்ய வேண்டியவை என்ன?**

- மிதிவண்டிகளில் தரமான உதிரிபாகங்களைப் பொருத்துதல் வேண்டும். உதாரணமாக மணி, பிரேக் கட்டைகள், கண்ணாடி, முன் மற்றும் பின் மட்கார்டுகள் வெள்ளை நிறம் பூசப்பட்டு இருக்க வேண்டும். பிரதிபலிக்கும் பட்டைகள் மிதிவண்டியின் முன்புறமும் பின்புறமும் ஒட்ட வேண்டும்.
- சாலையின் இடப் பக்க ஓரத்தில் செல்லவும் அல்லது சேவை சாலையைப் பயன்படுத்தவும்.
- போக்குவரத்து நெரிசல் உள்ள சாலைகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- வேகமாக இயங்கும் மோட்டார் வாகனங்களைக் கருத்தில் கொண்டு பயணிக்க வேண்டும்.
- மிதிவண்டியை நிறுத்துவதற்கு முன்பாகவும் திரும்புவதற்கு முன்பாகவும் சரியான சமிக்ஞைகள் வழங்குதல் வேண்டும்.

**19. பாதுகாப்பான மிதிவண்டிப் பயணத்தின்பொழுது செய்யக்கூடாதவை என்ன?**

- மிதிவண்டிகளைக் கொண்டு எவ்விதமான சாகசச் செயல்களிலும் ஈடுபட வேண்டாம்.
- மிக அதிகமான சுமைகளை ஏற்ற வேண்டாம். மிதிவண்டியில் ஒருவர் மட்டுமே பயணிக்க வேண்டும்.
- வேகமாகச் செல்லும் மற்றொரு வாகனத்தைப் பிடித்துக்கொண்டு மிதிவண்டியில் பயணிக்க வேண்டாம்.

**20. பள்ளி வாகனங்களில் பயணிக்கும்போது செய்ய வேண்டியவை என்ன?**

- காலையில் முன்கூட்டியே எழுந்து இல்லத்திலிருந்து முன்கூட்டியே கிளம்பிவிட வேண்டும்.
- பயணிக்க வேண்டிய பேருந்தில் நிர்ணயிக்கப்பட்ட இடத்திலிருந்து வரிசையில் நின்று ஏற வேண்டும்.
- பேருந்தில் ஏறிய பிறகு சரியான முறையில் நடந்து கொள்ளுதல் வேண்டும்.
- பேருந்தில் இருக்கும் பிடிமானங்களைப் பிடித்துக்கொள்ள வேண்டும்.
- நிர்ணயிக்கப்பட்ட நிறுத்தத்தில் மட்டுமே இறங்க வேண்டும்.
- பேருந்து முழுவதும் நின்றபிறகு மட்டுமே இறங்க வேண்டும்.
- சாலை போக்குவரத்து விதிகளை வாகன ஓட்டுனர் கடைப்பிடிக்கவில்லை என்றால் அதனைப் பள்ளி நிர்வாகத்தினர்/ பெற்றோர் மற்றும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

**21. பள்ளி வாகனங்களில் பயணிக்கும்போது செய்யக்கூடாதவை என்னென்ன?**

- பேருந்தில் ஓடி ஏறக்கூடாது.
- பேருந்து படிகளில் நின்று பயணம் செய்யக் கூடாது.
- ஓட்டுநரை திசை திருப்பும் விதமான ஒலிகளை எழுப்புதல் கூடாது.
- வாகனத்திற்கு வெளியே தலை கை கால்களை நீட்டக்கூடாது.
- ஓடும் பேருந்தில் ஏறவோ இறங்கவோ கூடாது.

**22. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணிப்பவர் / உடன் பயணிப்பவர் எவ்வாறு பயணம் செய்ய வேண்டும்?**

- எப்போதும் தலைக்கவசம், இருக்கை பெல்ட் அணிய வேண்டும்.
- வாகன ஓட்டுநருடன் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.
- 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளே வாகனத்தின் பின் இருக்கைகளில் அமர்தல் வேண்டும்.

**23. பாதுகாப்பான இடங்களில் விளையாடுதல்**

- சாலைகளில் விளையாடக் கூடாது.
- காலியான இடங்களை அல்லது விளையாட்டு திடல்களை விளையாடுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.
- பள்ளி வளாகம், குடியிருப்பு பகுதிகள் அல்லது வீட்டின் அருகில் நிறுத்தப்பட்டுள்ளா வாகனத்தைச் சுற்றி விளையாடக்கூடாது.

winmeen.com